
January 2018
தமிழ்
8-ம் ஆண்டில்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
பொங்கல் மலர்


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा


தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

January 2018

சுவடி—7
ஓலை—11

உள்ளே...




## வணக்கம் பல

‘உலகின் பெரும்பான்மை மக்களுக்கு வழிகாட்டுதலும், புதிய பாதை வகுத்தலும் செய்பவர்கள் சிறுபான்மையினரே!’ என்றார் பேரறிஞர். பெரும்பான்மை என்பதும், சிறுபான்மை என்பதும் இன, மத, சாதிப் பிரிவுகளைக் குறிப்பதல்ல; மக்களின் எண்ணிக்கைத் தொகுதியை மட்டுமே குறிப்பதாகும்.

மாபெரும் மக்கள் கூட்டத்தை, தலைவன் வழிநடத்துதலைப் போன்று, ஒவ்வொரு நாட்டின் பெரும்பான்மை மக்களையும் ஒரு சிறுபான்மைக் கூட்டம் ஏதோ ஒருவகையில் வழிநடத்துவதை உலகெங்கும் காணலாம்!

லைபீரியா நாட்டில் ஒரு விளையாட்டு வீரர், அதிபர் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். அவர் ஒரு மாற்று அரசியலை முன்னெடுப்பார் என்ற அந்நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. பல்லாண்டு காலமாகவே அரசியல்வாதிகள் மட்டுமே நாடாள்வதும் சட்டங்கள் இயற்றுவதும் என்றான காட்சியைத்தான் உலக அரசியல் களங்கள் காட்டுகின்றன. எங்காவது, என்றாவது அரிதாய் மாற்றுக் களங்களில் இருந்து நம்பிக்கை நட்சத்திரங்கள் தோன்றுவதையும் நாம் காண முடிகிறது. ஆடுகளத்திலிருந்து வந்த ஒருவர் தேர்தல் களத்தில் வென்று அதிபராய் அமர்கிறார். புதிய ஆண்டு பிறக்கின்ற சமயத்தில் அந்நாட்டில் நிகழ்ந்திருக்கும் இந்த மாற்றம் நல்ல மாற்றமாக அமையட்டும்!

புத்தாண்டு என்றாலே உலகம் முழுதுமுள்ள மக்கள் கோலாகலம் பூண்டு, புத்தாண்டை வரவேற்கத் தயாராகி விடுவர்! பிறக்கின்ற இந்தப் புத்தாண்டு, உலக மக்கள் வாழ்வில் ஒளி தரட்டும்! நம்பிக்கையைத் தரட்டும்! நாமும் இவ்விதமான நம்பிக்கையுடன்தான் புதுவரவை எதிர்நோக்குகின்றோம். ‘நம்பிக்கையே வாழ்க்கை! நம்பிக்கையின்மையே மரணம்!’ என்ற பொன்மொழியின்படிதான் நாம் புத்தாண்டை எதிர்கொள்கின்றோம். இந்தப் புத்தாண்டும் அந்த நம்பிக்கையின்படி அனைவருக்கும் புதிய வாழ்வையும் வசந்தத்தையும் தரட்டும்!

இம்மாத இதழ், அருமைமிகு படைப்புக்களுடன் மலர்ந்துள்ளது. வரவேற்று மகிழுங்கள்! உலக மக்கள் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும், தமிழ் மக்கள் அனைவருக்கும் உழவர், தமிழர் திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கிறோம்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar
Vijayarajah

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

அரசியல் விளையாட்டு

அழுகுணி ஆட்டம்

அருகும் ஆளுமை

அமெரிக்கப் பெரியார்

கவிதைகள்

சிறுகதைகள்

தமிழே தமிழே



# உள்ளே

ஜாதி வெறியின் வன் கொடுமை

அரசியல் விளையாட்டா மனித உரிமை !

நீர், நிலம், நினைவு

சிவகாமியின் சபதம்

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

# அரசியல்

## லைபீரியாவின் புதிய அதிபராகும் முன்னாள் கால்பந்தாட்ட வீரர்

லைபீரியா, முழு ஆபிரிக்கக் கண்டத்திலேயே முதன்முதலாக (1847) சுதந்திரமடைந்த நாடு. இதே காலகட்டத்தில் பிற ஆபிரிக்க நாடுகள் ஐரோப்பியக் காலனிகளாகிக் கொண்டிருந்தன. யூதர்கள் இஸ்ரேலுக்குத் திரும்பியதுபோல், “தாயகம்” திரும்பிய அமெரிக்க—ஆபிரிக்க அடிமைகள் குடியேற்றப்பட்ட நாடுதான் லைபீரியா. விடுதலை செய்யப்பட்ட “அமெரிக்க அடிமைகளின் தாயகம்” என்ற பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்ட லைபீரியாவை, இன்னொரு கோணத்திலிருந்து பார்த்தால் அதுதான் ஆபிரிக்காவில் உருவான முதலாவது அமெரிக்கக் காலனி என்ற உண்மை தெளிவாகும்.

ஆப்பிரகாம் லிங்கன்19 ம் நூற்றாண்டில் ஐக்கிய அமெரிக்கக் குடியரசை ஸ்தாபித்த வட மாநிலங்களுக்கும் , தென் மாநிலங்களுக்கும் இடையில் போர் மூண்டது. அமெரிக்காவின் உள்நாட்டு யுத்தமென இது வரலாற்று பாடப்புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளது. இந்தப் போருக்கு பொருளாதார முரண்பாடுகளும் முக்கிய காரணியாகும். புதிய அமெரிக்கக் குடியரசான வடமாநிலங்கள் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையை வரித்துக் கொண்டன. இதற்கு மாறாக ஆபிரிக்க அடிமைகளின் உழைப்பில் தங்கியிருந்த தென்மாநிலங்களில், நிலவுடைமை சார்ந்த பொருளாதாரம் இருந்து வந்தது. தெற்கில் நிலவுடைமைப் பொருளாதாரத்தை அழித்து, அங்கே ஐக்கிய அமெரிக்கக் குடியரசை விஸ்தரிக்கும் நோக்கோடுதான், அன்றைய ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனால் அடிமை முறை ஒழிக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டது.



தென்மாநிலங்கள் தம்மிடமிருந்த கறுப்பின அடிமைகளை விடுதலை செய்து முதலாளித்துவப் பொருளாதாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை வந்தது. அப்போது இன்னொரு பிரச்சினை உருவானது. அமெரிக்கப் பிரஜைகளாகப் போகும் விடுதலை செய்யப்பட்ட கறுப்பின அடிமைகள் வருங்கால அமெரிக்காவின் தீர்க்கமான அரசியற் சக்தியாக வருவதை பலர் விரும்பவில்லை. இதனைக் கருத்தில் கொண்ட முன்னாள் அடிமைகளின் எஜமானர்கள் “அமெரிக்கக் காலனியச் சங்கம்” என்ற ஒன்னை உருவாக்கினார்கள். “விடுதலை செய்யப்பட்ட அடிமைகளை அவர்களது தாயகத்தில் குடியேற்றுவது” என்ற முற்போக்கானதாகக் காட்டிக்கொண்ட குறிக்கோளைக் கொண்ட அந்தச் சங்கம் அதற்கென மேற்கு ஆபிரிக்காவில் ஒரு பகுதி நிலத்தை வாங்கியது. அந்த நிலம்தான் லைபீரியா.

1822 ல் லைபீரியாவில் அமெரிக்காவிலிருந்து வந்த முன்னாள் அடிமைகளின் முதலாவது காலனி உருவாகியது. அமெரிக்கக் காலனிய சங்கத்தால் வாங்கப்பட்ட நிலம், யாருமே வாழாத சூனியப் பிரதேசமாக இருக்கவில்லை. அங்கு 16 வேறுபட்ட இன மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களிலே , இஸ்லாமியர்களான மான்டே மொழி பேசும் மக்கள் போர்த்துக்கீசருடன் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தனர். லைபீரியா என்ற அமெரிக்கக் காலனி உருவான பின்பு , இன்றுவரை இந்தப் பூர்வீக இனமக்கள், அரசியல் பொருளாதார ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். மொத்தச் சனத்தொகையில் 15 வீதமான அமெரிக்கக் குடியேறிகளே, ஆளும் வர்க்கமாகத் தொடர்கின்றனர்.

மான்ரோவியா ஆரம்பத்திலிருந்தே புதிய குடியேறிகளை, பூர்வீக மக்கள் அவநம்பிக்கையுடன் நோக்கினர். புதிதாகக் குடியேறிய அந்நியர்கள் வினோதமான மொழியை (ஆங்கிலம்) பேசினர், விசித்திரமான மதத்தைப் (கிறிஸ்தவம்) பின்பற்றினர். மறுபக்கத்தில் அமெரிக்கக் குடியேறிகள், தம்மை மட்டும் நாகரீகமடைந்தவர்களாக கருதிக் கொண்டனர். பூர்வீக மக்களை “நாகரீகமடையாத




காட்டுவாசிகள்” என அழைத்தனர். பூர்வீக மக்களின் விருப்பங்களை புறக்கணித்து, தம் இஷ்டப்படி மொன்றோவியாவை (அமெரிக்க ஜனாதிபதி மொன்றோவின் பெயரால்) தலைநகராகக் கொண்ட லைபீரியக் குடியரசை அமைத்தனர். புதிய தேசத்தின் அரசியல் நிர்ணயச் சட்டம் அமெரிக்காவில்தான் தயாரிக்கப்பட்டது. அமெரிக்கக் கொடியை போன்ற கொடி, தேசியக் கொடியாக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று



வரை எல்லாம் அமெரிக்காவில் இருந்து தான் இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன.

இன்றைய லைபீரியா ஆட்சியாளர்கள் அனைவரும், முன்னாள் அமெரிக்க அடிமைகளின் வழித்தோன்றல்கள். இன்றுவரை தமது தந்தையர் நாடான அமெரிக்காவுடன் சிறந்த நட்புறவுகளைப் பேணிவருகின்றனர். அமெரிக்க வர்த்தக ஸ்தாபனங்கள் லைபீரியாவின் கனிப்பொருள் வளங்களின் மீது ஏகபோன உரிமை பெற்றுள்ளன. உதாரணமாக ரப்பர் ஏற்றுமதிக்கு “ஃபயர்ஸ்டோன்” , “குட்றிச்” ஆகிய பன்னாட்டு நிறுவனங்கள் 99 வருட ஒப்பந்தம் போட்டுள்ளன. இதைவிட பல எண்ணைதாங்கிக் கப்பல்கள் இளகிய சட்டங்களைக் கொண்ட லைபீரியாவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த முக்கியத்துவம் காரணமாக லைபீரிய அரசியல் ஆட்டம் காணும்போதெல்லாம் அமெரிக்கா தலையிட்டு ஸ்திரப்படுத்தி வந்தது.

நீண்ட காலமாக பொருளாதார வளர்ச்சி, பொதுமக்களின் வாழ்க்கை வசதிகளை அதிகரித்திருந்த போதும் என்பதுகளில்




ஏற்பட்ட உலகப் பொருளாதாரப் பின்னடைவு, லைபீரியாவிலும் பல தாக்கங்களை உருவாக்கியது. ஏற்றுமதி குறைந்து வேலைவாய்ப்பின்மை அதிகரித்தது. அரிசி விலையுயர்வால் மக்கள் கலகம் செய்தனர். ஊழல் ஆட்சி, எதிர்க்கட்சிகளின் மீதான தடை, இவற்றிற்கு மத்தியில் “லைபீரிய தேசபக்த முன்னணி” என்ற ஆயுதமேந்திய குழு அரசபடைகளுடன் சண்டையிட்டு பல பகுதிகளைக் கைப்பற்றியது. இந்த ஆயுத பாணிக் குழுவின் தலைவர் சார்ல்ஸ் டெய்லர், கடைசி நேரத்தில் தலைநகரில் தோன்றிய வேறு சில அரசியல் குழுக்களுடன் அரசாங்கத்தைப் பங்குபோடவேண்டியதாயிற்று.

சார்ல்ஸ் டேலர்பின்னர் நடந்த பொதுத் தேர்தலில், முன்னாள் போராளியான சார்ல்ஸ் டெய்லர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். டெய்லரின் கட்சிக்கு அயல் நாடான சியாரா லியோனிலிருந்து உதவி கிடைத்து



வந்தது. லிபியாவும் ஆதரவளித்தது. இன்று ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நீதிமன்றம் சியாரா லியோன் தொடர்புக்காக விசாரணை மேற்கொள்ள விரும்புகிறது. வைரக்கற்கள் ஏற்றுமதி செய்யும் சியாரா லியோனை முன்பு ஆண்ட போராளிக்குழு “சட்டவிரோத” வைரக்கல் விற்பனையிலீடுபட்டு வந்தது. இதில் சார்ல்ஸ் டெய்லருக்கும் பங்கிருக்கலாம் என நம்பப்படுகிறது. நீண்டகாலமாக சர்வதேச வைர வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தன மேற்கத்தைய நாடுகள். லாபத்தில் பங்கு கேட்டு, உள்ளூர் அரசியல் சக்திகள் உரிமை பாராட்ட விரும்பியபோதுதான் பிரச்சினை வந்தது.

அன்று சொந்த நாட்டின் வளத்திற்காக உரிமை பாராட்டியவர்கள் அனைவரும், பின்னர் சர்வதேச மட்டத்தில் போர்க்குற்றவாளிகளாகத் தூற்றப்பட்டனர். இன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படும் சார்லஸ் டெய்லர், பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாகவும் வேண்டப்படும் நபராகியுள்ளார். யுத்தம் நடந்த காலத்தில் டெய்லரின் கட்சியைச் சேர்ந்த போராளிகள் பல மனித உரிமை மீறல்களைச் செய்தது உண்மைதான். அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை, பாலியல் வல்லுறவுகள், எதிரிகளை அங்கவீனப்படுத்தியமை போன்ற பல குற்றச் செயல்கள் நடந்துள்ளன. ஆனால், இவற்றிற்கு டெய்லரின் குழு மட்டுமே பொறுப்பல்ல.



இன்று வரை ஆட்சியில் இருக்கும் அரசபடைகளும் இதுபோன்ற குற்றங்களை இழைத்துள்ளன. இன்று செய்தி ஊடகங்களால் நல்லவர்கள்போல்காட்டப்படும் கிளர்ச்சியாளர்களும் மேற்கண்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளனர். டெய்லரை விரட்டும் முயற்சியிலிறங்கிய அமெரிக்கா கிளர்ச்சியாளருக்கு மறைமுக உதவி வழங்கியது. சமாதானமும் நிலைநாட்டவென, ஐ.நா பாதுகாப்புச் சபையின் உத்தரவின் பேரில் வந்திறங்கியுள்ள, பிராந்திய வல்லரசு நைஜீரியா தலைமையிலான சமாதானப் படைகளுக்கும் அமெரிக்கா பின்னணியிலுள்ளது. சமாதானப் படைக்கு மேலதிக நிதி வழங்குமாறு அமெரிக்காவை நைஜீரியா கேட்டதிலிருந்தே இது தெளிவாகும்.

வருங்காலத்தில் ஆப்பிரிக்க எண்ணை உற்பத்தி அதிகரிக்கப்படும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. லைபீரியாவில் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைகள் அமெரிக்காவில் உயர்கல்வி கற்றுத் திரும்புவது சர்வசாதாரணம். போர்க் குற்றவாளி டெய்லரும் அவ்வாறான அமெரிக்கப் பட்டதாரிதான். இதைவிட 1997 ம் ஆண்டு சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் நடந்த பொதுத் தேர்தலில் ஜனநாயக பூர்வமாக பெரும்பான்மை மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதிதான் டெய்லர். பல தடவை தாம் சர்வாதிகாரிகளுக்கெதிராக செயற்படுவதாகத் தெரிவிக்கும் “சர்வதேச சமூகம்” லைபீரியாவில் ஜனநாயகத்திற்கெதிராகச் செயற்பட்டது கவனிக்கத்தக்கது.

ஒரு சிறிய குடியரசு நாட்டில் பெரிய மாறுதல் ஒன்று நடந்திருக்கிறது. ஆட்டக் களத்தில் ஜொலித்த நட்சத்திரம் ஒருவர், அதிகாரமிக்க பதவியில் அமர்ந்து அரசியல் களத்திலும் ஜொலிக்கத் தொடங்கியிருக்கும் ஆச்சரியத்தை நிகழ்த்தியிருக்கிறது அந்தச் சிறிய நாடு!

அந்த நாடுதான் அதிகாரப்பூர்வமாக லைபீரிய குடியரசு என அழைக்கப்படும் லைபீரியா ஒரு மேற்கு ஆப்பிரிக்க நாடு. இந்த நாட்டின் எல்லைகளாக சீராலியோனி, கினி, கோட் டி ஐவரி ஆகிய நாடுகளும், அட்லாண்டிக் பெருங்கடலும் அமைந்துள்ளது. இந்நாடு நில நடுக்கோட்டிற்கு அருகில் இருப்பதால் வெப்பக் காலநிலையை கொண்டிருக்கிறது.

லைபீரியா நாடு முழு ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே முதன்முதலாக (1847) சுதந்திரமடைந்த நாடு. இதே காலகட்டத்தில் பிற ஆப்பிரிக்க நாடுகள் ஐரோப்பியக் காலனிகளாகிக் கொண்டிருந்தன. யூதர்கள் இஸ்ரேலுக்குத் திரும்பியதுபோல்,"தாயகம்" திரும்பிய அமெரிக்க—ஆப்பிரிக்க அடிமைகள் குடியேற்றப்பட்ட நாடுதான் லைபீரியா. விடுதலை செய்யப்பட்ட "அமெரிக்க அடிமைகளின் தாயகம்" என்ற பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்ட லைபீரியாவை, இன்னொரு கோணத்திலிருந்து பார்த்தால் அதுதான் ஆப்பிரிக்காவில் உருவான முதலாவது அமெரிக்கக் காலனி நாடாகும்.



19—ஆம் நூற்றாண்டில் ஐக்கிய அமெரிக்கக் குடியரசை நிறுவிய வட மாநிலங்களுக்கும், தென்மாநிலங்களுக்கும் இடையே நடந்த போருக்குப் பின் அன்றைய ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனால் அடிமை முறை ஒழிக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டது. அடிமைமுறை ஒழிப்பிற்குப் பின் விடுதலை செய்யப்பட்ட அடிமைகளை அவர்களது தாயகத்தில் குடியேற்றுவதற்காக, மேற்கு ஆப்பிரிக்காவில் ஒரு பகுதி நிலத்தை வாங்கியது. அந்த நிலம்தான் லைபீரியா. 1822 ல் லைபீரியாவில் அமெரிக்காவிலிருந்து வந்த முன்னாள் ஆப்பிரிக்க அடிமைகளின் முதலாவது காலனி உருவாகியது.

பல ஆண்டுகளாக உள்நாட்டு யுத்தத்தால் சீரழிந்த லைபீரியாவில் எந்தவொரு சிறிய முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று லைபீரிய துணை அதிபர் ஜோசப் பொக்காயின் பதவி காலத்தை குறிப்பிடலாம். அரசு விழாக்களின்போது தூக்கத்தில் ஆழ்ந்துவிடுவதாக கருதப்படும் ஜோசப் போக்காய் "ஸ்லீப்பி ஜோ" என்று கேலியாக அழைக்கப்படுகிறார்.

ஆனால் உண்மையில் தான் தூங்குவதில்லை என்றும் தனது முகத் தோற்றம் அப்படி இருப்பதாக ஜோசப் பொகாய் தன் மீதான 'தூங்கு மூஞ்சி' என்ற குற்றச்சாட்டை தீவிரமாக மறுக்கிறார். அதிபர் எல்லென் ஜான்சன் சிர்லீஃப்பின் பதவிக்காலம் முடிவடைந்த பிறகு, அடுத்த அதிபராக பதவியேற்கலாம் என்ற தற்போதைய துணை அதிபர் ஜோசப் பொகாயின் கனவு கலைந்துவிட்டது.

லைபீரியாவில் 1989—1996 மற்றும் 1999—2003 ஆண்டுகளில் இரண்டு முறை உள்நாட்டுப் போர்கள் நடைபெற்றுள்ளன. இதன்காரணமாக அங்குள்ள மக்கள் கடும் அவதிக்கு ஆளாகிக் கொண்டிருந்தார்கள்.

இந்த போர்ச் சூழலுக்குப் பின் 2006—ம் ஆண்டு முதல் ஐக்கிய கட்சியின் மூத்த தலைவர் எல்லன் ஜான்சன் சர்லீப் அதிபராக பதவி ஏற்றார்.

சமீபதி அவரது பதவிக்




காலம் முடிவடந்தை ஒட்டி, அந்த நாட்டில் கடந்த அக்டோபர் 10, டிசம்பர் 26 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக அதிபர் தேர்தல் நடைபெற்றது. இதில் ஆளும் ஐக்கிய கட்சி சார்பில் துணை அதிபர் ஜோசப் பொக்காய், ஜனநாயக மாற்றத்துக்கான காங்கிரஸ் கட்சியின் சார்பில் பிரபல முன்னாள் கால்பந்து வீரர் ஜார்ஜ் வேஹ் ஆகியோர் போட்டியிட்டனர்.

நடைபெற்ற தேர்தலில் முன்னாள் கால்பந்தாட்ட வீரர் ஜார்ஜ் வியா அறுபது சதவிகித வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.தற்போதைய துணை அதிபராக உள்ள ஜோசப் போகாயை தோற்கடித்து அமோக வெற்றிபெற்றார். இந்த வெற்றியை அவரது ரசிகர்களும் கட்சி தொண்டர்களும் லைபீரியா முழுவதும் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர்.

## யார் இந்த ஜார்ஜ் வியா ?

தொழில்முறை கால்பாந்தாட்டக் காரரான




ஜார்ஜ் வியா, செல்சீ மற்றும் மான்செஸ்டர் சிட்டி கிளப்களின் சார்பில் விளையாடினார்.

இவர் மட்டுமே ஃபீஃபாவின் ஆட்ட நாயகர் மற்றும் மதிப்புமிக்க பேலன் டி'ஆர் விருதை வென்ற ஒரே ஆப்பிரிக்க கால்பாந்தாட்ட வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.2002ஆம் ஆண்டு கால்பந்தாட்டத்தில் இருந்து ஓய்வுபெற்ற ஜார்ஜ் வியா அரசியலில் நுழைந்தார். அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னரே நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்திருக்கிறார் ஜார்ஜ் வியா.

2005ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் போட்டியிட்ட ஜார்ஜ் வியா, எல்லென் ஜான்சன் சிர்லீஃபியிடம் தோற்றுப்போனார். உள்நாட்டுப் போருக்குப் பிறகு எழுந்த கலகங்களால் முன்னாள் அதிபர் சார்லஸ் டெய்லரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. அதன்பிறகு 2006இல் எல்லென் ஜான்சனின் ஆட்சி தொடங்கியது. போர்க் குற்றங்களுக்காக தற்போது பிரிட்டனில் 50 ஆண்டு சிறைதண்டனையை அனுபவித்துவருகிறார் சார்லஸ் டெய்லர்.

## லைபீரியா பற்றிய சில முக்கிய தகவல்கள்

•ஆஃப்ரிக்காவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள லைபீரியா பல தசாப்தங்களாக உள்நாட்டுப் போரால் பீடிக்கப்பட்டிருந்தது.



•1820களில் அடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு இந்த நாட்டில் அமெரிக்கர்கள் குடியேற்றப்பட்டனர். ஆஃப்ரிக்காவின் பழமை வாய்ந்த குடியரசாக 1847ஆம் ஆண்டில் லைபீரியா உருவானது.

•சுதந்திரம் என்ற பொருளுடைய 'லிபர்ட்டி' என்ற ஆங்கிலச் சொல்லில் இருந்து உருவாக்கப்பட்டது லைபீரியா என்ற பெயர்.

•ஒரு புறம் கடலும் மற்ற மூன்றுபுறங்களில் கினி, சியாரா லியோன், ஐவரி கோஸ்ட் ஆகிய நாடுகளும் சூழ்ந்த தீபகற்ப நாடு லைபீரியா.

•லைபீரியாவின் முன்னாள் அதிபர் சார்லஸ் டெய்லர் 1980 முதல் 1990 வரை வன்முறை கிளர்ச்சிகளுக்கு தலைமை தாங்கினார். பின்னர் தேர்தலில் போட்டியிட்ட அவர் 1997இல் தேர்தலில் வென்றார்.

"நல்லதொரு வளர்ச்சி பாதையில் என் நாட்டைக் கொண்டு செல்வதே என் முக்கியப் பணி!" என்று முழங்கி வந்த ஜார்ஜ் வெயிக்கு அந்நாட்டு மக்கள் வெற்றியைப் பரிசளித்துள்ளனர்.

லைபீரியாவின் அதிபருக்கான தேர்தலில் வெற்றிபெற்றுள்ள ஜார்ஜ் வெயிக்கு ஐக்கிய நாடுகள் சபை பொதுச்செயலாளர் ஆண்டோனியோ கட்டாரஸ் இன்று தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

"அமைதியான சூழலில் தேர்தலை நடத்தி நல்லபடியாக எந்தவொரு பிரச்சினையுமின்றி முடித்த லைபீரிய நாட்டு மக்கள் அனைவருக்கும் ஐ.நா. சபை பொதுச்செயலாளர் ஆண்டோனியோ கட்டாரஸ் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டுள்ளார்" என ஐக்கிய நாடுகள் சபை தலைவரின் செய்தித்தொடர்பாளர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.லைபீரியா அதிபர் தேர்தலில் ஜார்ஜ் வெயி வெற்றிபெற்றதற்கான சான்றிதழை அந்நாட்டு தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

2018, ஜனவரி 22ஆம் தேதி ஜார் வெயி பதவியேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எந்தத் துறையில் இருந்தும் அரசியலுக்கு வரலாம் என்பதற்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழும் ஜார்ஜ் வெயி, மக்கள் தன் மீது வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றி மக்கள் தொண்டாற்ற வேண்டும்!

ஆட்டக் களத்தில் மக்களை மகிழ்வித்தவர் அரசியல் களத்திலும் மக்களுக்கு மகிழ்வையும் சமாதானத்தையும் தரவேண்டும்! அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் அவர் வெற்றிக் கனியைத் தட்டிப் பறித்திருக்கிறார்.

விரைவில் மக்களின் நன்மதிப்பை வென்றெடுப்பார் என்று நம்புவோம்!

# கருத்துப் ப(ா)டம்




# சொல்றாங்க... சொல்றாங்க...



*"திமுகவை உரசி பார்க்க வேண்டாம். களத்தில் தோற்றால் விழுப்புண்ணாக கருதும் பக்குவம் திமுகவுக்கு உள்ளது. ஆட்சி மாற்றம் வரும் என கருதுவது பகல் கனவு!"*

**ஸ்டாலின்**

(தேர்தலில் தோற்றதும், என்ன பேசறதுன்னே தெரியாம, உங்களைப் பற்றி நீங்களே இப்படி உளறிக் கொட்டலாமா?)



*"கட்சி அறிவிப்பு வரும் வரை அரசியல் விமர்சனம் வேண்டாம். வரப்போகும் சட்டப்பேரவைத் தேர்தலில் நம்ம படையும் இருக்கும். ஆண்டவன் இருக்கான்."*

**ரஜினிகாந்த்**

(சிங்கமும் சிங்கிளா வந்தா அதிருமா?!)



*"ஒரு தொகுதியில் வென்ற டிடிவி தினகரனை பெரிய அரசியல் தலைவராகக் கொண்டாடாதீர்கள். அவர் ஜெயலலிதாவுக்கு மாற்று அல்ல!"*

**குஷ்பு**

(காகம் உட்கார பனம்பழம் விழுந்த கதை, உங்க கதையா?)



*"அகதிகளுக்கு உலக நாடுகள் அடைக்கலம் அளிக்க வேண்டும்!"*

**போப் பிரான்சிஸ்**

(இந்தக் குரல் உலக நாடுகளின் தலைவர்களை எட்டடுவதே இல்லையே!!)

# அழுகுணி

'தேர்தல் காலம்' என்கிற சடங்கு, சாத்தியமான எல்லா உண்மைகளையும் வெளிக்காட்டுகிறது. போட்டி, போராட்டம், மோதல், விவாதங்கள் ஆகியவை, எவையெல்லாம் சாத்தியம் என்று மட்டுமே காட்டுகின்றன. திடீரென ராகுல் வெவ்வேறு கோணங்களில் பார்க்கப்படுகிறார். காங்கிரஸ் கட்சிக்குப் புதிய தோற்றத்தைக் கொடுக்க என்பது மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு அம்சத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். விமர்சனங்களும் பாராட்டுகளும் எப்படியிருந்தாலும், தேர்தலை அணுகியதில் ராகுல் தரப்பில் பலவீனங்கள் காணப்பட்டன. கட்சியின் தேர்தல் நிபுணர்களிடம் தோழமை இல்லை. தேர்தலை வெல்லும் மாயம் என்ன




புதிய ஆற்றல் ஊட்டப்பட்ட தலைவராக அல்ல; ஒரு புது வரவாக, 20 ஆண்டுகள் தொடர்ந்து தூங்கி வெகு தாமதமாக விழித்துக்கொண்ட ரிப் வேன் விங்கிள் (அமெரிக்க எழுத்தாளர் வாஷிங்டன் இர்வின் உருவாக்கிய பாத்திரம்) போலப் பார்க்கப்படுகிறார். உத்தி வகுப்பதில் வயதுக்கு மீறிய முதிர்ச்சியுள்ளவர் என்று பலர் கருதினாலும், அமித் ஷாவும் ஆர் எஸ் எஸ் ஸூம் வியூகங்களை வகுப்பதில் தேர்ச்சியுள்ளவர்கள். ராகுல் பகுதி நேர அரசியல் தலைவர், மோடி முழு நேர அரசியல் தலைவர் என்று விளக்கக்கூட யாரும் முயற்சிக்கவில்லை. மக்களிடம் கூறிய விளக்கங்கள் சாரமற்று இருந்தன. விளக்கியவர்கள் அதைவிட அசுவாரசியமாக இருந்தனர். அரசியல் விமர்சகர்கள் அனைவரும் தேர்தல் முடிவு தெளிவானதும் மோடியைப் புகழத் தொடங்கிவிட்டனர்.




## மும்மூர்த்திகள்

படேல், அல்பேஷ், மேவானி ஆகியோரே விமர்சகர்களை ஈர்த்தனர். 'வளர்ச்சி' என்ற பிரச்சாரத்துக்கு எதிரான 'அதிருப்தி'யை வெளிக்கொண்டு வந்ததால் ஊடகங்கள் ஹர்திக்கை மெச்சின. இரண்டு விஷயங் கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. முதலாவது, அந்த மூவரும் கவனத்தைத் தங்கள் பக்கம் ஈர்ப்பவர்களே தவிர, வாக்குகளைச் சேகரிப்பவர்கள் அல்ல.

# ஆட்டம்

ஷிவ் விஸ்வநாதன்

மக்களிடையே ஒரு கருத்தை ஏற்படுத்த முடிந்தவர்கள், ஆனால் அதை நல்ல முடிவாக மாற்றத் தெரியாதவர்கள் என்று. இரண்டாவதாக, அவர்கள் களத்துக்கு வந்த நேரம் வெற்றி கனிவதற்கு உகந்ததாக இல்லை. தேர்தல் தொடங்குவதற்குச் சில மாதங்களுக்கு முன்னால் மட்டும் மக்களிடம் பேசத் தொடங்கி நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. தேர்தல் பிரச்சாரத்துக்கு மும்மூர்த்திகள் எடுத்துக்கொண்ட நேரம் அவர்களுக்கு நிறைந்த



பலனைக் கொடுக்கவில்லை.

‘வளர்ச்சி’ என்ற வார்த்தை நகர்ப்புற வாக்காளர்களின் மனங்களில் ஆழப் பதிந்துவிட்டது. நகரங்களிலும், அரை நகரங்களிலும் பாஜக அளித்த வாக்குறுதிகள் வாக்குகளை ஈர்த்தன. பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் பொருளாதாரமே நாசமான சூரத்தில்கூட பாஜக கிட்டத்தட்ட அனைத்துத் தொகுதிகளிலும் வென்றது. நகர்ப்புறம் என்பவை பாஜகவுக்குக் கோட்டைகள்போல. பழங்குடி, விவசாயிகள், இளைஞர்களை ஆதரவாளர்களாகக் கொண்ட காங்கிரஸ், தனக்கிருக்கும் ஆதரவாளர்களோடு திருப்தியடைய வேண்டியதுதான். பழங்குடிப் பகுதிகளிலும் ஆர்எஸ்எஸ் நீண்டகாலமாக அளித்து வரும் சேவை, அந்த வாக்காளர்களையும் காங்கிரஸிடமிருந்து பறித்துவிடும். ஒருகட்டத்தில், வானவில் கூட்டணியைப் போலக் காட்சிதந்த காங்கிரஸ், முன்பைவிட வலுவற்றதைப் போலக் காட்சியளிக்கிறது.




மக்களுடைய நினைவாற்றலும் தேர்தலில் முக்கிய மான அம்சம். ஆட்சியில் இருக்கும் கட்சி மீதான அதிருப்தியும் அசுவாரசியமும் முக்கியமல்ல. பெரும்பாலான மக்களுக்கு காங்கிரஸ் எப்போது கடைசியாக குஜராத்தை ஆண்டது என்பதே மறந்திருக்கலாம். ராகுலும் காங்கிரஸும் படேல் சமூகத்தவரின் நலன்களைக் காப்போம் என்று உறுதியளிக்கலாம். ஆனால், காங்கிரஸ் அப்படித் தங்களுக்காகச் சாதித்தது எதுவும் படேல்களுக்கே நினைவுக்கு வராமலிருக்கலாம். அதே வேளையில், பாஜக மூலம் சாதித்துக் கொண்டவை நினைவில் நிற்கலாம்.

மக்களிடையே நிலவும் வறுமையைச் சுட்டிக்காட்டி காங்கிரஸ் வாக்கு கேட்டது. பாஜக ஆட்சியில் வறுமை குறைந்திருக்கிறது; சமூகவியல்ரீதியாகக் கூறுவதானால், வருமானரீதியாக மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் உண்டு, ஆனால் ஏழ்மை குறைந்துள்ளது. இது நகர்ப்புற வாக்காளர்கள்

அனுபவத்தில் தெரிந்துகொண்டது. எனவே 'அச்சே தின்' என்பதை நகர வாக்காளர்கள் விரும்பினர். பழங்குடிகளும் கிராமப்புற விவசாயிகளும் பராதீனமாக விடப்பட்டதாகவே கருதினர். எனவேதான் அவர்களிடையே காங்கிரஸின் பிரச்சாரம் நன்கு எடுபட்டது. நகர்ப்புற நடுத்தர வர்க்க வாக்காளர்களின் ஆதரவைப் பெற, காங்கிரஸ் கட்சி தன்னுடைய உத்தியை மாற்றிக்கொள்ள வேண்டும்.



## காங்கிரஸும் ஆர்எஸ்எஸ்ஸும்

காங்கிரஸ் கட்சியும் அதன் பிரச்சாரமும் நன்கு வரவேற்கப்பட்டதாகவே கருதப்பட்டது. சில தனிநபர்கள் மீதும், குறுகிய கால நிகழ்வுகள் மீதும் அதிக முக்கியத்துவம் தரப்பட்டுப் பேசப்பட்டது. அவ்வாறு தனி நபர்களுக்கு முக்கியத்துவம் தந்த காங்கிரஸ், தன்னுடைய இயக்கம்.. அமைப்பு ஆகியவற்றைச் சிறிது நேரத்துக்கு மறந்துவிட்டது. தேனீக்களைப் போல ஆர்எஸ்எஸ் அமைப்பு தேர்தல் அரசியலில் அனேக ஆண்டுகளாக இடைவிடாமல் உழைப்பதற்கு ஈடாக காங்கிரஸால் ஏதும் செய்ய முடியவில்லை. ஆர்எஸ்எஸ்ஸின் ஷாகாவே ஒரு சமூகத்தைத் தனக்குள் பல ஆண்டுகளாகப் பொதிந்து வைத்துக்கொள்கிறது. தன்னுடைய முயற்சிகளுக்குப் பலன் கிடைக்கும்வரை அது காத்திருக்கும். தீவிரமாக உழைத்துவிட்டுச் சில ஆண்டுகளுக்குப் பிறகு பலனைப் பார்க்கலாம் என்ற பொறுமை காங்கிரஸ் கட்சிக்குக் கிடையாது. காங்கிரஸுக்குத் தெரிந்ததெல்லாம் 'பரம்பரை' அம்சம்தான். ஓர் அமைப்பைக் கட்டமைப்பதிலும் வரலாறு படைப்பதிலும் பரம்பரையால் அதிகம் சாதித்துவிட முடியாது.

இவ்வளவு இருந்தாலும் 182 தொகுதிகளில் 150—ஐப் பிடித்துவிட வேண்டும் என்ற பாஜகவின் இலக்கு நிறைவேறாததாகிவிட்டது. அமித் ஷாவைப் பொறுத்தவரை 150 என்பது, எண் கொண்ட இலக்கு அல்ல. கட்சித் தொண்டர்கள் அயராமல் உழைக்க வேண்டும் என்பதற்காக முன்வைக்கப்பட்ட இலக்கு. அது நிறைவேறாத நிலையிலும் ஆட்சியைப் பிடித்துவிட்டதால், 'சாதிக்க முடியாததைச் சாதித்துவிட்டோம்' என்று கூறிக்கொள்வர். அப்படியே எப்போதாவது அந்த இலக்கையும் அடைந்துவிடும்போது, 'பாஜகவை வெல்லவே முடியாது' என்ற பிரமை உண்மையென்று மற்றவர்களால் நம்பப்படுகிறது.



## கண்ணுக்குத் தெரியாத உண்மை

நடுத்தர வர்க்கத்தின் நலன், வளர்ச்சி, இந்துத்துவம் தொடர்பான பேச்சு என்ற கலவை பாஜகவின் வெற்றிக்கு உறுதியாகக் கை கொடுக்கிறது. சமூகவியல் அமைப்பை பாஜக நன்றாக ஊன்றிப் படித்திருக்கிறது. நகர்ப்புறங்களின் புதிய வாக்காளர்கள்தான் பாஜகவுக்கு செல்லப் பிள்ளைகள். பாஜகவின் உளவியல் புரிதலும் அற்புதமானது. பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டி போன்றவற்றால் ஏற்படும் அதிருப்தி என்பது தற்காலிகமானது, எளிதில் மறக்கப்படக் கூடியது. அப்படிப்பட்ட அதிருப்தியைப் போக்க சற்றே முயற்சி எடுத்துப் பேசினால் போதும், வாக்குகளைப் பெற்றுவிடலாம். எந்த ஒரு நிகழ்வுக்கும் இந்திய வாக்காளர் உடனே கொந்தளித்துவிடுவார். ஆனால், வாக்களிக்கும் வழக்கத்தை மாற்றுவதில் மிகவும் மெதுவாகத்தான் செயல்படுவார் என்பதை பாஜக நன்கு அறிந்திருக்கிறது.

அந்தந்த மாநிலங்களில் வாக்காளர்களின் விருப்பம் என்ன, மனநிலை என்ன என்பதையெல்லாம் பாஜக புரிந்துவைத்திருக்கிறது. இவையெல்லாம் ஊடகங்களின் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆனால், இதுதான் தேர்தல் அரசியலின் முக்கியமான அம்சம்.இவ்வளவு இருந்தும் பாஜக மெத்தனமாக இருந்துவிட முடியாது. தேர்தல் காலங்களில் அதன் பெரிய தேர் அசைந்தாடியும் ஆங்காங்கே குலுங்கியும் நகர்கிறது. சமூகம் மாறிக்கொண்டே இருக்கிறது என்பதை அது நன்கு உணர்ந்திருக்கிறது. புதிய கூட்டுகளும் ஆசைகளும் களத்தில் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. சமுதாயங்களின் புதிய தேவைகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. நிகழ்காலம் அதன் கையில் பத்திரமாக இருக்கிறது. ஆனால், எதிர்காலம் அதனால் ஏமாற்றப்பட முடியாததாக மாறக்கூடும்.


தமிழில்: சாரி, © 'தி இந்து' ஆங்கிலம்


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
புத்தாண்டு
2018
HAPPY
NEW YEAR!
வாழ்த்துக்கள்

# அருகும்

## ஆட்டம் காணும் ஆளுமை!

அண்மைக் காலமாக சமூக ஊடகங்களைத் திறந்தால் கேலியும், கிண்டலும் கொந்தளிக்கும் அரசியல் மீம்ஸ்கள் கொட்டுகின்றன. அவற்றில் சிறப்பிடம் பிடிப்பவை அரசியல் தலைவர்களைப் பற்றியவைதான். அதிலும் தமிழக அரசியல் தலைவர்களைப் பற்றிய மீம்ஸ்களுக்கு குறைவில்லை.




ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேற்றுமை இல்லாமல் சகட்டுமேனிக்கு வெளுத்து வாங்கும் இந்த மீம்ஸ்களுக்கு பொதுமக்களிடையே வரவேற்பு அமோகம். அந்த அளவுக்கு மீம்ஸ்களை உருவாக்கும் படைப்பாளிகளுக்கு தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் "இரை'யாகி வருகின்றனர்.

மீம்ஸ்களைப் பார்க்கும்போதும், அவற்றுக்கான நறுக்கென்ற நாலு வரி கேலி வாசகங்களை படிக்கும்போதும் நகைச்சுவை உணர்வுக்கு பஞ்சப்பட்டவர்கள் கூட வாய்விட்டு சிரிக்க வேண்டியதாகி விடுகிறது. அந்த நகைச்சுவைகள் நம்மை சிரிக்க வைப்பதோடு மட்டுமல்லாமல் சிந்திக்கவும் வைக்கின்றன. ஆமாம், நாம் எப்படிப்பட்ட தலைவர்களால் ஆளப்படுகிறோம் என்ற சிந்தனை மனதை வேதனை கொள்ள வைக்கிறது.




தலைவனுக்குள்ள தகுதிகள் என்ன? நீதி நூல்கள் கூறுவது: குற்றஞ்சாட்டப்படாதவனாக இருக்க வேண்டும். ஒரே மனைவியை உடையவனாக இருத்தல் வேண்டும். கொடியவன் என்றோ அடங்காதவன் என்றோ பெயர் எடுத்தவனாக இருக்கக் கூடாது. கடவுள் நம்பிக்கை உள்ளவனாகவும், அத்தகைய பிள்ளைகளை பெற்றெடுத்தவனாகவும் இருக்க வேண்டும். தன் விருப்பப்படி செயல்படுபவனாக இருக்கக் கூடாது. முன்கோபம் கூடாது.


மதுபானப் பிரியனாக இருக்கக் கூடாது. இழிவான ஆதாயத்தை நாடாதவனாகவும் இருக்க வேண்டும். தெளிந்த புத்தியை உடையவனாகவும், நீதிமானாகவும், இச்சை அடக்கம் உள்ளவனாகவும் இருக்க வேண்டும்.

ஆரோக்கியமானவனாக, நல்ல ஆலோசனை மூலம் புத்தி சொல்பவனாக, எதிர்த்து பேசுபவர்களை கண்டனம் செய்து பதில் அளிப்பதில் வல்லவனாக, தான் கற்றுக் கொண்டதற்கேற்ப உண்மையை பின்பற்றுபவனாக, அதையே பேசுபவனாக, காரிய சமர்த்தனாக இருத்தல் அவசியம் என தலைவனுக்குரிய தகுதிகளாக நீதி நூல்கள் வரையறுக்கின்றன.

# ஆளுமை

ப இசக்கி

இந்தத் தகுதிகள் முழுமையாக இல்லாவிட்டாலும், நிரம்பப் பெற்றவர்கள் நாட்டின் தலைவர்களாக இருந்த காலம் இல்லாமல் இல்லை. ஆனால் இன்று நிலைமை தலைகீழாகி விட்டதை எவரும் மறுக்க முடியாது. தலைமைக்கான தகுதி முழுமையாக பெற்றவர்கள்தான் தலைவர்களாக வேண்டும் என்றால் நாட்டில் தலைமைப்




பஞ்சம் தலைவிரித்துதான் ஆடும். அந்தக் கால கணக்குப்படி "ஐந்துக்கு இரண்டாவது' (அது இந்தக் கால கணக்குபடி 40 சதவீதம்—35 சதவீதமே தேர்ச்சிதானே) இருந்தால்கூட தலைவராக ஏற்கலாம்.

ஆனால் அதற்கும் தகுதி இல்லை என்பதுதான் இன்றைய நிலை. அதனால்தான் இப்போது சில தலைவர்கள் நாள்தோறும் தங்களது சொல் மற்றும் செயல்களால் மீம்ஸ்ளுக்கு தீனி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு அமைச்சர் வைகை அணை நீர் ஆவியாகாமல் இருக்க தெர்மகோல் (பாலிஸ்டிரீன்) கொண்டு மூடுகிறார். மற்றொருவர் நொய்யல் ஆற்றுநீர் மாசுபடுவதற்கு மக்கள் சோப்பை பயன்படுத்துவதுதான் காரணம் என கண்டறிந்து




கூறுகிறார். தமிழக முதல்வர் புதுதில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேசியுள்ளார் என்கிறார் மற்றொரு அமைச்சர்.

தமிழகத்தின் துணை குடியரசு தலைவர் வெங்கய்ய நாயுடு என்கிறார் இன்னொருவர். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று, கம்ப ராமாயணத்தை எழுதியவர் சேக்கிழார் என்று கூறி அரங்கை அதிர வைக்கிறார் ஒருவர்.

சரி, நாட்டை ஆளும் தலைவர்கள்தான் இப்படி இருக்கிறார்கள் என்றால், ஆளத் துடிக்கும் தலைவர்கள் எப்படி இருக்கிறார்கள்? மீத்தேன் திட்டத்துக்கு, தெரியாமல் கையெழுத்திட்டேன் என்கிறார் ஒருவர்.

வெள்ளித்திரையில் வெகுண்டெழச் செய்யும் வீர வசனங்கள் பேசுவோர், அரசியல் கருத்தைச் சொல்லும்போது தெளிவின்றித் தடுமாறுகின்றனர். ஆர்.கே. நகர் இடைத்தேர்தல் முறைகேடு குறித்து




மாநில தேர்தல் ஆணைய முகவரிக்குப் புகார் கடிதம் எழுதுகிறார் மற்றொருவர்.

சுதந்திர இந்தியாவின் சிற்பி பண்டித நேரு, இந்தியாவின் இரும்புப் பெண்மணி இந்திரா காந்தி, கர்மவீரர் காமராஜர், ஏன் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் மீது கூட பொதுவெளியில் கடுமையான விமர்சனங்கள் இருக்கலாம்.

ஆனால் அவர்களது ஆளுமைகள் குறித்து இன்றும் சிலாகித்துப் பேசப்படுகிறது. அவர்களது காலத்திலும் இப்படிப்பட்ட கேலி, கிண்டல்கள் தனிவெளியில் பரவி இருக்கலாம். இன்றைய சமூக ஊடகங்களின் இருப்பு அன்று இல்லாமல் இருந்திருக்கலாம்.

ஆனாலும்கூட அவர்கள் இத்தனை தூரம் தரம் தாழ்ந்து போனதில்லை. அதற்கான வாய்ப்புகள் இன்றுபோலவே அன்றும் இருந்திருக்கவே கூடும்.

ஆனால் தலைமைப் பண்பு அவர்களைத் தற்காத்தது. அதனால்தான் அவர்கள் இன்றும் தலைவர்களாக மக்கள் மனங்களில் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள்.

தலைநிமிர்ந்து நின்ற தலைவர்கள் ஆட்சி செய்த இந்த நாட்டை இன்று ஆளும் தலைவர்கள் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாகி வருவது வேதனை அளிக்கிறது. தலைவர்களுக்கான அந்த பிம்பம் உடைந்து வேடிக்கை மனிதர்களாக வலம் வரத் தொடங்கி இருப்பது நாட்டுக்கு நல்ல அறிகுறி அல்ல.




தலைவர்கள் கேலிப் பொருளாகும்போது அவர்களது தலைமைப் பண்பு கேள்விக்குறியாகிறது. தலைமைப் பண்பு கேள்விக் குறியாகும்போது அவர்களது ஆளுமையும் ஆட்டம் காணுகிறது. ஆளுமை ஆட்டம் கண்டால் அவர்களது அதிகாரத்துக்கு என்ன சக்தி இருக்கும்?

ஜனநாயகத்தில் சக்தி இல்லாத அதிகாரம் கொண்ட தலைவர்களால் யாருக்கு என்ன பயன்? தலைவர்களும், தலைவர்களாகத் துடிப்பவர்களும் சிந்திக்க வேண்டிய தருணம் இது.





தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

# அமெரிக்கப்

## மார்ட்டின் லூதர் எனும் மதச் சீர்திருத்தவாதி !

அக்டோபர் 31, 2017 காலை ஜெர்மனியின் தேவாலயத்தில் வழக்கத்துக்கு மாறாக கத்தோலிக்கப் பாதிரிமார்களும், ப்ராடஸ்டெண்ட் லூத்ரன் தேவாலயப் போதகர்களும் ஒன்றாகக் கூடிப் பிரார்த்தனை நடத்தினர். "எமது தேவனே, 500 ஆண்டுகள் முன் கிறிஸ்துவத்தின் இரு வேறு மார்க்கத்தினர் இங்கு தொடங்கிய மதச் சீர்திருத்தத்துக்கான வன்முறைகளும், படுகொலைகளும் இன்று வரை தொடர்வதற்காக வருந்தி, உம்மிடம் மன்னிக்க மன்றாடுகிறோம். அன்பின் தூதுவரான இயேசுவின் உடலை நாங்கள் இத்தனை காலமும் காயப்படுத்தினோம். இனி முரண்பாடுகளை விட்டு, ஒன்றுபட்ட பிரார்த்தனையை மேற்கொண்டு உம் பெயருக்கு மகிமை சேர்ப்போம்" என மன்றாடிப் பிரார்த்தித்தனர்.




ஒரே கடவுள் என்று கூறிய மதங்கள் ஒவ்வொன்றும் தம்முன் முரண்பட்டு மிக மோசமான வன்முறைகளில் ஈடுபட்டுவருவதை உலகெங்கும் காண்கிறோம். 1,500 ஆண்டுகள் முன் கிறிஸ்துவத்தின் ஒரே தலைமை பீடமாக வாடிகனும், எதிர்ப்பேதுமற்ற சர்வாதிகாரியாகப் போப்பும் இருந்தனர். கத்தோலிக்கக் கிறிஸ்துவம் பைபிளை லத்தீன் மொழியில்தான் ஓத வேண்டும். தேவாலயத்தில் மட்டுமே இருக்க வேண்டும். பாதிரியார்கள் மட்டுமே வாசிக்கலாம். மக்களின் மொழிகளில் மொழிபெயர்க்கக் கூடாது. தேவாலயம் மன்னர்களை விடவும் உயர்வானது. திருமணமாகாது பாதிரியார்களாகவும், கன்னியாஸ்திரீகளாகவும் வாழ்வது மட்டுமே உன்னதமான கிறிஸ்துவப் பாதை என்று மக்களை அடக்கியாண்ட காலம் அது. கேள்வி கேட்பவர்களை மத விரோதிகள் என முத்திரை குத்தி எரித்துக் கொன்றனர். போப், அரசர்களையும் அடக்கியாளும் சர்வாதிகாரியாக, முரட்டுத்தனமான போர் வெறியராகக் கோலோச்சிய காலம் அது.





## '95 குறிப்புகள் !'

இந்த சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து ஜெர்மனியின் விட்டன்பர்க் நகர தேவாலயத்தின் கதவில் 1517 அக்டோபர் 31 அன்று காலை, பிரார்த்தனைக்குக் கூடியிருந்த மக்களை விலக்கி '95 குறிப்புகள்' என்ற சிறு பிரசுரத்தை ஆணியடித்து மாட்டினார் மார்ட்டின் லூதர். கத்தோலிக்க போப்பின் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து வேதாகமச் சான்றுகளுடன் அவர் தயாரித்த பிரசுரம் அது.

# பெரியார்

வெஜீவாணந்தம்

அந்தப் புரட்சிகரச் சீர்திருத்தச் செயல்பாட்டின் 500—வது ஆண்டு நிறைவு உலகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. மார்ட்டின் லூதர் ஜெர்மனியில் ஈஸ்லெபன் எனும் நகரில் தெய்வ பக்தி மிக்க கிறிஸ்துவக் குடும்பத்தில் 1483—ல் பிறந்தார். சட்டம் பயின்றுவந்த அவர், தம் கண் முன் தனது நண்பர் மின்னல் தாக்கி இறந்ததைக் கண்டு விரக்தியுற்றுத் துறவியானார்.



அப்போது கத்தோலிக்கத் தலைவராக வாடிகனில் ஆண்டுகொண்டிருந்த போப் லியோ, மாபெரும் பளிங்கு தேவாலயம் ஒன்றைப் புனித பேதுருவுக்குக் கட்ட முடிவுசெய்தார். அதற்கான நிதியைத் திரட்ட ஐரோப்பா முழுவதும் பாவ மன்னிப்புச் சீட்டுகளை விற்க முடிவுசெய்தார். “நீங்கள் செய்த பாவங்கள், இனி செய்யப்போகும் பாவங்கள், மேலும் உங்கள் முன்னோர் செய்த பாவங்களையும்கூட மன்னித்து, பரலோகத்துக்குச் செல்வதற்கான கடவுச்சீட்டு இது” என விளம்பரம் செய்யப்பட்டது. மக்களின் அறியாமையைக் காசாக்க மன்னிப்புச் சீட்டு விற்க முகவர்கள் நியமிக்கப் பட்டார்கள்.

இந்த மோசடியை எதிர்த்து ஆர்ச் பிஷப்புக்குக் கடிதம் எழுதினார் மார்ட்டின் லூதர். பலன் ஏதும் இல்லை. வேறு வழியின்றிதான் அந்தப் பிரசுரத்தை மக்கள் அறியும் வண்ணம் தேவாலயத்தில் வெளியிட்டார். பின் மார்ட்டின் லூதரின் மாணவர் ஒருவர், அதை ஜெர்மன் மொழியில் அச்சிட்டு மலிவு விலையில் நாடு முழுவதும் பரப்பினார். அது ஐரோப்பா முழுவதும் பரவியது.




## எதிர்ப்பும் ஆதரவும்

‘மனம் திருந்துதல் என்பது மனதுக்குள் நடக்க வேண்டியது. இறைவனிடம் மன்றாடிப் பெற வேண்டியது. அதைப் பாவமன்னிப்புச் சீட்டு வாங்கிப் பெற முடியாது. காசு கொடுத்தோ புனித யாத்திரை மேற்கொண்டோ பெற முடியாது’ என்று பிரச்சாரம் செய்தார். இதனால் ஆத்திரமுற்ற பாதிரியார்கள் லூதரைக் கைதுசெய்ய வேண்டும், தண்டிக்க வேண்டும் எனக் கூச்சலிட்டனர்.

லூதர் மீது மரியாதை கொண்ட மன்னர் ப்ரெட்ரிக் நாடாளுமன்றத்தில் போப்பின் பிரதிநிதி கஜேட்டனுடன் விவாதம் நடத்தி முடிவுசெய்யலாம் எனக் கூறினார். விவாதத்தில் பங்கேற்ற கஜேட்டன், போப் லூதரை எரித்துக் கொல்ல உத்தரவிடுவாரென மிரட்டினார். எனவே, மன்னர் மார்ட்டின் லூதரை இரவோடு இரவாகத்




தப்பச்செய்தார். தன் தலைமறைவு வாழ்க்கையிலும் தமது செயலின் நியாயத்தை விளக்கி ஒரு பிரசுரம் வெளியிட்டார் லூதர். அதில் சர்வாதிகாரியான போப் கிறிஸ்துவுக்கே எதிரானவர் என்றார்.

லீப்சிக் பல்கலைக்கழகத்தில் மீண்டும் ஒரு விவாதம் ஏற்பாடுசெய்யப்பட்டது. லூதரின் நியாயம் சார்ந்த வாதத்தால் இளைஞர்கள் ஈர்க்கப்பட்டனர். ஆத்திரமடைந்த போப்பின் ஆதரவாளர்கள் லூதரின் உருவ பொம்மையை எரித்தனர்.

## மரண தண்டனை

லூதர் ‘ஜெர்மனியின் உயர் பண்பாளர்களுக்கு’ எனும் பிரசுரத்தை வெளியிட்டார். அதில் ‘போப்பின் செயல்பாடுகள் விவிலியத்துக்கே எதிரானது. அமைதிக்கான காலம் முடிந்துவிட்டது. உண்மையை உரக்கப் பேசுவோம். சத்தியத்தைக் காக்க மரணத்தையும் ஏற்போம்’ என்று எழுதினார்.

அவரது செயல்பாடுகள் காரணமாக, 1520—ல் மதத்திலிருந்தே வெளியேற்றப் பட்டார். மக்கள் போப்பின் உத்தரவைத் தீயிலிட்டுக் கொளுத்தினர். ஆனால் லூதரோ ‘இது எனக்குக் கிடைத்த விடுதலை’ என்று கூறி ‘எரித்தது ஏன்?’ எனும் பிரசுரத்தை எழுதி வெளியிட்டார்.

போப் விதித்த மரண தண்டனை குறித்து விசாரிக்க லூதரை ஜெர்மன் சக்ரவர்த்தி நாடாளுமன்றத்துக்கு அழைத்தார். லூதர் தமது தரப்பின் நியாயத்தை மூன்று மணி நேரம் விளக்கினார். “போப்புக்கு எதிராக எழுதப்பட்ட பிரசுரங்கள் யாவும் இயேசுவின் போதனைகளின் அடிப் படையிலேயே அமைந்தன. எனவே, அவற்றைச் சத்தியத்தின் வழியில் தொடர்ந்து பிரசுரிப்பேன்” என்று உறுதியுடன் கூறினார். போப் நான்காம் முறையும் லூதருக்கு மரண தண்டனை விதித்தார்.



இதையடுத்து, லூதரின் நூல்களைத் தடைசெய்து, அவரை உயிருடன் எரிக்க சக்ரவர்த்தி சார்லஸ் உத்தரவிட்டார். ஆனால், ஜெர்மனியின் ப்டெரிக் மன்னர் லூதரைத் தன் கோட்டையில் மறைத்து வைத்துக் காப்பாற்றினார். தலைமறைவு வாழ்க்கையின்போதும், ‘திருமணமற்ற துறவு தேவையற்றது. வேதாகமம் வலியுறுத்தாது. பழைய ஏற்பாட்டில் முன்னோர்கள் அனைவருமே திருமணமானவர்களே’ என்று எழுதினார்.

## எளிய மக்களுக்காக

1522—ல் புதிய ஏற்பாட்டையும், பின் 1523—ல் முழு பைபிளையும் தனது தாய்மொழியான ஜெர்மனியில் மொழி பெயர்த்து வெளியிட்டார். எளிமையான மொழியில், மலிவாகக் கிடைத்த விவிலியம், லத்தீன் எனும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, சாதாரண மக்களைச் சென்றடைந்தது. மொழியாதிக்கத்துக்கு எதிரான லூதரின் போராட்டம் என்றும் பொருந்தக் கூடியதே.

லூதர் தலைமறைவாக இருந்த காலத்தில், அவரது தொண்டர்கள் வன்முறைகளில் ஈடுபட்டு, தேவாலயங்களை இடித்தனர். பாதிரிமார்களை தாக்கிக் கொன்றனர். லூதர் தன் உயிரைப் பற்றியும் கவலைப்படாமல் வெளியே வந்து, ‘தேவனின் பாதைக்கு எதிரானது வன்முறை. அன்பு வழியே இயேசுவின் வழி’ என்று எட்டு நாட்கள் நாடு முழுவதும் பயணித்துப் பிரச்சாரம் செய்தார். ஜெர்மனி பெரும் ரத்த வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்பட்டது. லட்சக்கணக்கான மக்களும், பாதிரிமார்களும், கன்னியாஸ்திரீகளும் மனம் மாறி, சீர்திருத்த மார்க்கத்தை ஏற்றனர். முதன்முதலாக ஜெர்மனியில் ஜெர்மன் மொழியில் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

போப் லியோ திடீரென மரணமடைந்தார். பின் வந்த போப் அதிரியானும் லூதர் கொல்லப்பட வேண்டுமென உத்தரவிட்டார். 1525—ல் நிலச்சுவான்தாரர்களுக்கு எதிரான விவசாயிகளின் புரட்சி எழுந்தது. வன்முறையால்

நிரந்தரமான மாற்றம் நடக்காது என லூதர் எச்சரித்தார். எனினும் தேவாலயங்களும், மடங்களும் இடிக்கப்பட்டன. ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டனர்.



## திருமணம்

1525 ஜூன் 12 அன்று, கேத்ரின் வோன் போரா எனும் கன்னியாஸ்திரீயை மணந்தார் லூதர். சத்தியத்துக்காக மரிக்கவும் தயங்க மாட்டேன் என்றார் கேத்ரின். போப் காலமென்ட் திடீரென ஜெர்மன் சக்ரவர்த்தி சார்லஸுக்கு எதிராகப் போர் தொடுத்தார். போரில் தோல்வியுற்ற போப் ஓடி ஒளிந்தார். வாடிகன் தாக்கப்பட்டது. பேதுருவின் கல்லறை, தேவாலயம், நூலகம், மாளிகைகள் அழிக்கப்பட்டன. மன்னர், மார்ட்டின் லூதருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்துசெய்தார்.

மார்ட்டின் லூதர் விவிலியத்தை சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் வினா விடையாக எழுதி வெளியிட்டார். தொழில்புரட்சியில் கண்டுபிடிக்கப்பட்ட அச்சு இயந்திரத்தால் தேவாலயத்தில் சிறைபட்டுக் கிடந்த விவிலியம், சிறுசிறு பிரசுரங்களாக அச்சிடப்பட்டு, சாதாரண மக்களையும் சென்றடைந்தது.

## ப்ராடெஸ்டெண்ட் மார்க்கம்

மார்ட்டின் லூதரின் காலத்துக்கு முன்பே போப்பின் சர்வாதிகாரத்தை எதிர்த்துப் பலர் போராடினர். அவர்கள் மத விரோதிகள் எனக் கூறி எரித்துக் கொல்லப்பட்டனர். மார்ட்டின் லூதரின் புரட்சியின் காரணமாக லத்தீன் மொழி ஆதிக்கம், போப்பின் சர்வாதிகாரம், வாடிகனில் நிலவிய ஊழல், மூட நம்பிக்கைகள், அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், புரட்சிகரமான சீர்திருத்த மார்க்கமான ப்ராடெஸ்டெண்ட் மார்க்கம் கத்தோலிக்கத்துக்கு மாற்றாக உருவானது.

ப்ராடெஸ்டெண்ட் மார்க்கத்தின் உருவாக்கத்தின் பின்னும் 25 ஆண்டுகள் மார்ட்டின் லூதர் வாழ்ந்தார். விவிலியத்துக்கான பல விளக்க நூல்களை எழுதினார். சீர்திருத்த ப்ராடெஸ்டெண்ட் மார்க்கம் பரவி வளரப் பாடுபட்டார். சமய அரசியல் மேதை எனப் போற்றப்பட்ட அவர் 1546 பிப்ரவரி 17 அன்று மரணமடைந்தார். புரட்சிகர மதச் சீர்திருத்தக்காரரான லூதரைப் போல அவரது காலத்தில் வெறுக்கப்பட்டவர் எவருமில்லை.

ஆனால், கிறிஸ்துவத்தின் மிக உன்னதமான சீர்திருத்தவாதியென அவர் உலகத்தினரால் போற்றப்படுகிறார். கத்தோலிக்க மார்க்கத்துக்கும், வாடிகனுக்கும் எதிராகப் போராடிய மார்ட்டின் லூதர் போப்புக்கு எதிரான பிரசுரத்தைத் தேவாலயக் கதவில் மாட்டிய 500—வது ஆண்டின் நினைவைச் சிறப்பிக்கும் வகையில், வாடிகனில் ஒரு தபால் தலையை வெளியிட்டார் போப் பிரான்சிஸ்.




மேலும் “மார்ட்டின் லூதர் மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவது கிறிஸ்துவர்களின் கடமை” என்று கூறிப் பெருமைப்படுத்தினார்.

## புரட்சிகர சீர்திருத்தவாதி

மகான்கள் உன்னதமான கருத்துகளைப் போதிக்கின்றனர். ஆனால், பின்னர் அதுவே மதமாக மாற்றப்படும்போது அவை தன் ஆன்மாவை இழக்கும் அவலம் ஒவ்வொரு மதத்திலும் நடப்பதைக் காண்கிறோம். ஆனால், சீர்திருத்தவாதிகள் கேடுகளை எதிர்த்து மீண்டும் மீண்டும் போராடி அறத்தை நிலைநாட்ட முயல்வதும் தொடர்கிறது.

புத்தர் தொடங்கி இயேசு, நபிகள், ராமானுஜர், வள்ளலார், விவேகானந்தர், நாராயண குரு என்று தொடரும் சீர்திருத்த மரபின் சான்றான மார்ட்டின் லூதரின் புரட்சிகரச் செயல்பாட்டின் 500—வது ஆண்டின் நினைவு இன்றும் நமக்குப் புத்துணர்வூட்டுகிறது!

# தமிழே

## தமிழர் திருநாள்

'**தை**பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள்!' தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதங்களில் தை முக்கியமானது. தை மாதத்தின் பிறப்பை அறுவடைத் திருநாளாக, பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகிறது. தமிழ்ப் புத்தாண்டின் முதல் நாளாகாவும் இந்த

தைப் பொங்கல், அறுவடைத் திருநாள் என கூறப்படும் பொங்கல் பண்டிகை, தமிழர் பண்டிகை ஆகும். பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள்.

தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் விசேஷமாக கொண்டாடப்படுகிறது. தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டில் வெகு விமரிசையாக




நாள் ஆரம்பத்தில் கொண்டாடப்பட்டது. இடையில் சித்திரைக்கு மாறிப் போனது. பின் மீண்டும் தை முதல் நாளை புத்தாண்டின் முதல் நாளாக தமிழக அரசு அறிவித்தது.

எப்படியிருப்பினும், தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற அடைமொழி இயற்கையின் பொருள் விளங்க உரைக்கப்பட்ட பொதுமொழி என்பதில் ஐயமில்லை!



தமிழர் திருநாள்...

கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை, மலேசியா,கனடா,சிங்கப்பூர்,இலங்கை,மொரீஷியஸ் உள்ளிட்ட அனைத்து உலக நாடுகளிலும் கூட விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். மலேசியா, இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் பொங்கல் பண்டிகையன்று அரசு விடுமுறையும் கூட விடுகிறார்கள்.

பொங்கல் பண்டிகையின் தோற்றம் எப்போது என்று உறுதியாகத் தெரியவில்லை. 1000 ஆண்டுகளுக்கு முன்பு வந்தது இந்த பண்டிகை ஒன்று ஒரு கூற்று உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இது கொண்டாடப்படுகிறது என்று இன்னொரு கூற்றும் உள்ளது.

சோழர் காலத்தில் பொங்கல் பண்டிகைக்கு

# தமிழே

புதியீடு என்று பெயர் இருந்தது. அதாவது, ஆண்டின் முதல் அறுவடை என்று அதற்குப் பொருள். உழவர்கள் தை மாதத்தின் முதல் நாளில், அந்த ஆண்டின் முதல் அறுவடையை மேற்கொள்வது வழக்கமாக இருந்தது. இதுதான் பின்னர் பொங்கல் பண்டிகையாக மாறியது என்கிறார்கள்.

பொங்கல் பண்டிகை மொத்தம் 3 நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகி பண்டிகை. அடுத்த நாள் பொங்கலிடும் நாள். 3வது



நாள் மாட்டுப் பொங்கல். நமக்கு காலமெல்லாம் கை கொடுத்து உதவும் மழை, சூரியன், விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகள் ஆகியவற்றுக்கு நன்றி கூறும் நல் வாய்ப்பாக இந்த திருநாள் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் திருநாளின் முதல் நிகழ்வான போகி பண்டிகையன்று, அதிகாலையில், அனைவரும் எழுந்து குளித்து, வீட்டில் உள்ள தேவையற்ற, பழையை பொருட்களை வீட்டின் முன்பு வைத்து தீயிட்டு கொளுத்துவார்கள். அல்லவை அழிந்து நல்லவை வரட்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற மொழிக்கேற்ப போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது. வீட்டுப் பொங்கல்.

2ஆவது நாளான பொங்கல், விசேஷமானது. தை மாதப் பிறப்பு நாள் இது. சர்க்கரைப் பொங்கல் என்று இந்த பண்டிகைக்குப் பெயர். புதுப்பானை எடுத்து, மஞ்சள் உள்ளிட்டவற்றை பானையைச் சுற்றிக் கட்டி, புதுப் பாலில், புது அரிசியிட்டு, வெல்லம் உள்ளிட்டவற்றைக் கலந்து பொங்கலிடுவார்கள். வீட்டுக்கு வெளியே சூரியன் இருக்கும் திசையை நோக்கி இந்த பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும். அரிசி நன்கு சமைந்து, பொங்கி வரும்போது குலவையிட்டும், பொங்கலோ பொங்கல்,





பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக என்ற குரலோடு பொங்கல் பானையை இறக்க வேண்டும். நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும், நலமும் நிலவும் என்பது ஐதீகம். மாட்டுப் பொங்கல்.

3வது நாள் விழா மாட்டுப் பொங்கல். கிராமங்கள் தோறும் மாட்டுப் பொங்கல் விமரிசையாக கொண்டாடப்படும். வீடுகள் புதுப் பூச்சு காணும். மாடுகள், பசுக்களின் கொம்புகளுக்கு புது வர்ணம் பூச்சி, நன்கு குளிப்பாட்டி, அவற்றை அலங்காரம் செய்து, மாட்டுப் பொங்கல் தினத்தின்போது படையலிட்டு வழிபாடு செய்வார்கள்.

பின்னர் மாடுகளுக்கு பொங்கலும் அளிக்கப்படும். ஆண்டெல்லாம் நமக்காக உழைக்கும் மாடுகளுக்கு நன்றி கூறும் தினமாக இது கொண்டாடப்படுகிறது. இன்றைய தினத்தின்போது மாடுகளுக்கு ஒரு வேலையும் தர மாட்டார்கள். கழுத்தில் புது மணி கட்டி, கொம்புகளை சீவி விட்டு சுதந்திரமாக



பெயர் போனவை. இதில் அலங்காநல்லூர் உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு களமாகும். தமிழர்களின் திருநாளாக, உழவர் திருநாளாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையை, தமிழர்கள் அனைவரும் தித்திப்புடன் கொண்டாட வாழ்த்துவோம்.

அதேசமயம், பல்வேறு பகுதிகளில் தமிழர்கள் பட்டு வரும் பல்வேறு அவதிகள் ஒழிந்து, வரும் ஆண்டில் எல்லா வளமும், நலமும் பெற்று அமைதியுடன் வாழவும் சூரியக் கடவுளை வணங்குவோம்!.



திரிய விடுவார்கள். இந்த இடத்தில்தான் ஜல்லிக்கட்டு தோன்றியிருக்கிறது. மாட்டுப் பொங்கலின்போது கிராமங்கள் தோறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம்.

## காணும் பொங்கல்

இப்படியாக பொங்கல் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதுதவிர நான்காவது நாள் காணும் பொங்கலாக வட மாவட்டங்களில் கொண்டாடப்படுகிறது. அதாவது உற்றார், உறவினர், நண்பர்களைக் கண்டு வாழ்த்துக்களையும் இனிப்புகளையும் பரிமாறிக் கொள்ளும் நாளாக இது கொண்டாடப்படுகிறது. சுற்றுலாத் தலங்களுக்கும், பொழுதுபோக்குமிடங்களுக்கும் இந்த நாளில் போவது வழக்கம். கன்னியாகுமரி மாவட்டத்தில் கனி காணும் நாளாக இது கொண்டாடப்படுகிறது.

## கரும்பு–ஜல்லிக்கட்டு–பொங்கல்..

பொங்கல் பண்டிகையின் மூன்று முக்கிய அம்சங்கள், கரும்பு, ஜல்லிக்கட்டு, இனிப்புப் பொங்கல்தான். இவை இல்லாமல் பொங்கல் நிறைவடையாது. கரும்புகளுக்கு பொங்கல் பண்டிகையின்போதுதான் செம கிராக்கி. இன்று முழுவதும் கரும்பு சாப்பிடுபவர்களும் இருக்கிறார்கள். அதேபோல பொங்கல் பண்டிகையின்போது கிராமங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளும் விசேஷமானவை.

அலங்காநல்லூர், பாலமேடு, காஞ்சரம்பேட்டை ஆகியவை ஜல்லிக்கட்டுக்கு







பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தமிழினம் ஒன்றுபட
பொங்குக பொங்கல்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

# ஜாதி வெறியின்

**ச**முதாயமும் நம் சரீரத்தைப் போன்றதுதான்! வயதான ஒரு சரீரத்தில் ஏற்பட்ட ஒரு நோயைக் குணப்படுத்திவிட்டு வருவதற்குள், அடுத்த பக்கத்தில் ஒரு நோய் தோன்றும். அதுபோல சமுதாயத்தில் மதக்கலவரத்தைத் தீர்த்துவிட்டு வருவதற்குள், சாதிக்கலவரம் தோன்றும். சாதிக்கலவரத்தைத் தீர்த்துவிட்டு வருவதற்குள் தொற்றுநோய் பிரச்னை தோன்றும். தேவதாசி முறைமை ஏற்படுத்தியிருக்கும் புண் புற்றுநோயைப் போன்ற புண்ணாகும். ஒரு பக்கத்தில் அடைத்தால், மறுபக்கத்தில் பொத்துக்கொண்டு வரும்.

அண்மையில் ஆந்திரா மற்றும் திருவள்ளூரை அடுத்துள்ள சித்தூர் மாவட்டங்களில் 'மாத்தம்மா' கோயிலுக்குப் பெண்களை நேர்ந்து விட்டிருக்கின்றனர். அப்படி விடப்பட்ட பெண்களுடைய ஆடைகளை ஐந்து வயதுச் சிறுவர்களை விட்டு அவிழ்க்கச் செய்திருக்கின்றனர். பிறந்த மேனிக்கு அப்பெண்கள் அங்கேயே விடப்படுகின்றனர். அப்படி விடப்பட்ட பெண்கள் கோயிலின் பொதுச் சொத்தாகக் கருதப்பட்டு, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். கோயில் வளாகத்திலேயே அப்பெண்கள் உறங்க வேண்டும். பெற்றோர்களிடம் திரும்பி வர முடியாது. தேசிய மனித உரிமை ஆணையம் இதனை, ஓர் அறிக்கையாகவே தந்திருக்கிறது.

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தில், 22 மண்டலங்களில் புத்தூர், நகரி, நாகலாபுரம், பிச்சாட்டூர், கே.வி.பி. புரம், ஸ்ரீ காளஹஸ்தி, எர்பேடு, தொட்டம்பேடு, பி.என். கந்த்ரிகா, நாராயணவனம் ஆகிய இடங்களில் இவ்வழக்கம் இருக்கிறது. மேற்கு மண்டலங்களான பாபிரெட்டிபள்ளி, தவனம்பலே, பங்காருபாலெம் ஆகிய இடங்களையும் இவ்வழக்கம் ஆக்கிரமித்திருக்கிறது. ஆந்திரப் பிரதேசத்திலும், தெலுங்கானாவிலும் இவ்வழக்கம் சம அளவில் உள்ளது.




2011—ஆம் ஆண்டிலிருந்து சித்தூர் மாவட்டத்தில் ஏழு பேர் எயிட்ஸ் நோயால் மடிந்திருக்கின்றனர். இந்த மாவட்டத்தில் 1,000—க்கும் மேற்பட்டவர்கள் 'மாத்தம்மா'க்களாக உள்ளனர். அதில் 363 பெண் பிள்ளைகள் 4 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்டவர்களாக உள்ளனர். பெண்களைக் கோயிலுக்கு நேர்ந்து விடுதலுக்கு எதிரான சட்டம், இந்த மாவட்டத்தில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.


1926—இல் சென்னை மாகாண சட்டசபைக்கு நியமனம் செய்யப்பட்ட டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, முதன் முதலில் தேவதாசி முறைக்கு எதிராகப் போர்வாளைத் தீட்டினார். 1929 வரை வாதாடி, போராடி 'டெடிகேஷன் பிரிவென்ஷன் ஆக்ட்' எனும் பெயரில் தேவதாசி முறை ஒழிப்புக்கான சட்டமுன்வடிவை நிறைவேற்றினார். என்றாலும், 1947—ஆம் ஆண்டுதான் சட்ட விதி எண்.31 இன்படி தேவதாசி ஒழிப்புச்சட்டம் அமுலுக்கு வந்தது.

கோயிலுக்குப் பெண்களை நேர்ந்துவிடும் வழக்கத்தைக் கர்நாடக அரசு 1982—ஆம் ஆண்டு தடை செய்தது. ஆந்திரப்பிரதேசம் 1987—ஆம் ஆண்டுதான், தேவதாசி முறைமைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. என்றாலும், புற்றுநோய் பொத்துப் பொத்துக்கொண்டு வருவதுபோல், சித்தூர் — திருவள்ளூர் எல்லையோரங்களில் மாத்தம்மா வடிவத்தில் புற்றுக்கட்டிக் கொண்டுதானிருக்கிறது, தேவதாசி முறைமை.

அதிகாலையில் எழுந்திருந்து கோயிலுக்கு அலகிட்டு, மெழுக்குமிட்டு, கோலமிட்டுத் தூப தீபங்கள் ஏற்றுவதற்காகக் கன்னிப்பெண்கள் நேர்ந்துவிடப்பட்டனர். தேவதாசி என்ற சொல்லுக்கு 'இறைப்பணி செய்யும் பெண்' என்பது பொருள். கோயிலுக்குத் தொண்டு செய்வதற்கென்று பெரும்பாலும் உருத்திரகணிகையர் குலத்திலிருந்தே தேர்ந்தெடுத்தனர். இதனை அப்பரடிகள் 'அருமணித்தடம் பூண்முலை அரம்பையரொடு அருளிப் பாடியர், உரிமையில் தொழுவார் உருத்திரப் பல்கணத்தார்' எனப் பாடுவார், தேவாரத்தில்!

# வன் கொடுமை

மணிவாசகர் தம் திருவெம்பாவையில், 'கோதில் குலத்தரன் தன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்' என அவர்களைக் குறிப்பார். பிணாப்பிள்ளைகள் என்றால், 'பெண் பிள்ளைகள்' எனப் பொருள். அவர்களுடைய நேரிய தூய்மை வாழ்க்கையைக் குறிக்க, 'கோதில் குலத்து அரன் தன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்' என்றார். சுந்தரமூர்த்தி நாயனார் மணம்புரிந்த பரவை நாச்சியார், உருத்திர கணிகைக் குலத்தைச் சேர்ந்தவரே ஆவார்.




தேவதாசி முறைமை சோழர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும் நடைமுறைக்கு வந்தது எனலாம். முதலாம் இராஜராஜசோழன் தாம் படையெடுத்துச் சென்ற நாடுகளை வென்ற பிறகு, அந்நாட்டுப் பெண்களை தஞ்சைக்குக் கொண்டு வந்தான்.

இப்படிக் கொண்டு வருபவர்கள் பெரும்பாலும் அவர்களைத் தங்களுடைய அந்தப்புரங்களுக்குக் கொண்டு செல்வதுதான் வழக்கம். ஆனால், அருண்மொழிச் செல்வராகிய இராஜராஜசோழன் பகைப்புலத்துப் பெண்களை தஞ்சைப் பெருவுடையாருக்குத் தொண்டு செய்வதற்கென்று அர்ப்பணித்தான்! தஞ்சைப் பெருவுடையாருக்குத் தொண்டு செய்ய அர்ப்பணிக்கப்பட்ட பெண்களுக்கு 'வேளத்துப் பெண்டிர்' எனவும் பெயரிட்டான்.

தி. இராசகோபாலன்


அடுத்து வந்த காலத்தில் அவர்கள் 'தளிச்சேரி பெண்டிர்' எனவும் அழைக்கப்பட்டனர். 'தளி' என்ற சொல்லுக்குக் கோயில் என்பது பொருள்.




'தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் தெற்குப் பக்கத்தில் வாழ்ந்த அப்பெண்களுக்குத் 'தெற்குத்தளிச்சேரி பெண்கள்' என்றும், வடக்குப்புறத்தில் வாழ்ந்த பெண்களுக்கு 'வடக்குத் தளிச்சேரி பெண்கள்' என்றும் பெயர். கோயிற் பணிகளுக்கு என்று அர்ப்பணிக்கப்பட்ட பெண்களுக்குச் சோழ அரசு முத்திரையும் (இலச்சினை) பொறித்தது. சைவக் கோயிலில் தொண்டாற்றும் தேவதாசிகளுக்குச் சூல இலச்சினையும், வைணவக் கோயில்களில் பணியாற்றும் தேவதாசிகளுக்குச் சக்கரச் சின்னமும் பொறிக்கப்பட்டதாகக் கல்வெட்டுக் கூறுகிறது (தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுப்பு எட்டாவது: கல்வெட்டு எண்.169).

ஆலயத்திற்குள் இருக்கும் கோகுலத்திற்கு ஆன்மிக அன்பர்கள் பசுக்களை வாங்கித் தானம் கொடுப்பது போல், பக்தி மேலிட்டால், பெண்களை வாங்கியும் கோயிற் பணிக்குத் தானமாகக் கொடுத்துள்ளனர். இராஜராஜன் காலத்தில் ஒருவன் நான்கு பெண்களை 700 காசுகளுக்கு வாங்கி, திருவாலங்காட்டு இறைவனுக்குத் தேவரடியாராக அர்ப்பணித்த செய்தி,

அவ்வூர்க் கல்வெட்டால் வெளிப்படுகிறது. மன்னராட்சிக்குப்பிறகு திருக்கோயில்களில் நிலவுடைமைக்காரர்களின் ஆதிக்கமும், ஜமீன்தார்களின் ஆதிக்கமும் மேலோங்கியது. கோயிற் பணிகளில் ஈடுபட்டிருந்த தேவரடியார்கள் நடனம், இசை போன்ற லலித கலைகளிலும் வல்லவர்களாக இருந்ததால், நிலவுடைமைக்காரர்கள் அவர்களை சுகபோகத்திற்கும் ஏகபோகத்திற்கும் குத்தகை எடுத்திருந்தனர். அதுதொட்டு, தேவனுக்குத் தொண்டு செய்ய வந்த தேவரடியார்கள், தேவதாசிகளாகவும் மாறத் தொடங்கினர்.




கோயிற்பணிக்கென்று தம்மை ஒப்படைத்துக்கொண்ட தேவதாசியர் குலத்தில் வம்சாவளி தோன்றியதால், பொட்டுக் கட்டும் பழக்கமும் வழக்கத்திற்கு வந்தது. ஒரு தேவதாசியின் மகள், தேவதாசியாக மாற்றப்படுகிறாள் என்பதன் அடையாளம்தான் 'பொட்டுக் கட்டுதல்' ஆகும். பொட்டு என்பது திருமாங்கல்யத்திற்கு இணையான ஒன்றாகும். ஒரு பெண் தேவதாசிக்குப் பிறந்துவிட்ட காரணத்தாலேயே அவள் தேவதாசி ஆக முடியாது. முறைப்படி பொட்டுக்கட்டி, அவளைக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதன் மூலமே அவள் தேவதாசி ஆவாள்.

இவ்விதம் பொட்டுக்கட்டும் சடங்கு அவள் தொண்டாற்றும் திருக்கோயிலில் மட்டுமே நிகழ்த்தப்பெறும். தேவதாசியாகும் பெண்ணுக்கு அவள் குடும்பத்தைச் சார்ந்த வயதான பெண்மணியால் கோயிலில் மூலவர் சந்நிதியில் இச்சடங்கு நிகழ்த்தப்படும். சில சமயங்களில் கோயிலின் அர்ச்சகராலும் இச்சடங்கு நிகழ்த்தப்படுவது உண்டு. இதனால், அப்பெண் இறைவனுக்குத் தாலி கட்டிக் கொண்டவள் என அர்த்தமாகும். இச்செய்தி, பெருந்தனக் காரர்களுக்கும், நிலச்சுவான் தாரர்களுக்கும், பெற்றவளால் தெரிவிக்கப்படும்.

'தேவதாசி ஒழிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சீர்திருத்தம்' என்று நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பேயே மகாத்மா காந்தியடிகள் தம் ஹரிஜன் பத்திரிகையில் எழுதினார். பெண்ணினத்திற்கு



ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அபாயங்களை நன்குணர்ந்த ஒரு சான்றோர், ஆங்கில ஆட்சிக் காலத்தில் ஒரு பெரிய பதவியில் இருந்தார். அவர் பெயர் தாதாபாய்.

பிரிட்டிஷ் இந்திய அரசுச் செயலாளராக இருந்த தாதாபாய், 'பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம்' எனும் பெயரில் 18.09.1912 அன்று சட்ட வடிவை அறிமுகம் செய்தார். 1947—ஆம் ஆண்டு தேவதாசி தடுப்புக் குழுவின் தலைவராக இருந்த சுப்பராயன் பரிந்துரையினால், முதலமைச்சர் ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அதனைச் சட்ட வடிவில் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

என்றாலும், தேவதாசி முறை பூவும் பொட்டோடும் பாமர மக்களிடத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. தேவதாசி முறையின் தேய்மானமே இன்றைய மாத்தம்மா முறைமை! 'மாதிகா' எனும் சமூகத்தினரிடம்தான் 'மாத்தம்மா' எனும் முறைமை இன்றும் நூற்றுக்கு நூறு வெற்றிகரமாக நடைபோடுகிறது! மாதிகா இனத்தவர், கல்வியறிவிலும், பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கியவர்கள். இவர்கள் இனத்திலிருந்துதான் 2000—த்துக்கும் மேற்பட்டவர்கள் கோயிலுக்கு நேர்ந்துவிடப் பட்டிருக்கிறார்கள்.

இவர்களில் 19 வயதிலிருந்து 30 வயதுக்குட்பட்டோர் 400 பேர்கள் இருக்கிறார்கள். 15 வயதுக்குக் குறைவான சிறுமியர் 350 பேர்கள் இருக்கிறார்கள். இக்கொடுமையைத் தடுத்து நிறுத்த தேசிய மனித உரிமை ஆணையம், தமிழக, ஆந்திர அரசுகளிடமிருந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தகவலைக் கேட்டிருக்கிறது.

தேவதாசி என்ற சொல் இந்தியாவில் பலவிடங்களில் பலவிதமாக வழங்கப்படுகிறது. ஆந்திரப் பகுதியில் மாதங்கி அல்லது விலாசினி. மராட்டியத்தில் பாசவி, கர்நாடகாவில் சூலி அல்லது சானி, ஒடிசாவில் மக, உத்தரப் பிரதேசத்தில் பாமினி, விஜயநகரம் மற்றும் ஸ்ரீகாகுளம் வட்டாரங்களில் பார்வதி எனப் பல பெயர்களில் வழங்கப்பட்டாலும், தொழில் ஒன்றுதான்!

குழந்தைகளும் கோயில்களும் சமூகத்தால் கொண்டாடப்பட வேண்டியவை ஆகும். ஆனால், இன்றைக்கு ஒன்றை வைத்தே மற்றொன்றிற்குக் கொள்ளி வைக்கிறார்கள்.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!






* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

*editor@ithamil.com*

நினைவு




# காலனை வென்ற காவிய

### எம்.ஜி. ஆரின் சொற்பொழிவுத் துளிகள்

**29.**04.1979 சென்னை மருத்துவக்கல்லூரி பொங்கல் விழாவில்...

தாய்மொழி தமிழ் என்று தெரிந்து கொள்ளாதவர்களுக்குத் தாய்மொழி தான் மருந்து. இதற்கு வேறு மருந்து தர முடியாது.

சென்னை மருத்துவக் கல்லூரி வாசலில், தமிழில் பெயர்ப் பலகை வைக்கப்பட வேண்டும். மருத்துவக் கல்லூரி கட்டடத்திற்கு உட்பட்ட பகுதிகளில், முக்கியமான இடங்களில் எல்லாம் நல்ல கருத்துகளை எடுத்துச் சொல்லும் திருக்குறள்களை பலகைகளில் எழுதி வைக்க வேண்டும்.



தமிழ் மொழியை எந்த வகையிலும் இரண்டாந்தர மொழியாக ஆக்கத் தமிழகம் ஒப்பாது! தமிழக அரசு எந்த தியாகத்தையும் செய்து தமிழைக் காப்பாற்றும்.



### அண்ணாவின் 52–வது பிறந்தநாள் விழாவில்...

'நானறிந்தவரை திராவிட மக்களுக்கு குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு கிடைத்துள்ள அறிஞர் பெருந்தகை அண்ணாவைப் போல் எழுத்தாலும், பேச்சாலும், சொல்லாலும், செயலாலும், அன்பாலும் நல்லறத்தின் வழி நிற்கும் பண்பாலும், 'அமைதி ஆனால் ஆர்த்தெழுந்தால் புயல் தான்' என்ற உணர்வாலும், 'அரசியல் அறிவு என்பது மக்களின் வாழ்க்கைக்கு பயன்படாத வரட்டுத் தத்துவம் அல்ல... இருளில் கிடக்கும் மக்களுக்கு வாழ்வின் ஒளியைக் காட்டும் அரும் பணிதான் அரசியல்' என்பதை விளக்கும் திறனாலும், தொட்டது துலங்கும், பட்டது துளிர்க்கும் என்பதுபோல் போராட்டம் என்றாலே வெற்றி தான் என்ற புதியதோர் இலக்கணத்தை ஏற்படுத்திய பேராற்றலாலும் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத மாபெரும் தலைவராய், உலகிலேயே எந்தத் தலைவரும் பெறாத பெரும் பேறான ஒரு நாட்டின் மக்களுக்கு அன்பு அண்ணாவாய், விளங்குகின்ற தலைவர் இல்லை என்றே கூறுவேன்.'

### 1984 அன்னை தெரசா பல்கலைக் கழக திறப்பு விழாவில்...

அன்னை தெரசா அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந்த போதும், எழுந்து நடந்த போதும் அவர் நடமாடும் போதும் என் அன்னையைப் போல் இருந்தார்.

என் தாய் உயிருடன் இருந்திருந்தால் இவரைப்

### இரங்கூனில் அறிஞர்




போலத்தான் இருந்திருப்பார். இவருடைய உயரம் தான் என் தாய். அவர் பேசும் போதும் என் தாய் அறிவுரை கூறுவது போல் இருந்தது. அவர் என்னுடைய தாயைப் போல நல்ல கருத்துகளை கூறிவந்தார்.



### 1965–ஆண்டு காமராஜரின் பிறந்தநாள் விழாவில்...

காமராஜர் 'தனக்கென வாழாத நல்லவர், முதல்—அமைச்சர் பதவியை தூக்கி எறிந்தவர். தொண்டராய், தோழனாய் இருந்து மக்கள் சேவை செய்ய முடியும் என்று கருதி, தன் பதவியைத் துறந்தார். சாதாரண கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரும் இதைப் பின்பற்ற வேண்டும். காமராஜர் ஏழை! அவர் பண வசதி உள்ளவர் என்று யாருமே இதுவரையில் மேடையில் கூறியதில்லை, கூறவும் துணிவு கிடையாது, அந்த அளவுக்கு காமராஜர் ஏழையாக இருக்கிறார். தம்மையே நாட்டுக்குத் தியாகம் செய்யும் வகையில் அவரது சேவை இருக்கிறது. அவருடைய லட்சியம் தான் எங்களுடைய லட்சியம்! எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. வழி வேறாக இருக்கலாம். லட்சியம் ஒன்று தான்.




தலைவர் காமராஜரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் எனக்குண்டு. என் தாய் அடிக்கடி கூறுவாரகள் 'உன்னைப் பற்றி யார் குறை கூறுகிறானோ, அவனையே நீ நண்பனாகக் கொள்ள வேண்டும். புகழ்ந்து பேசும் நண்பர்களைக் கைவிட வேண்டும்' என்று. அது போல காமராஜர் யாரிடம் பழகினாலும் ஒவ்வொருவருடைய குறைகளையும் எடுத்துச் சொல்லித் திருத்துவார்.

### 21.11.1983 சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற எம்.ஜி.ஆருக்கு, நேரு விளையாட்டு அரங்கில் நடந்த பாராட்டு விழாவில்...

'ஒரே தாயின் கையால் உண்டு வளர்ந்தோம்' என்று சிவாஜி கூறினார். என் தாய் எங்கள் இருவருக்கும், அதேபோல் சிவாஜியின் தாய் எங்கள் இருவருக்கும் உணவைப் பரிமறி இருக்கிறார்கள்.

'என் மறைந்த மனைவியின் மரணத்தின்போது யார் யாரெல்லாமோ வந்தார்கள். அப்போது என் வீட்டிற்கு வந்த சிவாஜியைப் பார்த்துத்தான் கதறி அழுதேன். மனிதனுக்கு துன்பம் நேரும்போது நண்பன் சகோதரனாகிறான். சிவாஜியைப் பார்த்ததும் பொங்கி வந்த துக்கத்தை அடக்க

முடியாமல் பீறிட்டு அழுதுவிட்டேன்.'

'பாழாய்ப்போன அரசியல் நம்மைப் பிரித்து விட்டதே: என்று சிவாஜி சொன்னார். அண்ணன் தம்பி உறவைப் பிரிக்க முடியாது... எப்போதாவது ஒன்று சேருவோம். அது எதற்காக? என்று எனக்குத் தெரியாது.

மக்களுக்கு ஒழுங்கு, ஒழுக்கத்தைக் கற்பிக்கும் நல்ல கதையம்சம் உள்ள படங்களை எடுங்கள்.



நகைச்சுவையோடு பொழுது போக்காகப் படம் எடுங்கள்.

நடிக்கும்போது பொதுவாக ஒரு கலைஞன் கொள்கையோடு நடிக்க வேண்டும்.

படம் பார்த்துவிட்டு தியேட்டரை விட்டு ரசிகர்கள் செல்லும் போது புதிய பாடம் கற்க வேண்டும். என்று, அன்று சொன்னவர் அண்ணா..

15, செப்டம்பர், 1983 வீர — தீரச் செயல்களுக்காக தமிழக முதல்வர் விருது வழங்கும் விழாவில்...

இளைஞர் சமுதாயம் வளர வேண்டும், வாழ வேண்டும். அவர்கள் கற்று, தாங்களும் வளர்ந்து நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டும்.




ஏதோ வழி தெரியாமல், வேறு பாதைக்குச் சென்று விடாமல் உண்மை தெரிந்து திருந்தி வாழ வேண்டும். இந்த வகையில் தான் சில நாட்களுக்கு முன்பு பத்திரிக்கை நண்பர்கள் மூலம் என்னுடைய வேண்டுகோளை வெளியிட்டேன். நான் விடுத்த அந்த வேண்டுகோள் பலன் பெற்றிருக்கிறது. அப்படி முன் வந்தவர்கள் ஒருவராக இருக்கலாம், 10 பேராக இருக்கலாம். இவர்கள் லட்சக் கணக்கானவர்களுக்கு வழிகாட்ட முடியும். இப்படி, பதக்கம் வழங்குவது மற்றவர்களுக்கும் ஒரு உத்வேகத்தை உருவாக்குவதற்காகத் தான்.

நல்ல மாணவர்களை உருவாக்குவது, நல்ல ஆசிரியர்களின் பொறுப்பு. அதுபோல நாட்டில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருப்பதற்குச் சமுதாயத்தில் உரைகல்லாகக் காவலர் இருக்க வேண்டும். காவல்துறையினர் நியாயமாக, நேர்மையாக, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் அன்பு, பாசம், பரிவுக்குச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.

## 15.01.1979 தமிழ் பேரறிஞர்களுக்கு விருது, அரசு கலைஞர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியில்...

கட்சியை ஒதுக்கிவிட்டு, ஜாதியை ஒதுக்கிவிட்டு, மதத்தை ஒதுக்கிவிட்டு தமிழைப் போற்றி பாதுகாத்து வளர்ப்பதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிக் குறிப்பிட்டனர். உயிர் எழுத்தில் மாற்றம் தேவையில்லை, மாற்ற முடியாது. இப்போது பிரச்சினை வராது என நினைக்கிறேன். அனைவரும் ஒப்புக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

சங்க இலக்கியங்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டி உள்ளது. தமிழைக் காப்பாற்றியாக வேண்டும். இதை அனைவரும் ஒரு சேர, ஒரே குரலாக ஒலித்தாக வேண்டும். இந்தப் பிரச்சனையில் தமிழ் முன்னால், அரசியல் அதே சமயம் தன் குடும்ப நிலையை அவர்கள் கவனிப்பதில்லை. மற்றவர்களைப் போல் ஆடம்பரமாக இருக்கவே

ஆசைப்படுகிறார்கள்.. நாமும் ஏன் அவர்களைப் போல் இருக்கக் கூடாது? என்று எண்ணுகிறார்கள்.

தாய் தந்தை எப்படி கஷ்டப்பட்டு படிக்க பணம் அனுப்புகிறார்கள்? எப்படி நம்மை நம்பி இருக்கிறார்கள்? படித்து எதிர்காலத்தில் அவர்களை வாழ வைப்போம் என்று நம்பி



இருக்கிறார்கள்! என்ற எண்ணம் வருவதில்லை. ஆனால் இந்த நிலை இல்லாமல் தாய் தந்தை எதிர்பார்க்கும் நிலையை அடைய நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும்.

நாம் கவனமாகப் பழக வேண்டும். வசதிகளைக் குறைத்துக் கொள்ளப் பழக வேண்டும். எவ்வளவு குறைந்த அளவு செலவு செய்ய முடியுமோ, அந்த அளவுதான் செய்ய வேண்டும். அப்போது தான் தவறுகளில் இருந்து தப்ப முடியும்.

## 15.04.1976 'உன்னை விட மாட்டேன்' படத் துவக்க விழாவில்...

என்னை யார் பயன்படுத்திக் கொள்ள விரும்பினாலும் நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துகளை மக்களுக்கு அறவழியை, அன்பு வழியை, பண்பைச் சுட்டிக் காட்டுகின்ற கதைகளைப் படமாக்க வேண்டும். என்னையும், நாட்டையும் புரிந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கலைத்தொண்டுக்கு எந்த அளவுக்குத் தேவையோ, அந்த அளவுக்கு என்னைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அமரர் அண்ணாவின் கொள்கைகளை நிறைவேற்ற எந்தத் துறையிலும் மனநிறைவோடு ஈடுபடவே நான் விரும்புகின்றேன். இந்தப் படத்தில் பங்கு கொள்ள எத்தனை நாள் வேண்டும்? என்று கேட்டேன். பிரச்சினை இல்லாததால் நான் ஒப்புக் கொண்டேன்.

கலை உலகில் எந்தப் பிரச்சினைகள் இருந்தாலும் ஒற்றுமை குறையக் கூடாது. ஆனால் இங்கு ஒற்றுமை உணர்வு குறைவாக இருக்கின்றது.

## 21.10.1983 அமைச்சர் காளிமுத்து தம்பி வீரபாண்டியன் மணவிழாவில்...

கலை நிகழ்ச்சியானாலும் சரி அல்லது வேறு எந்த நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, மக்கள் தங்கள் கவலைகளை மறக்கும்படி செய்ய வேண்டும். 2 அல்லது 3 மணி நேரம் மக்கள் தங்கள் கவலைகளை மறந்து




மகிழத்தக்கதாக கலை இருக்க வேண்டும்.

அதே சமயத்தில் அண்ணா சொன்னது போல், ஒரு பெரிய கருத்தையும் இணைத்துச் சொல்வதாகவும் இருக்க வேண்டும்.

மணமக்கள் தங்கள் பிரச்சனைகளை தாங்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். மூன்றாமவர் மத்தியஸ்தத்திற்கு இடம் தரக் கூடாது.

## 1983–கமலஹாசன் நற்பணி மன்ற முதல் மாநாடு...

ஒரு நடிகள் எப்படி இருக்க வேண்டும் என்றால் தாமரை இலையில் தாண்ணீர்த் துளிபோல் இருந்து, தனது நடிப்பை வெளிப்படுத்த வேண்டும். தாமரை இலையில் தண்ணீர்த்துளி அங்கும் இங்கும் உருளும், சூரிய ஒளிபட்டு வர்ண ஜாலங்களைக் காட்டும். அதே சமயத்தில் அது தாமரை இலையிலும் ஒட்டாது, அதுபோல் தான் நடிகர்கள் தங்கள் நடிப்பைக் காட்ட வேண்டும்.

ரசிகர் மன்றங்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பது முக்கியமல்ல. கட்டுப்பாடு தான் முக்கியம். ரசிகர் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் மக்களோடு சேர்ந்து சேவை செய்ய வேண்டும்.



ரசிகர் மன்றங்கள் தங்கத்தை உரசி தரம் அறிய உதவும் ‘உரைகல்‘ போன்றவை.

## 27.01.1978 சென்னை, ராஜாஜி மண்டபத்தில் நடந்த ‘கலைமாமணி’ விருது விழாவில்...

சினிமாத் துறையில் இப்போது ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முத்தக்காட்சி தமிழ்ப்படத்தில் வர இருப்பதாக பத்திரிக்கையில் செய்தி வந்தது. தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலாச்சாரத்தைக் காக்கப் பாடுபடும் தொண்டன் என்கின்ற முறையில் கூறுகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரை தமிழ்க் கலாச்சாரத்துக்கு, பண்பாட்டுக்கு விரோதமான முத்தக்காட்சிகளை அனுமதிக்க முடியாது. தமிழ் மக்கள் அதை ஏற்க மாட்டார்கள். எனவே தமிழ் நாட்டுக்குள் உள்ள கொட்டகைக்குள் தமிழ்ப்படங்கள் முத்தக் காட்சியுடன் திரையிடப்பட்டால் அது தமிழர் போராட்டமாக மாறிவிடும். தமிழ்க் கலாச்சாரத்தைக் காக்க, அண்ணா முதல்வராக இருந்த போது பேரணி நடத்தினார். ஆட்சிக்கு வந்துவிட்ட போதிலும், தமிழ்க் கலாச்சாரத்துக்கு ஆபத்து வரும் நேரத்தில் நானே முன் வந்து, மக்களை அழைத்து ஊர்வலம் போகும் நிலை ஏற்படும். சட்டம் பார்த்துக் கொள்ளும் என்று கூற நான் தயாராக இல்லை.

## 1978– ‘இரட்டை மனிதன்’ படத் துவக்க விழாவில்...



திரைப்பட உலகம் எந்திரத்தால் மட்டுமே இயக்கிவிடக் கூடியதல்ல, அனைவரும் உழைத்தாக வேண்டும். அனைவரின் முயற்சியினாலும் தான் இந்தத் திரைப்பட உலகை உயர்த்த வேண்டும்.

## 15–4–1978 அன்று சென்னையில் நடைபெற்ற இந்திய – சோவியத் நட்புறவுக் கழகத்தின் 31–வது ஆண்டு விழாவில்...

உறவு என்பது கொள்வினை, கொடுப்பினை என்பார்களே அதுபோல ஒருவர்க்கொருவர் இடையே உள்ள சொந்தத்தைக் குறிப்பதாகும். நட்பு என்பது அனுபவத்தில், பழக்கத்தில் ஏற்படுகின்ற தொடர்பைக் குறிக்கும்.

இவரிடம் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால் என்ன லாபம் என்ற நினைப்பு வருமானால், அது உண்மையான நட்பாக அமையாது. அது சந்தர்ப்பவாத தன்னல உறவு, லாபநட்ட கணக்கு பார்ப்பது உண்மையான நட்பு இல்லை.

எப்போதுமே பாராட்டிப் பேசுகிறவர்களிடமும், முகமன் கூறுகிறவர்களிடமும் நட்பு கொள்வது ஆபத்து. எப்போதுமே ஒருவனை பாராட்டிக் கொண்டிருந்தால் அவனுக்கு தலைக்கனம் வந்துவிடும். புகழ்ச்சி கேட்பதில் மகிழ்ச்சி ஏற்படும். அப்போது புகழாதவனைக் கண்டால், கோபமும் இகழ்ச்சியும் எரிச்சலும் ஏற்படும். பழி வாங்கலாமா என்று கூடத் தோன்றும், நட்பு முறிந்தாலும் பரவாயில்லை; தவறுகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நினைக்கும் நல்லவனை நண்பனாகக் கொள்ளவேண்டும். இத்தகையவர்களுடன் ஏற்படும் நட்பு, அதன்பின் ஏற்படும் உறவு அது உயர்ந்த தத்துவமாக விளங்கும்.

## 20.10.1963 இந்திய இதய இயல் கழகமும், நுரையீரல் மற்றும் இரத்தக் குழாய்கள் அறுவை மருத்துவ நிபுணர்கள் கழகமும் இணைந்து நடத்திய மாநாட்டில்...

மருத்துவர் என்று வந்துவிட்டால் எதிரிக்கும் ஒரே சிகிச்சைதான், நண்பருக்கும் அதே சிகிச்சை தான். சிகிச்சையின் தகுதியை நீங்கள் உயர்த்தும்போது, அதன் செலவைக் குறைக்க வேண்டும் என்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். தகுதியை உயர்த்துங்கள்; செலவைக் குறையுங்கள். அதற்குரிய வழியையும் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். வழியைக்



கண்டுபிடிக்காமல் சிகிச்சையின் செலவைக் குறைக்க முடியாது. நீங்கள் உயிர் அளிக்கிறீர்கள்; நாங்கள் உணவு அளிக்கிறோம். மக்கள் உண்ண உணவினை நாங்கள் கொடுக்கிறோம். நீங்கள் உயிரைக் கொடுங்கள். உயிரைக் கொடுத்துவிட்டு, உணவின்றி வாழச் சொல்வது முறையாகாது. நான் இங்கே இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். நீங்கள் உழைக்கும் உழைப்பு நாட்டு மக்களை வாழ வைப்பதற்கு உதவும். நாட்டிற்குச் சேவை செய்யும் எங்களுக்கு உறுதுணை புரியும்.

## 23.10.1983 பேரறிஞர் அண்ணா அறக்கட்டளை சார்பில் சிறந்த கலைஞர்கள், அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிவு வழங்கும் விழாவில்...

'கட்டுப்பாடு, நேர்மை, ஒழுக்கம்' வேண்டும். கட்டுப்பாடு எனும் போது அதற்கு ஓர் எல்லை வேண்டும். ஒருவரை வற்புறுத்தி உட்கார வைப்பது கட்டுப்பாடு அல்ல.

முன்பெல்லாம் நாடகக்காரர்கள் என்றால் வாடகைக்கு வீடு கூட கொடுக்க மாட்டார்கள். இன்று கலைஞர்களுக்கு ஏற்பட்டுள்ள பெருமை அறிஞர் அண்ணா உருவாக்கியது. அதற்கு அவர் பாலமாக இருந்து செயல்பட்டார்.

## இந்திய சுதந்திர தினத்தன்று நியூயார்க்கிலிருந்து...

ஒற்றுமையும், முயற்சியும், உழைப்பும் இல்லாமல் முன்னேற்றம் இல்லையென்பதை முன்னேறிய நாடுகளின் வரலாறு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

வன்முறை, வெறித்தனம், வதந்தி பரப்புதல், மக்களைப் பிளவுபடுத்துதல் இவற்றையே நோக்கமாகக் கொண்டுள்ள சீர்குலைவுச் சக்திகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்போம் என்று இன்று நாம் அனைவரும் சபதம் ஏற்றிடுவோம்.

கடமைகளை இன்முகத்துடன் ஆற்றி உரிமைகளைப் பெற்றிடுவோம்! ஒற்றுமையும் காத்து வளர்ச்சிக்கு வழி வகுப்போம். புதிய சமத்துவ சமதர்ம அமைப்புக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்.

"உழைப்பவரே உயர்ந்தவர்; உழைப்பே உயர்வு தரும்' எனும் மூல மந்திரத்தை மனதில் இருத்தி 'உழைப்பால் நாட்டை உயர்த்திட வாரீர்' என இரு கரம் கூப்பி அழைக்கிறேன்.




வாழ்க சுதந்திரம்! வாழ்க இந்தியா! அண்ணா நாமம் வாழ்க!

## 30.11.68 'தீர்ப்பு நாடகப் பொன்விழாவில்...

நான் ஒரு நாத்திகனா? இல்லவே இல்லை. என்னைப் பற்றி பலர் தவறாக இப்படி புரிந்து கொண்டு தவறாகவும் எழுதி வருகிறார்கள். உண்மையாக நான் நாத்திகன் அல்ல. எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. 'ஒருவனே தேவன்' என்ற கொள்கையை உடையவன் நான். நம் சக்தியை எல்லாம் மீறிய ஒரு சக்தி இருக்கிறது. அதைத் தான் நாம் கடவுள் என்று சொல்கிறோம். வழிபடுகிறோம். பலர் இந்தச் சக்திக்கு பல உருவம் கொடுத்துப் பெயர்கள் கொடுத்து கடவுளாக வணங்கி வழிபடுகிறார்கள். நான் என் தாயின் உருவத்தில் அந்தச் சக்தியை இப்போது வழிபட்டு வருகிறேன். அப்படியானால் நான் கோவிலுக்கு போனது கிடையாதா? போயிருக்கிறேன். 'மர்மயோகி' படம் கோவை சென்ரலில் நடைபெற்ற போது நான் பழனி மலைக்குப் போய் முருகனை தரிசித்து வந்திருக்கிறேன்.



# நிலையுணர்வு

புறக் கண்களுக்கு ஒருபோதுமில்லை!
அகக்கண்களுக்கு மட்டுமே சாத்தியம்
என்றாகிவிட்ட உன்னை
மனக்கோயில் தவிர
வேறெங்கும் தேடுதற்கில்லைதான்!
உள்ளம் சொல்கிறது!
உண்மை புரிகிறது!

எனினும்
காற்றசைக்கும் இலைகளாய்
சலசலக்கும் மனது ஓயாது
உன்னைப் புறவெளியில்
தேடியபடியே இருக்கிறது!

‘தேடுங்கள் கிடைக்கும்!
தட்டுங்கள் திறக்கும்!’
என்கிற வேதமும்
‘நம்பினோர் கெடுவதில்லை!’
எனும் நான்மறையும்
பொய்யென்று புறந்தள்ளவியலா
புத்தியைப் பெற்றானபின்
நம்புதலன்றி கதியில்லை காண்!

அண்டவெளியின் சூக்குமத்தை
இயற்கை நிகழ்த்தும் அற்புதத்தை
விளங்கவியலாமல்
விரல் சூப்பும் குழந்தையின்
வியப்புடன் நோக்குகின்றேன்

உனது நடை உடை பாவனையுடன்
அசலாகத் தோன்றி
ஆரத் தழுவிய கரங்களில்
நிகழ்ந்தவொரு அற்புதத்தில்
ஒளிந்திருக்கிறது
அண்டவெளி ரகசியமெனும்
தேவாமிர்தத்தின் ஒரு சொட்டு!

கொற்றவன்

சிறுகதை

# வண்ணக்கிளி... சொன்ன மொழி!...

## கொற்றவன்

மலர்விழிக்கு மகிழ்ச்சி கொள்ளவில்லை! குதூகலத்தில் குதித்துத் துள்ளினாள்.

ஆம்! இதே முகம்தான்! இந்த முகம்தான் என் வாழ்வின் இன்பமயம்!

மீண்டும் ஒருமுறை துள்ளிக் குதித்தாள். அந்தக் குதிப்பில் அருகில் கிண்ணத்தில் இருந்த வண்ணக் குழம்புகள் தளும்பின.

தன் கையிலிருந்த தூரிகையை இதழ்களில் ஒற்றி முத்தமிட்டாள்.

தன் மனத்தடாகத்துக்குள் நீந்திக் கொண்டிருந்தவனின் முகத்தை வடித்துவிட்ட அந்த மயிலிறகு தூரிகையைத் கன்னத்தில் ஒற்றிக் கொண்டு, தான் வரைந்திருந்த ஓவியத்தில் புன்னகை தவழும் முகமாய் பொலிந்தவனின் உருவத்தையே வெறித்தபடி நின்றிருந்தாள்.

வாளொத்த கூர்விழியால் தன்னை உற்று நோக்கும் அந்த ஓவியத்தின் இதழ்கள் மெதுவாய் அசைவது போலத் தோன்றியது மலர்விழிக்கு. வியப்பில் அவளுக்கு விழிகள் விரிந்தன. அதரங்கள் துடித்தன. மேனி சிலிர்த்தது.

அவள் கையிலிருந்த தூரிகை நழுவி கீழே விழுந்தது.

"மலர்விழி..."




ஒலித்த குரல், மலர்விழியைச் சுயவுணர்வு பெறச் செய்தது.

"ஐயோ, தாத்தா...." உதடுகள் முணுமுணுக்க பரபரப்படைந்தாள். ஓவியத்தை மறைத்து வைக்கும் முயற்சியில் இறங்கினாள்.

பெரும் மூங்கில் படலைத் திறந்தபடி உள்ளே வந்த பெரியவர், தன்னுடன் வந்திருந்த முதியவரைப் பார்த்து, "உங்கள் வரவால் இந்தக் குடில் பெருமையடைகிறது புலவரே! வாருங்கள்!" எனக் கைகூப்பி வரவேற்றார்.

"ஐயா, என் உயிரைக் காத்த வீரர், என்னை வணங்குவதா?" முதியவர் தன் கரங்களைக் கூப்பித் தொழுதபடி வினவினார்.

"இருக்கலாம் புலவரே! தாங்கள் இப்போது என் குடிலுக்கு விருந்தினர்! எனவே விருந்தினரைப் புரக்கும் தமிழ்ப் பண்பில்தான் தாங்களை வரவேற்கிறேன்!"

வண்ணச் சாந்துகளையும் ஓவியத்தையும் அடுக்களையில் மறைத்தாகிவிட்ட நிம்மதியுடன், கைகளைச் சேலைத் தலைப்பில் துடைத்தவாறே வாசலுக்கு விரைந்து வந்தாள் மலர்விழி.

"வாருங்கள் தாத்தா!" வாஞ்சையுடன் அழைத்தவள், அடுத்தகணம் பெரியவரின் உடம்பில் இருந்த காயங்களைப் பார்த்துப் பதறினாள்.

"தாத்தா என்ன ஆயிற்று? எப்படி இவ்வளவு காயங்கள்?" ஓடி வந்து பெரியவரின் கைகளைப் பற்றிக் கொண்டாள். பெரியவரின் முகம், மார்பு, தோள்கள், கால்கள் என ஏகத்துக்கும் குருதிக் கோடுகள்! கடும் காயங்கள்! அவர்



கையில் இருந்த வேல்கம்பிலும் குருதிக் கறைகள்.

“தாத்தா... என்னவாயிற்று தங்களுக்கு?” மலர்விழியின் கண்களில் நீர்த் துளிர்த்தது.

“அம்மா! பதற்றமடையாதே! எனக்கு ஒன்றும் ஆகவில்லை! விவரமாகச் சொல்கிறேன், சற்றுப் பொறு!” என்றவர், தன் வேல் கம்பை அவளிடம் கொடுத்தார்.

“அமருங்கள் புலவரே!” என்றபடி புலவருக்கு ஒரு திண்ணையைக் கைகாட்டிவிட்டு, தானும் எதிர்த் திண்ணையில் அமர்ந்தார் பெரியவர்.

மலர்விழி உள்ளே ஓடிச் சென்று சில மூலிகைகளைச் சாறு பிழிந்து எடுத்து வந்தாள். பெரியவர் தான் காயம்பட்டதற்கான காரணத்தை விளக்கலானார்.

காட்டுப் பாதையில் ஒலித்த அபயக்குரல் கேட்டு ஓடிச் சென்று பார்த்தபோது, புலவரை ஒரு கரும்புலி வளைக்கப் பார்த்ததையும், வேலெறிந்து அதனைத் திசைதிருப்பி புலவரைக் காத்ததையும், புலியின் தாக்குதலில் தான் காயம்பட்டதையும் பெரியவர் சொல்லி முடித்தார். மலர்விழி வழிந்த கண்ணீருடன், பெரியவரின் காயங்களுக்கு பச்சிலை மருந்திட்டாள்.

“தாத்தா... தங்களுக்கு ஏதேனும் ஆகியிருந்தால்...” அவள் முடிப்பதற்குள் பெரியவர் குறுக்கிட்டார். “மலர்விழி எனக்கு ஒன்றும் ஆகாதம்மா! என் காயங்களைவிட, உன் கண்ணீர் தான் எனக்கு வலி தருகிறது. நீ அழக்கூடாது!” அவள் கண்ணீரைத் துடைத்து விட்டார் பெரியவர்.

“பருக ஏதேனும் கொண்டு வா




அம்மா!” பெரியவரின் சொல்லுக்கு, “இதோ நொடியில் தாத்தா” என்றபடி உள்ளே ஓடினாள் மலர்விழி.

திண்ணையில் அமர்ந்திருந்த புலவர் தன் உடைமையாகக் கொண்டுவந்த துணி மூட்டையை தன் மடியிலேயே வைத்திருந்ததைக் கண்ணுற்றார் பெரியவர்.

“புலவரே! அந்தத் துணி மூட்டை என்ன பொன் மூட்டையா? இன்னமும் ஏன் அதை மடியிலேயே சுமக்கிறீர்! இறக்கித்தான் வையுமே!”

புலவர் புன்னகைத்தவாறே தன் பொதியைத் திண்ணையில் இறக்கினார்.

“புலவரே! இப்போதாவது தங்களைப் பற்றிச் சொல்லலாமே!”

“சொல்கிறேன். அதற்கு முன் தாங்கள் யார்? ஏன் இந்த அத்துவானக் காட்டில்.... இந்தப் பெண் யார்?” கடகடவெனக் கேள்விகளை அடுக்கினார் கிழப் புலவர்.

இந்தப் பெரும் குடிலையும் உயர்ந்த மூங்கில் வேலிகளையும் அமைத்துக் கொண்டு இந்த அபாயகரமான காட்டுக்குள் இவர்கள் ஏன் இருக்கிறார்கள் என்ற வினா புலவருக்குள் எழுந்ததை அவரது வினாக்கள் விளங்கப்படுத்தியது.

“ஏன்? என்னைக் கண்டால் உங்கள் பொன் மூட்டையை அபகரித்துக் கொள்பவன்போல் இருக்கிறதா?”

“ஐயா! என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்? என் உயிரைக் காத்த தங்களையா நான் கள்வன் என்று எண்ணுவேன்? என்னைக் காயப்படுத்தாதீர்கள் ஐயா!” புலவர் அந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டு தலைகுனிந்தார்.




அப்போது மலர்விழி வாசலுக்கு வந்தாள்.

“புலவரே! நான் வேடிக்கைக்காகத்தான் சொன்னேன். பெரிதுபடுத்த வேண்டாம்! இதோ... சுக்குத் தண்ணீர் அருந்துங்கள்! தங்கள் களைப்புப் பறந்தோடி விடும்!”

சூடான சுவைமிகு சுக்குத் தண்ணீர் அந்த வேளையில் இதமாக இருந்ததைப் புலவரின் முகம் காட்டியது.

“அடடா!! இப்படியொரு சுக்குத் தண்ணீர் இந்தக் காட்டில் கிடைப்பதை என்னவென்று சொல்ல?” சற்று முன்பு இருந்த கரும்புலியின் பேராபத்தையும் இப்போது இருக்கும் நாச்சுவையின் இன்பத்தையும் எண்ணிப் பார்த்தார் புலவர். அவரது இதழ்களில் முறுவல் படர்ந்தது.

“இரண்டு நாட்களுக்கு முன்னர் பரிசளித்த எம் மன்னர் இப்போது உயிருடன் இல்லை! இரண்டு நாழிகைக்கு முன் உயிரிழக்க வேண்டிய நான் இப்போது சுக்குநீர் அருந்துகிறேன்! வாழ்க்கையின் விசித்திரத்தை என்னவென்பது?” புலவர் அவலச் சுவையுடன் சிரித்தார்.

“புலவரே! எந்த மன்னரைச் சந்தித்தீர்? அவர் எப்படி இருந்தார்?” துணுக்குற்றவராய் கேட்டார் பெரியவர்.

“அதிர்ச்சியடைய வேண்டாம். இந்த சேரநாட்டு மன்னருக்கு எதுவும் ஆகவில்லை! எங்கள் சோழநாட்டு மன்னர் கிள்ளி...”

புலவர் சொல்லி முடிப்பதற்குள் துள்ளி எழுந்தார் பெரியவர், “புலவரே! என்ன உளறுகிறீர்?” கோபத்தில் கத்தினார்.

அவரது அதிர்ச்சியையும் ஆவேசத்தையும் கண்ட புலவர் ஆடிப் போனார். “கிள்ளி வளவர் எப்படி இறந்தார்? புலவரே நடந்ததைக் கூறுங்கள்!” புலியின் உறுமலெனக் கேட்டார் பெரியவர். அவர் மனதில் என்னென்னவோ எண்ணங்கள் ஓடின.

அதற்குமேல் தாமதிக்காத புலவர், சோழ மன்னனைக் கண்டு வந்த விவரத்தைக் கூறத் தொடங்கினார்.

சேர மன்னன் மாந்தரஞ்சேரலை முறியடித்த பின் பகைநாடுகளின் மீது போர் தொடுக்கும் போக்கினைக் கைக்கொண்டிருந்த கிள்ளி வளவன், போர் முகம் பூண்டு சேரநாட்டுக் குளமுற்றத்தில் பாசறை அமைத்திருந்தான்.

சேரத் துறைமுகம் முசிறியின் அழகைக் காணப் புறப்பட்ட சோழநாட்டின் எருக்காட்டூர் தாயங்கண்ணனார், கிள்ளி வளவன் சேரநாட்டில் தங்கியிருப்பதை கேள்வியுற்று, அவனைக் காண விரைந்தார்.

இரவுப் பொழுதானதால் பாசறையில் காவல் மிகுந்திருந்தது. இப்போது உள்ளே புகுவது வீண் சிக்கலை ஏற்படுத்தும் என்பதால் விடியும் வரை காத்திருந்தார் தாயங்கண்ணனார்.

விடியலின் வரவைப் புள்ளினங்கள் அறிவித்ததுமே, புலவர் தனது தாடாரிப் பறையை எடுத்துக் இசைக்கத் தொடங்கினார். பாணரின் பறையோசைக் கேட்டதும் பாசறை வீரர்கள் பரபரப்படைந்தனர்.

அந்தப் பறையோசை துயில் கொண்டிருந்த மன்னன்



செவியிலும் வந்து மோதியது. தாயங்கண்ணனாரின் தம் பாடல் மூலம் அவனைத் துயிலெழுப்பினார்.

“சோழர் குலவேந்தே! திங்களின் ஒளி பையச் சுருங்கிற்று. வலம்புரிச் சங்குகள் ஒலிக்கின்றன. விடியல் இதோ வந்துவிட்டது! காவலை உடைய பாசறையில், மாலை அணிந்த மார்பனே! இந்த விடியலில் ஒலிக்கும் இன்னிசையையும் என் பண்ணிசையும் கேட்கிலையோ...”

புலவரின் தடாரிப் பறையின் இசையும், அவர் பாடிய பாடலும் அந்த காலைப் பொழுதை இனிமையான பொழுதாக மாற்றியது.

கிள்ளி வளவன் இன்முகத்தோடு புலவரை அழைத்தார்.



சேர நாட்டிலும் தன்னைப் புகழ்ந்து பாடல் கேட்க நேரிட்டதில் பேருவகை கொண்டான். கிழவர் திடாரிப் பறையை இசைக்கும் திறமையை மெச்சினான்.

பட்டாடைகள் தந்தான்! பரிசில் பல தந்தான்!

அகமகிழ்ந்து போனார் அகவை முதிர்ந்த அப்புலவர்.சோழவேந்தன் தன்னைச்சிறப்பித்தவிதம் கண்டுநெக்குருகிப்போனார்.நெஞ்சுருகிப்பாடினார்.

வலம்படு தீவிற் பொலம்பூண் வளவன்

எறிதிரைப் பெருங்கடல் இறுதிக்கண் செலினும்

தெறுகதிர்க் கனலி தென்திசைத் தோன்றினும்

என்னென்று அஞ்சலம் யாமே...” — உணர்ச்சி பொங்க மேலும் பாடினார் தாயங்கண்ணனார்.

“ஆகா! ஆகா! ஊழிக்காலமே வந்தாலும், கதிரவன் கிழக்கை மறந்து தெற்கே உதித்தாலும் எமக்கு அச்சமில்லை! நான் இருக்கிறேன், என்று எம்மைப் புகழ்ந்த புலவரே! உமது புலமையை மெச்சுகிறேன்! நான் மறைந்தாலும் கூட உமது பாட்டில் வழ்வேனய்யா! மிக்க மகிழ்ச்சி! மிக்க மகிழ்ச்சி!” எனக் கிள்ளி வளவன் கிழவரை அணைத்து மகிழ்ந்து அன்போடு அனுப்பி வைத்தான்.

இவ்வாறு கிள்ளி வளவனைக் கண்டு வந்த கதையைச் சொல்லி முடித்த புலவர், ஆனால் திடுமென என்ன நிகழ்ந்தது? போர் நிகழும் முன்பே குளமுற்றத்து மாளிகையில் மன்னன் எவ்வாறு இறந்தான் என்பது பெரும் புதிராக இருப்பதையும் சொல்லிப் புலம்பினார்.

அதைக்கேட்டு பெரியவர்




பெரும் குழப்பத்தில் ஆழ்ந்தார். இந்த இரண்டு நாட்களில் என்ன நடந்திருக்கும்? போர்முகத்தில் இறக்காமல் பாசறையில் இறந்திருக்கிறான் என்றால் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்க வேண்டும்!

இந்நேரம் சோழநாட்டில் என்னவெல்லாம் மாறுதல் நிகழ்கிறதோ... இச்சூழலைச் சாதகமாகக் கொண்டு போர்மேகம் சூழும்! சோழநாட்டின் நிலை மேலும் மோசமடைவதற்குள் உடனடியாக தான் அங்குச் சென்றடைந்தாக வேண்டுமே என்ற எண்ணம் அவருக்குள் ஓடியது.

அதேநேரம், மலர்விழியை இங்கே தனியே விட்டுச்செல்லவும் முடியாது! தன்னோடு சோழநாட்டுக்கு அழைத்துச் செல்லவும் கூடாது! என்ன செய்வது? என்ற குழப்பம் ஆட்டுவித்தது. மலர்விழியைப் பார்த்தார் பெரியவர்.

அவளும் கவலை கவ்விய முகமாய் இருந்தாள். தொடர்ந்து சோழநாட்டில் தொல்லைகளும் துயரங்களும்புயலாய்வீசிவருகின்றனவே,இது என்ன

சோதனை? என்ற எண்ணத்தில் ஆழ்ந்திருந்தாள்.

அவர்கள் இருவரையும் பீடித்த கவலைக் கோடுகளைக் கண்டு புலவர் தாயங்கண்ணனார் சிந்தனை வயப்பட்டார். சேரநாட்டைச் சேர்ந்த இவர்கள் ஏன் சோழ மன்னன் இறந்ததற்காக இவ்வளவு கவலைப் படுவானேன்? இவர்கள் ஏன் இக்கானகத்தில் தனித்து வாழ்கிறார்கள்? இந்தப் பாட்டனுக்கும் பெயர்த்திக்கும் யார் தந்த தண்டனை இது? இவர்களது புதிருக்கு விளக்கம் காண வேண்டும் என்ற எண்ணம் புலவருக்குள் தோன்றியது.



திண்ணையில் அமர்ந்திருந்த மூவரும் ஆளுக்கொரு சிந்தனை வயப்பட்டவர்களாக இருந்ததில் அந்த இடத்தில் அமைதி குடிகொண்டது.

அப்போது மூங்கில் வேலிக்கு வெளியே இருந்த பெரிய ஆலமரத்தில் வந்தமர்ந்த கிளி ஒன்று “கிகிக் க்கீ...” என்று சத்தமாய் ஒலி எழுப்பியது.

அதைத்தான் எதிர்பார்த்தவளைப் போல திண்ணையில் இருந்து துள்ளி எழுந்த மலர்விழி, அதேவேகத்தில் இதழ் குவித்து சீழ்க்கை ஒலி எழுப்பினாள்.

“மலர்விழி... மலர்விழி...” கிளியிடமிருந்து பதில் வந்தது.

அட, கானகத்தில் பேசும் கிளியா? புலவர் தாயங்கண்ணனாருக்கு தாங்க முடியாத வியப்பு! அதன்பின் நடந்ததை வியப்பு மாறாதவராய் பார்த்துக் கொண்டிருந்தார் அப்புலவர்.

கிளிக்கும் மலர்விழிக்கும் உரையாடல் நிகழ்வது போல இருந்தது. சீழ்க்கை ஒலியால் அவள் ஏதோ கேட்க, அதற்குக் கிளி தனது மொழியில் பதிலிறுப்பது போல இருப்பதைப் புலவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது.



சற்றுநேரத்தில் மீண்டும் திண்ணை அருகே வந்து நின்ற மலர்விழி, அமைதியாகச் சொன்னாள்.

“தாத்தா... நீங்கள் சோழநாட்டுக்குச் செல்ல வேண்டிய காலம் வந்து விட்டது. இனி தங்களின் விருப்பம் எதுவோ அதன்படி செய்யுங்கள்...”

“அப்படியானால்... உன்னை இங்கே தனியே விட்டுவிட்டுப் போகச் சொல்கிறாயா?”

“இல்லை, நான் எங்கு இருக்க வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள் என்கிறேன்.”

பெரியவர் தரை பார்த்தபடி அமைதியில் ஆழ்ந்தார்.

அந்நேரம் கிளி சத்தமாய் ஏதோ பாடியது. பெரியவர் அமைதியாய் மலர்விழியைப் பார்த்தார்.

“எடுத்துவிட்ட முடிவுக்கு ஏன் தயக்கம் தாத்தா?”

அவளது கேள்விக்குள் இருந்த பதிலை காலத்தின் பதிலாய் உணர்ந்தார் பெரியவர். ஆலமரத்துக் கிளியையும் மலர்விழியையும் மாறிமாறிப் பார்த்தவரின் கண்களில் ஏனோ காரணம் புரியாமல் நீர்த் துளிர்த்தது.

அங்கு நடப்பது எதுவும் புரியாதவராய் அனைத்துக்கும் சாட்சியாய் அமர்ந்திருந்தார் எருக்காட்டூர் தாயங்கண்ணனார்.

காலம் கணிக்கின்ற அதிசயங்கள் சிலநேரங்களில் மனிதர்களின் அறிவுக்கு எட்டாமல் போகலாம். ஆனால் அந்த அதிசயங்களை உணர்பவர்களையும் உள்வாங்குபவர்களையும் காலம் என்றைக்கும் உயர்த்தாமல் விடுவதில்லை!

அன்றைய பொழுதில் பெரியவர் எடுத்த ஒரு முடிவு, அவரைச் சோழநாட்டின் வேளிர்களில் ‘பொறையாற்றுக் கிழவன்’ என்று புகழ் பெறவைத்ததை அடுத்து வரும் காலம் சொல்லவிருக்கிறது.

கதைக்கு விழுந்த விதை:

- புலவர் எருக்காட்டூர் தாயங்கண்ணனார் பாடிய ‘வெள்ளியும் இருவிசும்பு ஏர் தரும்...’ புறப்பாடல் 397.
- அப்புலவரே பாடிய அகப்பாடல் 149.

# சுவரொட்டிகள்

இவற்றிக்கென்று
தனியிடம் உண்டு

முக்கியமாக
மூத்திரச் சந்துகள்...
பள்ளிக் கூடச் சந்துகள்...
பாதியில் நின்று போன
பாலங்கள்...
பாழடைந்த கட்டிடங்கள்...
சாலையோரச் சுவர்கள்

எங்கிருந்தாலும்
கவனம் ஈர்க்கும்

இங்கு நோட்டிஸ் ஒட்டாதே!
எனும் இடத்தில்
இடம் பிடித்த சுவரொட்டிகளுக்குள்
ஓர் கர்வமிருக்கும்

பழையன கழிதலும்...
புதியன புகுத்லும்...
இவற்றுக்கும் பொருந்தும்.

கிழிபடும் போது
கதறல் சத்தமோ...
இடம்பெறும் போது
சிரிப்பு சத்தமோ கிடையாது
சுவரொட்டிகளுக்கு!

ஒன்றின் இடத்தை
மற்றொன்று பெறும் போது
சண்டைகள் மூண்டதுண்டு...
மனிதர்களுக்குள்ளாக

எது எப்படியிருப்பினும்
சில தேடல்களையும்
பல தகவல்களையும்
தந்து செல்கின்றன....
சுவரொட்டிகள்!

கா.சரவணன்

## தமிழில் ஒரு விண்வெளிப் படம்!



சக்தி சவுந்தர் ராஜன் இயக்கத்தில் இந்தியாவின் முதல் விண்வெளிப் படமாக உருவாகும் படத்தில் ஜெயம் ரவி ஜோடியாக நிவேதா பெத்துராஜ் நடிக்கிறார். ஜெயம் ரவி மகன் ஆரவ் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ள இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவெற்பை பெற்றுள்ளது. இமான் இசையில் நேமிசந்த் ஜபக் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கும் இந்த படத்தை ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் வெளியிடுகிறது.

**வானம் தொடட்டும்!**

## பல்லவியின் வருகை!



செல்வராகவன இயக்கத்தில் சூர்யா நடிக்கவுள்ள படத்தின் நாயகியாக சாய் பல்லவி ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார். ட்ரீம் வாரியர் நிறுவனம் தயாரிக்கும் இப்படம், ஜனவரியில் படப்பிடிப்பு தொடங்கப்பட்டு தீபாவளி 2018—க்கு வெளியிடப்படும் என்று படக்குழு தெரிவித்துள்ளது. இப்படத்தின் நாயகியாக சாய் பல்லவி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ‘பிரேமம்’ படம் மூலம் தமிழ் ரசிகர்களைக் கவர்ந்திழுத்த சாய் பல்லவி நேரடித் தமிழ்ப் படத்தில் நடிப்பதால் எதிர்பார்ப்பு கூடியிருக்கிறது.

**பல்லக்கு பவனியாக அமையட்டும்!**

## நல்ல படம்!!



அருண்பிரபு புருஷோத்தமன் இயக்கத்தில் அதிதி பாலன், லெனின் பாரதி உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் ‘அருவி’. விமர்சகர்கள் மத்தியில் படத்துக்கு பெரும் வரவேற்பு கிடைத்திருக்கிறது. திரையுலகினர் பலர் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். ‘ஒரு சிறந்த திரைப்படம். எல்லோரையும் எல்லாவற்றையும் தோலுரித்துள்ளது.’ என்று இயக்குநர் ஷங்கர் தனது ட்விட்டர் பக்கத்தில் கூறியிருக்கிறார். அதுபோல், நடிகர் கார்த்தி, சூர்யா உட்பட பல நட்சத்திரங்களும் தங்களின் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகிறார்கள். படத்தின் நாயகி அதிதி பாலனுக்கு வாய்ப்புகள் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன.

## நல்ல பாடம்!!..



## அசத்துங்க ராஜமௌலி!

## 2017-ன் நாயகன்

இந்த ஆண்டின் மாபெரும் வெற்றிச் சித்திரமான ‘பாகுபலி’ தந்ததன் மூலம், இந்தியாவை மட்டுமல்ல, உலகத் திரைப்பட ரசிகர்களையும் வியக்கவைத்து தன் பக்கம் ஈர்த்த இயக்குனர் ராஜமௌலி இந்தியாவின் பிரம்மாண்ட இயக்குனராய் உயர்ந்திருக்கிறார். விருதுகள் பல வென்றிருக்கிறார். அந்த வகையில் இந்த ஆண்டின் சாதனைத் திலகமாய் அவரை இந்தியத் திரைப்பட உலகம், குறிப்பாகத் தென்னகத் திரையுலகம் கொண்டாடி வருகிறது!




## மண்ணும் மனிதனும் சார்ந்த பதிவுகளை

## 39. குத்தம்பாக்கம் இளங்கோ

இன்று அக்டோபர் 11. பயணத்தின் 58 —வது நாள்.

காலை 10 மணியளவில் அரக்கோணம் தாண்டி, திருவள்ளூர் மாவட்ட எல்லையில் நுழைந்தோம்.

சாலையோர டீ கடையில் இருந்தவர்கள், எதிரில் தென்பட்டவர்கள் எனச் சிலர் எங்களுக்கு வாழ்த்து கூறினர்.

'தினந்தந்தி' நாளிதழ் எங்களது காஞ்சி வருகையை ஒட்டி விரிவாகச் செய்தி வெளியிட்டிருப்பதை இங்கு பார்த்தோம்.

சாலையின் இடப்புறம் திருத்தணிகை மலை! மலைமீது குமரன் கோயில்! கீழிருந்தே கும்பிடு போட்டுவிட்டு நடையைத் தொடர்ந்தோம்.

இந்தப் பயணத்தில் எங்கள் பார்வைக்குப்பட்டது, முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில் இது ஒன்றுதான்!

மரங்களற்ற சாலையாகவும், மக்கள் நடமாற்றமற்ற சாலையாகவும் நீண்டது. சாலையில் வாகனங்கள் மட்டுமே விரைந்து கொண்டிருந்தன.



மதியச் சாப்பாட்டுக்காக நாங்கள் அமர்ந்தது ஆற்காட்டுக்குப்பம் என்ற இடம்.

இங்கே சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, ஒரு லாரி டிரைவரைத் தேடிவந்த போலீஸ்காரர், அவரைத் தகாத வார்த்தைகளால் திட்டினார். தாக்கவும் செய்தார். உடனிருந்த மற்ற லாரி டிரைவர்கள் 'தங்களுக்கு ஏன் வம்பு?' என்ற நினைப்பில் அமைதி காத்தனர். பார்க்கப் பரிதாபமாக இருந்தது. 'என்ன செய்தார் அவர்? இப்படி நீங்க பாட்டுக்கு அடிக்கிறீங்க?' என்று ஒருவராவது கேட்க மாட்டாரா என்று தோன்றியது. ஆனால் யரும் கேட்கவில்லை!

நான் யோசித்தேன். நேரடியாக போலீஸ்காரரைத் கேட்டால், அவர் என் வாயை அடைத்துவிடுவார். எனவே வேறுமாதிரியாக கேட்டேன். "ஏங்க, நீங்க எல்லாருமே டிரைவர்தானே! இவர் மேலே என்ன கம்ளைண்ட்னு கேட்டீங்களா? வேடிக்கை பார்க்கறீங்க?" என்றேன்.

போலீஸ்காரருக்கு கோபம் என்மேல் திரும்பியது.

"நான் ரிப்போர்ட்டர்தான்! போற வழியிலே ஸ்டேஷன் போய் டிரைவர் மேலே கம்ளைண்ட் கொடுக்கிறேன்! எழுதிக் கொடுங்க!" என்றேன்.

இப்போது போலீஸ்காரர் முகம் மாறியது. லாரி ஓட்டுனர்கள் வாய் திறந்தனர். "சார், விடுங்க சார்!" என்றனர். நான் பேப்பரும் பேனாவும் எடுத்தேன். போலீஸ்காரர் அந்த டிரைவரை விட்டுவிட்டு, பொதுவாகப் பேசத் தொடங்கினார்.

"போலீஸ்னா உங்களுக்கு ரொம்ப இளக்காரமா போச்சா? ரொம்ப ஓவரா பேசாதீங்க! உள்ளே தள்ளி நொறுக்கிடுவேன்!" என்று ஏகத்துக்கும் பேசிவிட்டு பின்னர் சத்தம் குறையாமலே புறப்பட்டுச் சென்றார்.

அந்த அடிபட்ட டிரைவரை விட்டுவிட்டுச் சென்றதில், எல்லோருக்கும் நிம்மதி!


இல்லாவிட்டால் அழைத்துச் சென்று அவர்




**பகிர்வுகளாய் முன்வைக்கும் பயணத் தொடர்!**

மீது பொய்வழக்கு போட்டிருப்பார் என்பதாக மற்றவர்கள் பேசத் தொடங்கினர்.

இந்த அத்துமீறலைச் செய்த போலீஸ்காரர் கனகம்மா சத்திரம் என்ற போலீஸ் ஸ்டேஷனை



சேர்ந்தவர். அவர் கையூட்டு கேட்டதற்கு லாரி டிரைவர் முணுமுணுத்தபடி கொடுத்திருக்கிறார். அதற்குத்தான் இந்த ரகளை! மக்களைக் காக்க வேண்டிய காவல்துறையில் சிலர் இப்படி கண்ணியம் இழந்து நடந்து கொள்வதை என்னவென்று சொல்வது? வேலியே பயிரை மேய்கிற விந்தை இந்த நாட்டில் என்று மாறும்?

அதிகாரம் கையில் இருந்தால் பொறுப்பு இருக்க வேண்டுமே தவிர, அந்த அதிகாரத்தால் வெறுப்பு வளர்த்துவிடக் கூடாது!

சிலர் பொறுப்பு மிக்க பதவியில் இருந்துகொண்டு தனக்குக் கீழே உள்ளவர்களைப் படுத்தும்பாடு கொடுமையாய் இருக்கும்! அதிகார மமதை உள்ளவர்கள் தாங்களாக திருந்தாவிட்டால்




அப்பதவி அதிகார வெறி எனும் மிருகமாய் காட்சியளிக்கும்!

கவிஞர் வாலியின் வார்த்தைகளை அழகாய் பாடிவைத்தார் மக்கள்திலகம்.

“பதவி வரும்போது பணிவு வரவேண்டும்! துணிவு வரவேண்டும் தோழா!”

எப்பேர்பட்ட வரிகள்! எளிமையாக இருந்தாலும் எந்நாளும் மனிதவாழ்வின் உன்னதத்தை உணர்த்தும் வரிகள்!..

கவியரசு கண்ணதாசனின் தத்துவப் பாடல்கள் தமிழ்த் திரையுலகை உயர்ந்த இடத்துக்குக் கொண்டு சென்றன. அவருக்குச் சற்றும் குறையாமல் இணையாய் நின்று எதிர்க்கடை விரித்து, அற்புதப் பாடல்களைத் தந்து, தன் பங்குக்குத் தமிழ்த் திரையிசை பாடல்களுக்கு மேலும் உயரம் கூட்டியவர் கவிஞர் வாலி!

நண்பர் பழனிச் சாமியிடம் அந்தச் சம்பவத்தைப் பற்றியே பேசிக்கொண்டு நடந்தேன்.

நண்பர் பழனிச்சாமி கேட்டார் “இக்காலப் பாடல்களுக்கும் அக்காலப் பாடல்களுக்கும் இருக்கும் வேறுபாட்டை எப்படிப் பார்க்கிறீங்க அண்ணா?” அவர் கேட்ட ஒரு நிமிட கேள்விக்கு நான் பல மணி நேரம் பதில் சொன்னாலும் நேரம் போதாது!



இருப்பினும் ஓரளவுக்கு அவருக்கு பதில் தந்தபடியே நடையைத் தொடர்ந்தேன்.

வழியில் போக்குவரத்து காவல் படையின் வாகனம் குறுக்கிட்டு எங்களை விசாரித்தது. ஆய்வாளர் என்.எஸ் ராவ் என்பவர் எங்களிடம் மிகவும் கனிவாக நடந்து கொண்டார். எங்களை மிகவும் பாராட்டினார்.

ஆந்திர எல்லை மகாராஜபுரம் என்ற ஊரில் ஒயின்ஷாப் இருந்தது இங்கே மது அருந்துவதற்காக நடந்து வருபவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள்.

எங்களுடன் நடந்து வந்து இணைந்துகொண்ட ஒருவர், “கடைக்குத்தான் போறீங்களா?” என்றார். முதலில் புரியவில்லை! ஒயின்ஷாப் பற்றித்தான் கேட்கிறார் என்பது பிறகுதான் புரிந்தது.

ஆயுத பூஜை விடுமுறை என்பதால் போக்குவரத்து அதிகமில்லாமல் சாலை வெறிச்சோடி கிடந்தது.

இரவு இராமஞ்சேரி என்ற ஊரை வந்தடைந்தோம்.

தங்குவதற்கு கிடைத்த இடம் பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடம்! காலையில் எழும்போதே குத்தம்பாக்கத்தில் இரவு தங்க வேண்டும் என்ற முடிவுடன்தான் எழுந்தேன்.

இன்றைய நாள் அக்டோபர் 12, 2005.

குத்தம்பாக்கம் தலைவர் திரு. இளங்கோ அவர்களுக்கு கைபேசியில் தொடர்பு கொண்டு அவரை இன்று சந்திக்கவிருக்கும் தகவலை உறுதிசெய்து கொண்டேன்.



திருப்பாசூர் வந்தடைந்தபோது, அப்பர், சம்பந்தர், நாவுக்கரசர் போன்ற சில நெறிச்செல்வர்கள் பாடல் பெற்ற திருத்தலமான வாசீசுவரசுவாமி ஆலயம் கண்டோம். அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந்த நூற்றுக்கால் மண்டபத்துடன், சோமதீர்த்தம், மங்களதீர்த்தம் என்ற இரு திருக்குளங்கள் கொண்ட திருத்தலம் இது!

இவ்வாலயத்தைக் கடந்து வந்த சற்றநேரத்தில் திருவள்ளூர் வந்தோம்.

இந்த நகரம் மகிமை பொருந்திய திருத்தலங்கள் கொண்ட நகரம்தான்!

திருவள்ளூரில் இருந்து புறப்பட்டபோது சிறு குழப்பம்! எந்த வழியில் செல்வது என்ற தடுமாற்றம்! நேர்ப்பாதையில் இருந்து விலகி வேப்பம்பட்டு செல்லும் பாதையில் வந்துவிட்டோம்.

இங்கிருந்து தண்டவாளம் கடந்து புதுச்சத்திரம் வந்தடைந்தோம்.

இதுநாள்வரை எந்த வழித்தடத்தில் பயணிப்பது என்ற குழப்பமெல்லாம் வந்ததே இல்லை! இப்போது குத்தம்பாக்கம் செல்வதற்கான பாதையைச் சிலர் குழப்பிவிட்டதால்; நாங்கள் பாதை தவறும்படி நேரிட்டது.

மழைக்காக நாங்கள் ஒரு பள்ளியில் ஒதுங்கினோம். இப்பள்ளியைச் ‘சிலம்புச் செல்வர்’ திரு. ம.பொ. சிவஞானம் அவர்கள் திறந்து வைத்திருக்கிற செய்தியைச் சொல்கிறது ஒரு கல்வெட்டு.

அந்திசாயும் வேளையிலே குத்தம்பாக்கம் கிராமத்துக்குள் நுழைந்தபோது மழை வலுத்திருந்தது.

ஊருக்குள் சென்ற ஒரு டிராக்டர் எங்களைக் கடந்தபோது, மழைநீர் தேங்கிய சேற்றை வாரி இறைத்தது. என் வேட்டி சேற்றைத் தாங்கியதில், எடை கூடி இடையை இழுத்தது.

இந்தக் கோலத்துடன் பஞ்சாயத்து அலுவலகத்துக்குப் போகக் கூடாது. வழியில் எங்கேனும் குழாயோ குளமோ கிடைத்தால், சேற்றைக் கழுவிக் கொள்ளலாம் என

நினைத்தபடியே நடந்தால்... சிறிது தூரத்திலேயே எங்களுக்காக திரு.இளங்கோ அவர்களும், அவர்தம் குழுவினரும் நின்றிருந்தனர்.

தலைவர் இளங்கோ எங்களை எதிர்கொண்டு ஆரத்தழுவி வரவேற்றார்.

"சார்!.. நான் சேறும் சகதியுமா இருக்கிறேன்!" என்று நான் சொன்னதை அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை! இவனை அணைத்தால் தன் ஆடைகளின் மீது சேறு ஒட்டிக்கொள்ளுமே என்றும் அவர் நினைக்கவில்லை!



கண்கள் பனிக்க அவர் சொன்னார். "உங்க உடைகளை நான் பார்க்கவில்லை! உள்ளத்தைத்தான் பார்க்கிறேன்! உடையில் கறை படிந்திருக்கலாம்! உள்ளத்தில் கறை இல்லாமல், ஊருக்காக நடந்து, களைத்து வரும் உங்களைத் தொட்டால், கறை படும்னா அது எனக்கு பெருமைதான்!" என்றார்.

அவரது அந்த வார்த்தைகளைக் கேட்டதும் நெகிழ்ந்து போனேன்.

பெயரளவுக்கு தலைமைப் பொறுப்பில் இருந்துகொண்டு தன் தொண்டர்களைக் கூட சரிவர நடத்தாத மனிதர்கள் மத்தியில், உண்மையான ஒரு தலைவர் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு உதாரண மனிதராய் திகழும் திரு. இளங்கோ அவர்கள் தலைமைப் பண்பின் உச்சம்!

எங்களுக்கு மாலையும் சால்வையும், அணிவித்து சிறப்பு செய்தபின் அலுவலகத்துக்குள் அழைத்துச் சென்றார்.

இங்கே குளித்து முடித்து உணவருந்தியபின் தலைவர் இளங்கோ மீண்டும் வந்து சந்தித்து எங்களோடு உரையாடினார்.

அவரது வார்த்தைகளில் தெரிந்த அன்பும், சமுதாய அக்கறையும், தெளிந்த நல்லறிவும் கேட்பவர் மனதில் ஊடுருவி, அவர்தம் தரத்தை உயர்த்த வல்லது என்பதை உணர முடிந்தது.

திரு.இளங்கோ அவர்கள் இந்தக் குத்தம்பாக்கத்தில் நிகழ்த்தியிருக்கும் சாதைனையும் சேவையும் அளப்பரியது!

குடியும் திருட்டுமாக மலிவான நிலையில் உழன்றுக் கிடந்த குத்தம்பாக்கம் கிராமத்தை, உழைத்துண்டு வாழும்படி, ஒரு தன்னிறைவு பெற்ற கிராமமாக உயர்த்தி, அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளும் கூட வியக்கின்ற அளவுக்கு கிராம வளர்ச்சியில் அரும்பணிகள் ஆற்றிவரும் அற்புதமனிதர் இவர்! மேதகு அப்துல் கலாம் அவர்களால் வெகுவாய் பாராட்டப்பட்ட அரும்பெரும் சமூகச் சேவையாளர்!

'நல்லோர் வட்டம்' நண்பர்கள் திரு.தனபால் திரு. எழில் ஆகியோர் வந்து இங்கே எங்களைச் சந்தித்தனர். பத்திரிகைத் தகவல்களையும், எனது கவிதைத் தொகுதியின் ஒரு பிரதியினை மாதிரியாகவும் கொண்டு வந்து கொடுத்தனர்.




பஞ்சாயத்து அலுவலகத்தில் இருந்த நண்பர் திரு.கண்ணதாசன் அவர்கள் திரு. இளங்கோ அவர்களின் சமீபத்திய சாதனைகளை எடுத்துரைத்தார்.

படுக்கையில் விழுந்த பின்பும் திரு. இளங்கோ அவர்களைப் பற்றியேதான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

அன்பும் அடக்கமுமாக இந்த மனிதரின் அளப்பரிய செயல்களில் பத்து வீதமாக தமிழகத்தின் பிற கிராம பஞ்சாயத்துகள் செயல்படுத்துமேயானால், தமிழகம் விரைவில் பாரதத்துக்கே வழிகாட்டும் மகோன்னத நிலையை எட்டிவிடும்!

இது மிகை போலத் தோன்றினாலும், என் உள்ளத்தில் மீண்டும் மீண்டும் அந்த எண்ணம்தான் ஓடிக் கொண்டிருந்தன. திரு. இளங்கோ அவர்களை எதிர்வரும் குத்தம்பாக்கத்துத் தலைமுறைகள் வணங்கித் தொழவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை!

அவரைப் பற்றியே சிந்தனைகளுடனே கண் அயர்ந்து போனேன்.

( நடை தொடரும்)

# இலக்கு

இதுதான்
இப்படித்தான்
என்று திட்டமிடுவதற்குள்

மறந்திருந்தேன்...

காலமறிந்து பயிரிடவும்
அறுவடை செய்யவும்
தெரிந்திருத்தல்
அவசியம்!

சீரமுதன்

# புத்தக விமர்சனம்

## நோய் நாடி நோய் முதல் நாடி:
### உணவு ஓர் உயிர்வேதியியல் கண்ணோட்டம்

**விலை : ரூ. 320**

**பக்கங்கள் :302**

**நூல் ஆசிரியர்:**

**டாக்டர் பா. தாயுமானவன்**

**வெளியீடு:**

**நோஷன் பிரஸ்**

**சென்னை**




*உணவே மருந்து' என்ற ஹிப்போகிரேட்ஸ் கூற்றுக்கு ஏற்ப எவ்வகை உணவுகளைத் தேர்ந்தெடுத்து உட்கொண்டால் நோயற்ற வாழ்வு வாழலாம் என்பதைத் துல்லியமாக தெரிந்துகொள்வது அவசியம். உணவுகளில் நமக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களைத் தவிர பல்வேறு தாவரவேதியங்களும் (Phytochemicals) உள்ளன.*

*இவ்வகை வேதியங்கள் பலநோய்களைக் கட்டுப்படுத்தும் அல்லது தடுக்கும் ஆற்றல் கொண்டது என்பதை உணர்ந்து அதற்கு ஏற்றமுறையில் உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து உண்ணவேண்டும். இக்கருத்துக்களை முன்னிருத்தி இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்தைப் படிப்பதன் மூலம் நாம் உட்கொள்ளும் உணவுப்பொருட்களில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துகள் மற்றும் நோய் காக்கும் வேதியங்கள் பற்றி அறிந்து பயனடைவீர்கள் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி'.*

*இப்புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் 2016 வரை ஆய்வு ஏடுகளிலும், தொகுப்புக் கட்டுரைகளிலும் வெளி வந்த ஆராய்ச்சி முடிவுகளை வைத்து எழுதப்பட்டவையாகும். முடிந்தவரை மனிதர்கள், பிராணிகளை வைத்து நடத்திய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.*

சிறுகதை



# மனுதர்மம்

## அ.முத்துலிங்கம்

இலங்கை அரசனின் பட்டத்து ராணி அந்த நந்தவனத்தில் உலாவிக்கொண்டு இருந்தாள். மயக்கம் தரும் இந்த மாலை நேரங்களில் வழக்கமாக அவள் அங்கேதான் இருப்பாள். அரசன் அவளுக்காக கட்டிய தாடகத்தில் மிதக்கும் வாத்துக்களைப் பார்த்துக் கொண்டிருப்தில் அப்படி ஒரு சந்தோஷம். கார்த்திகை நட்சத்திரங்கள் போல கூட்டமாக தாய் வாத்தும், குஞ்சுகளும் மிதந்து கொண்டிருந்தன. அவை நீர்ப்பூக்களில் மறைவதும் வெளிவருவதுமாக விளையாடிக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்து கொண்டேயிருக்கலாம்.

கடந்த இருபது வருடங்களாக அந்தி நேரங்களை ராணி அவளுடைய அந்தப்புர நந்தவனத்தில் இதுமாதிரிதான் கழித்து வந்திருக்கிறாள். ராணியின் சௌந்தர்யம் அன்று பார்த்ததுபோல் இன்றும் கண்ணைப்பறிக்கும் மெருகுடன்தான் இருந்தது. ஆனால் அந்த அழகுடன் சேர்ந்து இப்பொழுது ஓர் அசாதாரண ஒளியும் அவள் முகத்திலே படந்திருந்தது. அரசன் அவளுக்காக இன்னொரு படை திரட்டினாலும் அசியப்பட முடியாது. இப்படியான வனப்பும், முகக்காந்தியும், சோபையும் விரதம் காக்கும் உயர்குடிப் பெண்களிடத்தேதான் காணப்படும்.

சாலையில் புத்த தேரிணிகள் கைகளில் பிட்சை பாத்திரங்களுடன் விஹாரையை நோக்கி திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய அமைதியான உடையையும், முகத்தில் தெரியும் சாந்தியையும் பார்க்கும்போது ராணியின் மனத்தை என்னவோ செய்யும். சங்கமித்திரை கொண்டுவந்து நட்ட அரசமரத்துக் கிளை இப்போது பெரும் மரமாக வியாபித்து வளர்ந்திருந்தது. அதுபோல அவள் ஸ்தாபித்த சங்கமும் கிளைவிட்டு பரவி மக்களிடையே




தர்மத்தை வளர்த்துக் கொண்டிருந்தது. ராணிக்கு தேரிணியாகிவிட வேண்டும் என்ற ஆசை மறுபடியும் ஒரு கணம் தலை தூக்கியது.

அரசன் அவளிடத்தே கொண்டிருக்கும் காதலின் பிரவாகம் இன்றுவரை எள்ளளவேனும் குறையவில்லை. மாறாக அவனுடைய பிரமேமையானது நாளுக்கு நாள் அதிகரிக்கவே செய்தது. ஆயிரம் மகளிர் அந்தப்புரத்தில் இருந்தாலும் அவன் தனது பட்டத்து ராணியிடம் கொண்டுள்ள அன்பின் ஆழத்தை அளக்கமுடியாது. ஆனால் அரசனுடைய கவனம் எல்லாம் சமீக காலங்களில் நீதி சாஸ்திரங்களிலேயே லயித்து இருந்தது. அசோகன் ஸ்தாபித்த நீதி பரிபாலன முறைகளையும், எல்லாளன் அனுசரித்த தர்ம நெறிகளையும் சாஸ்திரம் அறிந்த விற்பன்னர்களோடு தர்க்கித்தான்; தரும நூல்கள் பதினெட்டில் ஒன்றான மனு நீதியை பண்டிதர்களிடம் நுணுக்கமாக கற்றுத் தேர்ந்தான்.

ஓர் அரசனுக்கு இருக்கவேண்டிய காருண்யத்துக்கு ஆதர்சமாகச் சிபிச் சக்கரவர்த்தி அவனுக்கு விளக்கினார். பருந்தினிடம் உயிர் தப்புவதற்காக அந்தப் புறா பறந்துவந்து சக்கரவர்த்தியின் கால்களில் விழுந்து அடைக்கலம் கேட்டதாம். அப்பொழுது பருந்து அரசனை நோக்கி ‘அரசே, மாமிசம் புசிப்பது என் இயல்பு; புறாவை விடும், நான் பசியாற வேண்டும்’ என்று சொன்னது. அடைக்கலம் கொடுத்த புறாவை அரசன் எப்படி நிர்க்கதியாக விடமுடியும்? ‘உனக்கு மாமிசம்தானே வேண்டும், இதோ!’ என்று தன் உடலின் தசையை எடைக்கு எடை அரிந்து கொடுத்தானாம் சிபிச்சக்கரவர்த்தி.

தருமத்திற்கெல்லாம் தருமமாக விளங்கிய சிபிச்சக்கரவர்த்தியின் காருண்யத்தையும்,

எல்லாளனுடைய நீதி பரிபாலனத்தையும் ஆதர்சமாக ஏற்றுக்கொண்ட அரசன், தொன்றுதொட்டு வழங்கிய நீதி வழுவா நெறிமுறைகளை திரும்பவும் ஸ்தாபிக்க அமர்த்தியர்களைக் கலந்து ஆலோசித்தான். பொத்ததேவி தாரையைப் போன்ற அறிவாளி; தர்ம நூல்களை அறிந்தவள். அவளிடத்திலும் அரசன் அவ்வப்போது ஆலோசனைகள் கேட்டான்.

ஆராய்ச்சி மணியை அரண்மனை வாசலிலே தொங்கவிட்டு எல்லோருக்கும் நீதி பாரபட்சமின்றிக் கிடைக்க வழிவகுத்தவன் எல்லாளன். ஒருமுறை அவனுடைய தேர் வேகமாகச் சென்றபோது தற்செயலாக புத்தவியாரையின் ஸ்தூபம் ஒன்றை இடித்து பதினைந்து செங்கல்கள் உதிர்ந்துவிட்டன. எல்லாளன் பதறிப்போய் அந்தப் பாவத்தின் பாரம் தாங்கமுடியாமல் தன்னையே பலி கொடுக்கத் தயாராகிவிட்டான். புத்ததேரர்கள் அவனைத் தேற்றியபின் பதினையாயிரம் செங்கல்கள் பதித்து புதிய நிர்மாணவேலைகள் செய்து பிராயச்சித்தம் செய்துகொண்டானாம்.

இன்னொரு முறை ஒரு கிழவி வெய்யிலிலே அரிசியைக் காய வைத்திருக்கிறாள். அப்போது நேரமில்லாத நேரத்தில் மழை பெய்து கிழவியுடைய அரிசி எல்லாம் நனைந்துவிட்டது. கிழவி அழுதுகொண்டே வந்து ஆராய்ச்சி மணியைப் பிடித்து இழுத்தாள், 'நல்ல அரசனுடைய ஆட்சியில் காலம் தவறி மழை பெய்யுமா? என்னுடைய அரிசி எல்லாம் நனைந்துவிட்டதே! எனக்கு உண்பதற்கு எதுவும் இல்லையே' என்று வருந்தி முறையிட்டாள்.

எல்லாளன் 'மழையின் குற்றம் மன்னன் குற்றமன்று' என்று கூறி கிழவியை திருப்பி அனுப்பியிருக்கலாம். அல்லாவிடின், கிழவிக்கு வேண்டிய தானியவகை கொடுத்து அவள் துயரைத் தீர்த்தும் இருக்கலாம். ஆனால் எல்லாளன் கிழவியின் துயரத்தின் ஆழத்தை அறிய 'பசி என்றால் அது எப்படி இருக்கும்?' என்று தானாக உணருவதற்காக நாட்கணக்கில் உண்ணாவிரதம் இருந்து தன்னை வருத்திக் கொண்டானாம்.

எல்லாளன் வகுத்த இந்த நீதி முறையில் பிறழாது அரசன் பரிபாலனம் செய்து வந்தான். ராணியிடம் இந்த நீதி முறைகளைப்பற்றியும், அவை போதிசத்துவருடைய தர்மோபதேசங்களுக்கு உடன்பட்டதாக இருக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் எடுத்துக் கூறுவான். அரசனுடைய கணிப்பில் நீதி சாஸ்திரத்தில் இரண்டு அங்கங்கள் இருந்தன. ஒன்று, ஒருவன் குற்றம் இழைத்தானா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பது. அடுத்தது, அந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை என்பதை நிர்ணயிப்பது. அரசனுடைய கருத்தின்படி ஒருவன் குற்றவாளியா அல்லவா என்பதைத் தீர்மானிப்பது



வெகு இலகுவானது. ஆனால் குற்றத்திற்கு ஏற்ற தண்டனை வழங்குவதில்தான் அரசனுடைய தர்மம் நிலைக்கிறது என்று அவன் நம்பினான்.




கொலை செய்தவனைக் கழுவேற்றிக் கொல்வதுவும், ராஜத் துரோகியை யானையின் காலில் இடறுவிப்பதும், அரச கட்டளையை மீறியவனை சுண்ணாம்புக் காளவாயில் போடுவதும் அரசனுக்கு சரியாகப் படவில்லை. கருணையின் வடிவான போதிசத்துவருக்கு இந்தத் தண்டனைகள் உகந்ததாக இருக்காது என்றே அரசனுக்கு தோன்றியது. எல்லாளன் காட்டிய நெறிப்படி, போதிசத்துவருக்கு ஏற்புடையதான நீதி சாஸ்திரங்களை கடைப்பிடிப்பதில் அரசன் வெகு தீவிரமாக இருந்தான். அரசனுடைய இந்தப் போக்கு மந்திரி பிரதானிகளுக்கு அதிசயமாக இருந்தது.

'தசரதன் ஆணைப்படி ராமன் வனாந்தரம் ஏகிவிட்டான்' என்று கைகேயி கூறியதும் பரதன் அதிசயப்பட்டு 'ராமன் என்ன குற்றம் செய்தான்? பிறர் பொருளை அபகரித்தானா? நிரபராதிகளைத் தண்டித்தானா? அன்றி பிறர் மனைவியை காமத்துடன் பார்த்தானா? என்று கேட்கிறான். இப்படி கடுமையான குற்றங்களுக்குத்தான் வனாந்தர சிட்சை என்று தொன்றுதொட்டு இருந்தது. மனுதர்மத்தை அணைத்து நின்ற இந்தத்

தண்டனைகள் எப்பொழுது இப்படி கொடூரமாக மாறின என்ற தர்ம விசாரத்தில் அரசன் அடிக்கடி மூழ்கிவிடுவான்.

ராணி பொத்தாதேவி தன் தங்க ஆசனத்தில் சாவதானமாக அமர்ந்துகொண்டு சேடிப்பெண்ணை கண் நிமிர்ந்து பார்த்தாள். அந்தச் சைகை அர்த்தமாகியதுபோல ராணியின் தாதி தன் கையிலிருந்த இரண்டு வெற்றிலைப் பெட்டிகளையும் அரசியின் முன்னே வைத்தாள். ஒன்று முற்றிலும் வெள்ளியினால் செய்தது; நிறைந்த வேலைப்பாடுகளைக் கொண்டது. அதுதான் பொத்தா தேவியுடையது. மற்றது தங்கத்தால் இழைத்து மின்னிக்கொண்டிருந்தது. அரசனுக்கு மாத்திரம் பிரத்தியேகமானது.

அரசனுடைய வெற்றிலையை பொத்ததேவியே மடித்துக் கொடுப்பாள். தன்னுடையதையும் தானே செய்துகொள்வாள். எது காரணம் கொண்டும் இதைமாத்திரம் சேடிப்பெண்கள் செய்வதை அவள் அனுமதிக்கமாட்டாள். அது மாத்திரமல்ல, எதற்காக ராணி இரண்டு வெற்றிலைப் பெட்டிகள் வைத்திருக்கிறாள் என்ற விஷயமும் ஒருவரும் அறியாத பரம ரகஸ்யமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

பொத்தாதேவி, பதினாறு வயது நிரம்பு முன்பேயே அந்த நாட்டு சேனாதிபதியை மணந்து கொண்டவள். அப்போது அரசனாயிருந்தவன் சுப்பராஜன் என்பவன். அவன் அதற்கு முன்பு சாதாரண வேலைக்காரனாக இருந்தவன். அவனும் அப்போது அரசாயாண்ட மன்னனும் ஒரே முகச்சாயல் கொண்டவர்கள். ஒருநாள் அரசன் விளையாட்டுக்காக வேலைக்காரனுக்கு ராஜவேஷம் போட்டு தன் வேலைக்காரனுடைய உடையை அணிந்து வேடிக்கை பார்த்தான். மந்திரி பிரதானிகள் வேலைக்காரனை வணங்குவதைப் பார்த்து எள்ளி நகையாடினான், உண்மையான மன்னன். இதுதான் தருணமென்று நயவஞ்சகமாக அரசனைச் சிரச்சேதம் செய்துவிட்டு ராஜ்யத்தை அபகரித்துக் கொண்டான், வேலைக்காரனான சுப்பராஜன். அரசனாகிவிட்டாலும் அன்றிலிருந்து சுப்பராஜனுக்கு தன்னைக் கொல்ல சதி நடக்கிறதென்று ஒரு பயம் இருந்துகொண்டே வந்தது. ஒரு முறை குறிசொல்பவனிடம் தன் எதிர்காலம் பற்றிக் கேட்டான். அதற்கு அவன் 'அரசே! தங்களுக்கு ஓர் எதிரி ஏற்கனவே பிறந்திருக்கிறான்; வசபன் என்று பெயர். அவன் தங்களைக் கொன்று இந்த ராஜ்யத்தை உங்களிடமிருந்து அபகரிப்பான்' என்று கூறிவிட்டான்.




அன்றிலிருந்து சுப்பராஜனுக்கு நித்திரை கெட்டது. சேனாதிபதியைக் கூப்பிட்டு வசபன் என்னும் பேர் உள்ள எல்லோரையும் சிறைப்பிடித்து சிரச்சேதம் செய்யும்படி உத்தரவிட்டான். சேனாதிபதியும் அப்படியே சேவகர்களை நாட்டின் நாலு திசைகளிலும் அனுப்பி வசபன் என்ற பேர் உள்ளவர்களை எல்லாம் பிடித்து சிரச்சேதம் செய்தான். இந்த நேரம் பார்த்து வடக்கே கிராமத்தில் இருந்து சேனாதிபதியின் சொந்த மருமகன், வசபன் என்று பெயர் கொண்டவன், வந்து சேர்ந்தான். அவனுக்கு அரசனுடைய விநோதமான கட்டளை பற்றிய விஷயம் ஒன்றுமே தெரியாது. பதினெட்டு வயது நிரம்பிய அழகிய யுவன் அவன். சேனாதிபதியின் தயவில் அரசனுடைய படையில் சேர்வதற்காக வந்திருந்தான். சேனாதிபதிக்கு தர்ம சங்கடமாகிவிட்டது. மனைவியுடன் கூடி ஆலோசித்தான். அடுத்த நாள் அதிகாலையில் மருமகனைக் கூட்டிக்கொண்டுபோய் அரசனிடம் ஒப்படைத்து சிரச்சேதம் செய்துவிடுவது என்று முடிவாகியது.

பேசிவைத்தபடி அடுத்தநாள் அதிகாலையில் சேனாதிபதியும் வசபனும் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார்கள். பொத்தாதேவிக்கு இந்தக் காட்சி வயிற்றைப் பிசைந்தது. எனினும் வழக்கம்போல மடித்த வெற்றிலைச் சுருளை கணவனிடம் கொடுத்து இருவரையும் வழியனுப்பி வைத்தாள்.

சேனாதிபதி வெற்றிலைப் பிரியர். அன்றாட காரியங்களை தாம்பூலம் தரிக்காமல் அவர் தொடங்குவதேயில்லை. அரண்மனை வாசலில் வெற்றிலைச் சுருளை விரித்தார். அதிலே எல்லாம் இருந்தது. ஆனால் சுண்ணாம்பு இல்லை. ஒருநாளும் மறக்காத பொத்தாதேவி அன்று சுண்ணாம்பை மறந்துவிட்டாள். சுண்ணாம்பு இல்லாத வெற்றிலையில் சுகமில்லை. அந்தக்கணம் அவருக்கு வெற்றிலை போட்டே ஆகவேண்டுமென்று இருந்தது. அவர் வசபனை வீட்டுக்கு அனுப்பி சுண்ணாம்பு எடுத்துவரச் சொன்னார்.

அங்கே பொத்தாதேவி வசபனை எதிர்பார்த்து நின்றாள். அவளுக்கு மனது பொறுக்கவில்லை. தன்னுடைய கணவனின் துரோக எண்ணத்தை வசபனிடம் கூறிவிட்டாள். தான் வேண்டுமென்றே சுண்ணாம்பை வைக்கவில்லையென்றும், அவனை உடனேயே தப்பி ஓடிவிடும்படியும் கூறினாள். அது மாத்திரமல்ல, ஒரு துணியிலே அவனுக்கு ஆயிரம் பொற் கழஞ்சுகளையும் முடிந்து கொடுத்தாள்.

முன்பின் பார்த்திராத தன்னிடம் இவ்வளவு கருணை காட்டிய பொத்தாதேவியை வசபன் முதன் முறையாகத் தலை நிமிர்ந்து பார்த்தான்.



தேவலோகத்து அப்சரஸ்போல அவள் இருந்தாள். அவனால் நம்ப முடியவில்லை. கண்களிலே அவனுக்கு நீர் துளிர்த்தது. பொத்தாதேவி, அவளும் இளம்பெண்தானே! அவள் கண்களிலும் நீர். அப்படியே அள்ளிப் பிடித்து அவள் உதட்டிலே முத்தமிட்டு விட்டான். பிறகு திரும்பிக்கூடப் பாராமல் ஓடிப்போனான். பொத்தாதேவி அந்தச் சிந்தனைகளில் இருந்து விடுபட்டு வெற்றிலையை எடுத்து வாயினுள் போட்டு சுவைக்கத் தொடங்கினாள். சேடிப் பெண்கள் விளக்குகளை எடுத்துக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாகச் சென்று தீபங்களை ஏற்றினார்கள். அந்த மங்கிய வெளிச்சத்தில் சாயைகள் போவதும் வருவதுமாக இருந்தது. அவள் மன ஓட்டத்துடன் ஒத்துப்போனது.

தெருவிலேயும் சந்தடி குறைந்துவிட்டது. வண்டியில் மாடுகள் மந்தகதியில் அசைந்தாடிக்கொண்டு சென்றன. ரத ஓட்டம் முற்றிலும் நின்று விட்டது. மனித அரவம் இன்னும் அடங்கவில்லை. இன்னும் மன்னரைக் காணவில்லை. இவ்வளவு நேரங்கழித்து அவர் அந்தப்புரத்திற்கு வந்ததேயில்லை. இன்று அரண்மனையில் அப்படி என்ன முக்கியமான காரியமாயிருக்கும்? ஏதாவது விசேஷமான வழக்கா இருக்கலாம்? மன்னர் இப்பொழுதெல்லாம் இப்படியான வழக்குகளுக்குத் தான் தன் நேரத்தை எல்லாம் செலவிடுகிறார்.

இரண்டு பௌர்ணமிகளுக்கு முன்பும் இப்படித்தான் ஒரு வழக்கு. அரசன் வழங்கிய தீர்ப்பைப் பற்றி பண்டிதரும் பாமரரும் ஒன்றாகச் சிலாகித்து பேசினார்கள். நெடுஞ்சாலை ஓரத்திலே தன்னிச்சையாக ஓங்கி வளர்ந்து நின்ற விருட்சத்தை ஒரு துஷ்டன் வெட்டிச் சாய்த்துவிட்டான். அரசன் அனுமதியின்றி மரங்களை வெட்டுவது மகா பாபமான செயல். அதுவும் சாலையோரங்களில், மனிதனுடைய வசதிக்காக வைத்த மரங்களை வெட்டுவது மிகவும் பாரதூரமான குற்றமாகும்.

மரங்களைப் பேணுவது காலத்திலிருந்து கடைபிடிக்கப் பட்டு வந்த வழக்கம். அவனுடைய பிரதானமான கல்வெட்டுகள் எல்லாம் 'மனிதர்களுடைய வசதிக்கும், பிராணிகளுடைய நலத்துக்குமாக அரசன் ஆணையால் நெடுஞ்சாலை ஓரங்களில் கிணறுகள் வெட்டப்பட்டன, மரங்கள் வைக்கப்பட்டன' என்று கூறும். அப்படியிருக்க இந்த மூடன் கருணையே இல்லாமல் இப்படி மரத்தை வெட்டிவிட்டானே!

வழக்கமாக இந்தக் குற்றத்திற்கு தண்டனை ஐம்பது கசையடி. ஆனால் மன்னருடைய தீர்ப்பு எல்லோரையும் ஆச்சிரியத்தில் அடித்தது. அதே சாலையில் நூறு மரங்களை நடும்படி குற்றவாளிக்கு ஆணை பிறப்பித்தார் அரசர். அந்த தீர்ப்பிலே உள்ள மதி நுட்பத்தையும், அதனால் ஏற்படும் நன்மையையும் பற்றி எல்லோரும் பேசிப்பேசி மகிழ்ந்தார்கள்.

'நாட்டிலே உள்ள வழக்குகளுக் கெல்லாம் தீர்ப்பு வழங்கும் மன்னர் என்னுடைய குற்றத்திற்கு என்ன தண்டனை கொடுக்கக் கூடும்' என்று பொத்தாதேவி தன்னையே அடிக்கடி கேட்டுக் கொள்வாள். மனு நீதி சாஸ்திரத்தில் அவளுக்கு மன்னிப்பு இருக்கிறதா?




இரண்டு வருடங்களாக வசபன் காடுகளிலே ஒளிந்து திரிந்து படை திரட்டினான். இந்தக் காலங்களில் எல்லாம் பொத்தாதேவி அவனை ஒருகணம் தானும் மறந்தாளில்லை. அவனைப் பற்றியே செய்திகள் அடிக்கடி வந்த வண்ணமாகவே இருந்தன. விதியின் உந்துதலால் அப்பொழுது பொத்தாதேவி தனது இரண்டாவது குற்றத்தை செய்யும்படி நேரிட்டது.

ஒரு தேசாந்திரி வடக்கு நோக்கி போய்க்கொண்டிருந்தார். பொத்தாதேவி அவர் கையில் ஒரு வெற்றிலைச் சுருளைக் கொடுத்து வசபனைக் கண்டால் அவன் கையில் அதைத் தரும்படி வேண்டிக் கொண்டாள். அவருக்கு ஆச்சரியம்! வெற்றிலைச் சுருள் அவ்வளவு நாளைக்குத் தாங்குமா! ஆனால் அந்த தேசாந்திரி ஒன்றுமே கேட்கவில்லை. 'அப்படியே' என்று கூறி சுருளை வாங்கிப் போய்விட்டார்.

பொத்தாதேவி எதிர்பார்த்தபடி ஒருநாள் வசபன் திடுதிடுப்பென்று திரும்பி வந்துவிட்டான். சுண்ணாம்பு இல்லாமல் அவள் அனுப்பிய

வெற்றிலையின் சூசகமான செய்தியை அவன் உணர்ந்து கொண்டான். கடம்ப மரங்களின் மறைவில் அவளைச் சந்தித்தான் வசபன். ஆசை தூண்ட அடக்கம் இழந்து அவளைத் தழுவினான்; பொத்தாதேவி அவன் வசம் ஆனாள்.

வெகு சீக்கிரத்திலேயே வசபன் பெரும்படையுடன் வந்து சுப்பராஜனின் படைகளை முறியடித்து ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டான். வசபனுக்கு எதிராக அவளுடைய கணவன் போர்க்களத்தில் சேனாதிபதியாக மிகவும் சௌகரியத்துடன் போர் புரிந்தான். இருந்தும் சமரிலே படுகாயம் பட்டு உயிர் நீத்தான். வசபன் அரசனானவுடன் முதற் காரியமாக பொத்தாதேவியை மணந்து ராணியாக்கிக் கொண்டான். அவனுடைய ராஜ்யத்தில் மக்கள் எல்லாம் மிக மகிழ்ச்சியாக இருந்தார்கள். அளவற்ற கருணையுடன் அவன் செய்த ராஜ்ய பரிபாலனத்தில் மனிதர்களும், மரங்களும், மிருகங்களும், பட்சிகளும்கூட சந்தோஷமாக இருந்ததாகப் பேசிக்கொண்டார்கள்.

ஏதோ ஒரு பெரிய குற்றத்திற்காக பிராயச்சித்தம் செய்வது போல வசபன் ஸ்தூபங்களைக் கட்டினான். கோட்டைச் சுவர்களை உயர்த்தி நாலு வாசல்களிலும் புத்த விஹாரங்களை ஸ்தாபித்தான். பன்னிரெண்டு மிகப்பெரும் வாவிகளைக் கட்டி வாய்க்கால்கள் வெட்டினான். விஷேச தினங்களிலும், விழாக்களின் போதும் முப்பத்திரண்டு இடங்களில் பால் சோறும், தேனும் கொடுக்க ஆக்ஞை பிறப்பித்தான். மக்கள் இவனுடைய நீதி வழுவாத ஆட்சி நீடிக்கவேண்டும் என்று புத்த பகவானை வேண்டிக்கொண்டார்கள்.

சேடி ஒருத்தி ஓடிவந்து அன்று நடந்த அதிசயமான வழக்கைப் பற்றி ராணியிடம் கூறினாள். ராணி 'அது என்ன வழக்கு? விபரமாகச் சொல்?' என்றாள். 'இது ஒரு குடியானவத் தம்பதிகளுக் கிடையில் ஏற்பட்ட தகராறு. மனைவி கணவன் மீது வழக்குத் தொடுத்திருக்கிறாள்!' என்றாள். அப்படி அவள் சொல்லிக்கொண்டு இருக்கும் போதே மன்னர் வந்துவிட்டார். சேடிகள் மறைந்து கொண்டார்கள். அரசனை எழுந்து வரவேற்றாள் ராணி. அரசனின் முகத்தில் என்றும் இல்லாத ஒரு பரவசம் நிறைந்திருந்தது. மிகவும் கஷ்டமான காரியத்தை சாதித்தபின் மனதில் பரிபூரணமான சாந்தியுடன் கூடிய ஒரு ஒளி ஏற்படுமே,அதுதான்.



'ஸ்வாமி! இன்றைய வழக்கைப் பற்றியே எங்கும் பேச்சாக இருக்கிறது. என்ன நடந்தது? கூறுங்கள்' என்றாள். 'இன்று நடந்தது ஒரு சிறிய விவகாரம்தான். ஆனால் இதன் தீர்ப்பு மிகவும் பாரதூரமானது. ஒரு முரட்டுக் குடியானவனிடம் ஒரு மாடு இருந்தது. இந்த மாட்டை நம்பித்தான் அவர்கள் ஜீவனம் நடந்தது. மனைவி பால், தயிர், மோர் என்று விற்று வந்தாள். இந்த மாடு கொஞ்சம் முரண்டு பிடித்தது. இந்த மூர்க்கன் அதை அடிக்கடி அடித்துத் துன்புறுத்துவான். மனைவி எவ்வளவு சொல்லியும் கேட்பதில்லை. இன்று காலை அந்த வாயில்லாப் பிராணியைப் போட்டு அடித்திருக்கிறான். இவளுக்கு பொறுக்க முடியவில்லை. ஓடிப்போய் தடுத்தபோது அந்த மூடன் இவளையும் சேர்த்து அடித்திருக்கிறான். அப்பொழுதுதான் இவள் நேராக வந்து ஆராய்ச்சி மணியை இழுத்திருக்கிறாள்'.

'அதிசயமாக இருக்கிறதே! என்ன தீர்ப்பு வழங்கினீர்கள்?' 'அதிலேதான் பிரச்சனை. பசுவதை என்பது மிகவும் கொடூரமானது. வழக்கமான இப்படியான குற்றத்திற்கு தண்டனை ஒரு நாழிகை நேரம் சுண்ணாம்பு காளவாயில் அவனைப் போடுவதுதான்.'

'அதுதான் தீர்ப்பா?'

'இல்லை; அப்படிச் செய்தால் யாருக்கு என்ன பிரயோசனம்? எங்கள் நீதி சாஸ்திரங்கள் குற்றத்துக்கு தண்டனை கொடுப்பதை விட குற்றம் இழைத்தவன் பச்சாதாபப்பட்டு திருத்துவதையே வலியுறுத்துகின்றன. போதிசத்துவர் போதித்ததும், எல்லாளன் கடைப்பிடித்ததுவும் அதுதான்! இந்தத் துன்மார்க்கன் வாட்டசாட்டமாக இருப்பான். வெகு போஜனப் பிரியன். இவனுக்கு நான் இவனுடைய மனைவி கையாலேயே தண்டனை வழங்கிவிட்டேன்.'

'ஐயையோ! புதுவிதமாக இருக்கிறதே! என்ன தண்டனை?

'ஒரு மண்டல காலத்துக்கு இவன் பால், தயிர், மோர், நெய் ஒன்றும் உணவுடன் சேர்த்துக்கொள்ள முடியாது. அதுதான் தண்டனை. அதை நிறைவேற்றும் பொறுப்பையும் அவனுடைய மனைவியிடமே விட்டுவிட்டேன்.

'அது எப்படி முடியும்? இந்த மூர்க்கன் அவளைப்போட்டு வற்புறுத்தி களவாகவோ, பலாத்காரமாகவோ உண்டுவிடுவானே?'

'அதுதான் இல்லை, தேவி. நீ அந்தப் பெண்ணினுடைய முகத்தைப் பார்த்திருக்க வேண்டும். பதிவிரதை அவள். அப்படியான ஒரு சாந்தி அவள் முகத்தில் வீசியது. உயிர் போனாலும் அவள் இதை மீறமாட்டாள். நிறைவேற்றியே தீருவாள்'.

'கணவன் இதை எப்படி ஏற்றுக்கொண்டான்?'



'அதுவா, அவன் முகம் பேயறைந்தது போல ஆகிவிட்டது. சுண்ணாம்பு காளவாயில் போடுவார்கள் என்று நினைத்து வந்தவன் தீர்ப்பைக் கேட்டதும் நடுநடுங்கிவிட்டான். ஒரு வேளைச் சாப்பாட்டுக்குக் கூட அவனால் தயிர், நெய், மோர் இன்றி இருக்க முடியாது. ஒரு மண்டலம் தாங்குவானா?

'ஸ்வாமி, இதனால் இம்சைப்பட்ட பசுவின் துக்கம் எப்படித் தீர்ந்துபோகும்?' 'அங்கேதான் இருக்கிறது, கணவனுடைய சாப்பாட்டில் மீதமாகும் பணத்தில் மாட்டுக்கு நல்ல தீவனம் வாங்கிக் கொடுத்து அதன் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதுதான் தீர்ப்பு. அது மாத்திரமல்ல, இந்தத் தடியன் இந்த தண்டனையில் ஒரு சுற்று இளைத்துவிடுவான். அடுத்தமுறை இவன் அடிக்கும்போது அடி பலமாக விழாது' என்று சொல்லிவிட்டு மன்னன் நகைத்தான். எட்டத்தில் நின்ற சேடிப்பெண்களும் சிரித்தார்கள்.

ராணியினுடைய முகம் இப்போது மாறிவிட்டது. பௌர்ணமி போன்ற முகம் இப்படித் திடீரென்று கறுத்து சிந்தனையில் ஆழ்ந்தது. 'என் இதய ராணியே! என்ன சிந்தனை?' என்றான் அரசன்.

'அரசே! மிகப் பிரியமான ஒன்றைத் தவிர்ப்பதுகூட கடுமையான தண்டனைதான் என்று கூறுகிறீர்கள் நியாயம்தான்! அது பிராயச்சித்தம் ஆக முடியுமா?'

'ராணி, குற்றம் செய்த ஒருவனை யானையின் காலில் இடறுவிப்பதும், கழுவில் ஏற்றுவதும், ஆற்று நீரில் போடுவதும் மாத்திரம் என்ன நியாயம் ஆகும்? போதிசத்துவரின் போதனைகளுக்கு எதிரானதல்லவோ? குற்றம் இழைக்கப் பட்டவனுக்கு அதனால் என்ன பரிகாரம்?'

ராணி சிறிது நேரம் பேசாமலிருந்தாள். 'ஸ்வாமி, உங்களுடைய நீதி பரிபாலனத்தை இந்த உலகமே போற்றுகிறது. கணவனுக்கு துரோகம் இழைத்த பெண்ணுக்கு என்ன தண்டனை?' என்றாள். அவள் குரல் நடுங்கியது. தரை பார்த்த கண்களில் நீர் கோத்து நின்றது.

அப்பொழுது அரசன் அவளுடைய கைகளை எடுத்துக்கொண்டாள். 'பிரியமானவளே! என்னுடைய மனம் இன்று மிகவும் குதூகலத்தில் இருக்கிறது. காரணம் தெரியாமல் சந்தோஷம் பொங்குகிறது. இந்த நேரத்தில் கவலை தரும் எந்த விஷயத்தையும் நான் ஏற்கமாட்டேன். நீ இழைத்தது துரோகம் அல்ல; மிகவும் காருண்மையான செயல். அநியாயமாக சம்பவிக்க இருந்த ஓர் உயிர்ப்பலியை நீ தடுத்திருக்கிறாய்! இது எப்படிக் குற்றம் ஆகும்? இதைத் தடுக்காவிட்டால் அல்லவோ நீ கொலைகாரியாக மாறியிருப்பாய்! ஆத்மாவின் குரலைக் கேட்கும் எந்தப் பெண்ணும் செய்யக் கூடிய காரியம்தான் இது. அதற்குத் தண்டனை என் இதயத்துள் சிறைவாசம்தான்' என்று சொல்லிக்கொண்டு அவளை இறுக அணைத்தான்.

சேடிப் பெண்கள் மெதுவாக அந்த இடத்தைவிட்டு அகன்று போனார்கள். 'ராணி இருபது வருடங்களாக நீ எனக்கு வெற்றிலை மடித்து தருகிறாய். எங்கள் வாழ்க்கையில் இந்த வெற்றிலையை நான் என்றுமே மறக்கமுடியாது. இன்று நான் உனக்கு தாம்பூலம் மடித்துத் தருவேன்' என்று சொல்லிக் கொண்டே தங்கத்தினால் இழைத்த அந்த வெற்றிலைப் பெட்டியைத் தன் பக்கம் இழுத்தான்.




ஏதோ பாம்பைக் கண்டு அரண்டது போல 'வேண்டாம்! வேண்டாம்!' என்று தடுத்தாள் ராணி.

'இது என்ன ராணி? இரண்டு வெற்றிலைப் பெட்டி! ஒன்று வெள்ளி உனக்கு; மற்றது தங்கம் எனக்கு. ஏன் இந்தப் பாகுபாடு? இப்படிச் சொல்லிக்கொண்டே அரசியினுடைய வெள்ளிப் பெட்டியை மெல்லத் திறந்தான். திறந்தவன் அப்படியே ஆச்சரியப்பட்டு நின்றுவிட்டான்.

'ஸ்வாமி, நான் சுண்ணாம்பு போடுவதே இல்லை'.

'என்ன? எத்தனை காலமாக?'

'இருபது வருடங்கள்' என்றாள் ராணி, கீழே பார்த்தபடி. ஒரு தபஸ்வினியின் ஒளி அவள் கண்களில் வீசியது. கண்களில் நீர் கோர்த்தபோது அது இன்னும் பிரகாசமாக ஜொலித்தது. நீதி வழுவாது பரிபாலனம் செய்யும் அரசனுக்கு அந்தக் கணம் எல்லாம் புரிந்தது.




# சிவகாமியின்



## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

## கிளியும் கருடனும் 15

“கமலி!”

“கண்ணா!”

“எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை!”

“ஏன் அப்படி?”

“புதிய தளபதிக்கு வந்த வாழ்வை நினைக்க நினைக்க கோபமாய் வருகிறது.”

“கோபித்து என்ன பயன்? அவர் யுத்தகளத்துக்குப் போய் வீராதிவீரர் என்று பெயர் எடுத்து வந்திருக்கிறார்.”




“யுத்தத்துக்குப் போகவேண்டுமென்று என் மனமுந்தான் துடியாய்த் துடிக்கின்றது.”

“யார் குறுக்கே விழுந்து மறிக்கிறார்கள்?”

“வேறு யார்? மாமல்லர்தான்! மாமல்லருக்கு ஏன் நான் ரதசாரதியானேன் என்று இருக்கிறது, அவராலேதானே நானும் இந்தக் கோட்டைக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது?”



“இல்லாமற் போனால் வெட்டி முறித்து விடுவாயாக்கும்!”

“எப்படியும் ஒருநாளைக்கு மாமல்லர் யுத்தத்துக்குப் போகாமல் இருக்கமாட்டார். அப்போது நானும் போகிறேனா, இல்லையா பார்! ஒருவேளை நான் போர்க்களத்தில் வீரசொர்க்கம் அடைந்தால் என்னைப்பற்றிச் சின்னக் கண்ணனுக்குச் சொல்வாயல்லவா?”

“ஆகட்டும், ஆகட்டும்! வீட்டுக்குள்ளே உட்கார்ந்து வீரம் பேசுவதிலே உனக்கு இணை இந்தப் பல்லவ ராஜ்யத்திலேயே கிடையாது என்று கண்ணம்மாளிடம் சொல்கிறேன்.”

“என்ன சொன்னாய்? கண்ணம்மாளா?”

“ஆமாம்; கண்ணம்மாளாய்த்தான் இருக்கட்டுமே?”

“போதும், போதும்! பூலோகத்தில் பெண்களே பிறக்கக் கூடாது என்று நான் சொல்வேன். கூடவே கூடாது.”

“உண்மைதான்! ஆண் பிள்ளைகளைப்போன்றநிர்மூடர்கள் இருக்கிற உலகத்தில் பெண்களைப் பகவான் படைக்கக்கூடாது தான். உங்களால் நாங்கள் படுகிற கஷ்டம் எவ்வளவு என்பதை உணர்ந்து கொள்ளக்கூட உங்களுக்குச் சக்தி இல்லை.”

“இது என்ன அபாண்டம், கமலி! உங்களை நாங்கள் அப்படி என்ன கஷ்டப்படுத்துகிறோம்?”


“சற்று முன்னால் ‘யுத்தத்துக்குப் போய் நான் செத்துப் போகப் போகிறேன்; நீ வீட்டிலே சுகமாயிரு’ என்று சொன்னாயே? அது என்னைக் கஷ்டப்படுத்துகிறதல்லவா? தங்கச்சி சிவகாமியை எட்டுமாத காலமாக மாமல்லர் போய்ப் பார்க்காமலிருக்கிறாரே, அது அவளைக் கஷ்டப்படுத்துகிறதாகாதா?”

“எப்போதும் உன் தங்கச்சியைப் பற்றியேதான் உனக்கு யோசனை வேறு நினைவே கிடையாது.”

“ஆமாம், கண்ணா! கொஞ்ச நாளாக நான்




அவளைப் பற்றியே தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். யோசிக்க யோசிக்க வருத்தமாயிருக்கிறது. சிவகாமி எதற்காக மாமல்லர் மேல் காதல் கொண்டாள் என்று இருக்கிறது. கிளி கிளியுடனும், குயில் குயிலுடனும் கூடி வாழ வேண்டும். மரக் கிளையில் வாழும் பச்சைக்கிளி உச்சி வானத்தில் பறக்கும் கருடனுக்கு மாலையிட ஆசைப்படலாமா!"




"இதென்ன கமலி, இப்படிப் பேசுகிறாய்? கொஞ்ச நாளைக்கு முன்னாலெல்லாம் நீதானே உன் தங்கைக்கு இணை






மூன்று உலகத்திலும் இல்லை என்றும், மன்னாதி ன்னர்களெல்லாம் அவள் காலில் வந்து விழுவார் களென்றும் சொல்லிக் கொண்டிருந்தாய்?"

"ஆமாம், கண்ணா! என் தங்கை மேலுள்ள ஆசையினால் அப்படியெல்லாம் சொன்னேன். ஆசையிருக்குமிடத்தில் அறிவு மழுங்கிவிடும் அல்லவா? ஆர அமர யோசித்துப் பார்த்ததில் இதெல்லாம் நல்லதுக்கில்லை என்று தோன்றுகிறது. நான் சிவகாமிக்கு உடன்பாடாகப் பேசி அவள் ஆசையை வளர்த்து வந்ததும் தப்பு. மாமல்லரின் ஓலைகளை

நீ அவளுக்குக் கொண்டு போய்க் கொடுத்துக் கொண்டிருந்ததும் தப்பு!.."

"இப்பேர்ப்பட்ட ஞானோதயம் உனக்கு எப்படி உண்டாயிற்று?" என்று கண்ணன் பரிகாசக் குரலில் கேட்டான்.

"கொஞ்சமாவது வெட்கமில்லாமல் நீ 'சின்னக் கண்ணன், சின்னக் கண்ணன்' என்று சொல்கிறாயே, அவன் என் வயிற்றில் வந்த பிற்பாடுதான்!" என்றாள் கமலி.

"இதென்ன கமலி! உன் தங்கை சிவகாமிக்கு மாமல்லரைக் கல்யாணம் செய்து கொள்வதற்கும் சின்னக் கண்ணனுக்கும் என்ன சம்பந்தம்? எனக்கு விளங்க வில்லையே?" என்று கூறிக் கண்ணபிரான் 'கலகல' என்று சிரித்தான்.

"உனக்கு ஒன்றுமே விளங்காது கண்ணா! குதிரைகளோடு பழகிப் பழகிக் குதிரைகளுக்கு இருக்கிற அறிவுதான் உனக்கும் இருக்கிறது" என்றாள் கமலி.

"இதோ பார், கமலி! நீ என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லு! கேட்டுக் கொள்கிறேன். என் குதிரைகளைப் பற்றி மட்டும் ஒன்றும் சொல்லாதே! குதிரைகளுக்கு உள்ள அறிவு மனிதர்களுக்கு இருந்தால் இந்த உலகம் எவ்வளவோ மேலாயிருக்குமே!" என்றான் கண்ணன்.



குதிரைகளைப் பற்றிக் கமலி கேவலமாகப் பேசியதில் கண்ணனுக்கு மிக்க கோபம் உண்டாகிவிட்டது. பின்பு சற்று நேரம் அவன் எதுவும் பேசாமல் வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான். கமலியும் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள். எனவே, கண்ணன் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு பேச வேண்டியதாயிற்று.



"நீ என்னதான் சொல்லுகிறாய் கமலி? மாமல்லர் உன் தங்கையைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு என்ன தடை?" என்று கேட்டான்.

"கண்ணா! இத்தனை நாளாக நீ அரண்மனைச் சேவகம் செய்கிறாய். ஆனாலும் அரண்மனை நடைமுறை ஒன்றும் உனக்குத் தெரியவில்லை. இராஜாக்களும் இராஜகுமாரர்களும் கல்யாணம் செய்து கொள்வதென்றால் நீயும் நானும் கல்யாணம் செய்து கொள்வது போலவா? மாமல்லருடைய மகன் ஒரு நாள் இந்தக் காஞ்சி சிம்மாசனத்தில் ஏறவேண்டியிருக்குமல்லவா?"

"இதைத் தெரிந்துகொள்ள அபாரமான அறிவு வேண்டியதில்லை. குதிரைகளுக்கு இருக்கும் அறிவுகூடப் போதுமே!"

"அப்படியானால் அந்த அறிவைச் செலுத்தி இன்னும் கொஞ்சம் யோசித்துப் பார்! சிற்பியின் மகள் வயிற்றிலே பிறக்கும் பிள்ளையைப் பல்லவ சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க முடியுமா?"

"ஏன் முடியாது? அதிலே என்ன கஷ்டம்? நமது அரண்மனைச் சிம்மாசனம் அப்படி ஒன்றும் அதிக உயரமில்லையே? நான் ஒருவனாகவே தூக்கி அதில் உட்கார்த்தி வைத்துவிடுவேனே?"

"நீ விளையாடுகிறாய், கண்ணா! ஆயனச் சிற்பியின்

பேரன் பல்லவ குலத்துச் சிம்மாசனத்தில் ஏறுவதற்கு நாட்டார் — நகரத்தார் சம்மதிப்பார்களா?"

"நாட்டார் — நகரத்தாரைச் சம்மதிக்கச் செய்வது என் பொறுப்பு. கமலி! நீ பார்த்துக்கொண்டே இரு! இரண்டு கையிலும் இரண்டு குதிரைச் சாட்டையை எடுத்துக்கொண்டு போய் நாட்டார் — நகரத்தாரின் முதுகில் வெளுவெளு என்று வெளுத்துச் சம்மதிக்கும்படி செய்கிறேனா, இல்லையா பார்!"

"அது மட்டுமல்ல, கண்ணா! மகேந்திரபல்லவரின் சித்தப்பா பேரன் ஒருவன் வேங்கிபுரத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறானே, உனக்குத் தெரியாதா? அந்த ஆதித்தவர்மன் பல்லவ சிம்மாசனத்துக்குப் போட்டிக்கு வர மாட்டானா?"

"வரமாட்டான் கமலி, வரமாட்டான். வேங்கிபுரம் அடியோடு போய்விட்டது. வேங்கியோடு ஆதித்தவர்மனும் நாசமாய்ப் போய்விட்டான் இனிமேல் வரமாட்டான்!"

"மேலும், நமது குமார சக்கரவர்த்தி மற்ற தேசத்து இராஜகுமாரர்களைப்போல் அல்லவே! ஆசைக்குச் சிவகாமியைக் கல்யாணம் செய்துகொண்டு பட்டத்துக்கு இன்னொரு இராஜகுமாரியைக் கல்யாணம் செய்துகொள்ள மாமல்லர் இணங்கமாட்டார் அல்லவா? அவருடைய சுபாவம் மகேந்திர சக்கரவர்த்திக்கும் நன்றாய்த் தெரியும். ஏகபத்தினி விரதங்கொண்ட இராமனைப் போன்றவர் அல்லவா நமது மாமல்லர்?"

"ஆமாம், கமலி! சந்தேகமே இல்லை மாமல்லர் அது விஷயத்தில் இராமனையும் கண்ணனையும் போன்றவர்தான்!... கோகுலத்துக் கண்ணனை நான் சொல்லவில்லை அந்த அயோத்தி ராமனையும் இந்தக் காஞ்சிக் கண்ணனையும் போன்றவர்!" என்று கண்ணபிரான் தன்னைச் சுட்டிக் காட்டிக் கொள்ளவே, கமலிக்குச் சிரிப்புப் பீரிட்டுக் கொண்டு வந்தது.

சற்றுப் பொறுத்துக் கண்ணபிரான், "கமலி! எனக்கு ஒரே அதிசயமாயிருக்கிறது! இவ்வளவு மர்மமான இராஜரீக விவகாரங்களெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான்.

"எல்லாம் எனக்கே தெரிந்துவிடவில்லை, கண்ணா! நானாக யோசித்ததில் கொஞ்சம் தெரிந்தது. ஒட்டுக் கேட்டதில் மற்றதெல்லாம் தெரிந்தது."

"என்னத்தை ஒட்டுக் கேட்டாய்? எப்போது கேட்டாய்?"

"நாலைந்து நாளைக்கு முன்னால் நீ வீட்டில் இல்லாத போது இங்கே ஒரு மனிதர் வந்திருந்தார், கண்ணா! அவரும் மாமாவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். சிவகாமியின் பெயர் காதில் விழவே நான் சுவர் ஓரமாய் நின்று கேட்டேன். இந்த விஷயமெல்லாம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள் அதோடு..."

"அதோடு என்ன கமலி?"

"இன்னொரு முக்கிய விஷயமும் பேசினார்கள்."

"சொல்லு!"

"சிவகாமிக்கு மாமல்லர் ஓலை எழுதுவதும், அதை நீ கொண்டு போய்க் கொடுத்து வருவதும் உன் அப்பாவுக்குத் தெரிந்திருக்கிறது. அதைப்பற்றி அந்தப் புதுமனிதரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்!"

"ஆஹா! அந்தக் கிழ கோட்டான், அந்த இராவண சந்நியாசி, அந்த ருத்ராட்சப் பூனை அப்படியா செய்து கொண்டிருக்கிறது?" என்றான் கண்ணபிரான்.




அவனுடைய தந்தையைப் பற்றித்தான் அவ்வளவு மரியாதையான வார்த்தைகளைச் சொன்னான்!

கமலி அவனுடைய வாயைப் பொத்தினாள். "அந்தப் புது மனிதர் யார் தெரியுமா, கமலி!" என்று கண்ணன் கேட்டான்.

"தெரியாது அதற்கு முன்னால் அவரை நான் பார்த்ததே இல்லை" என்றாள் கமலி.

அந்தச் சமயத்தில் தெருவில் விரைவாக குதிரை பாய்ந்துவரும் சத்தம் கேட்டது. கண்ணன், கமலி இருவரும் பலகணி வழியாய் வீதியில் பார்த்தார்கள். நாலுக்கால் பாய்ச்சலில் சென்ற குதிரை மீது ஒருவன் போய்க் கொண்டிருந்தான். அவனுடைய முகம் ஒரு கணம் கண்ணன் வீட்டுப் பக்கம் திரும்பி மறு கணம் எதிரே நோக்கியது.

கமலி, "கண்ணா! அவர்தான்! அந்தக் குதிரையில் போகிறவர்தான் அன்றைக்கு வந்து மாமாவுடன் பேசிக் கொண்டிருந்தவர்! அவர் யார், உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியும், கமலி! அவர்தான் ஒற்றர் தலைவன் சத்ருக்னன். மகேந்திர சக்கரவர்த்தியிடம் போய்விட்டுத் திரும்பி வருகிறான். ஏதோ விசேஷச் செய்தி கொண்டு வருகிறான். இதோ போய்த் தெரிந்துகொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுக்

கண்ணன் வெளியேறினான்.

ஒரு நாழிகைக்கெல்லாம் அந்த வீட்டுவாசலில் 'கடகட' என்ற சத்தத்துடன் ரதம் வந்து நின்றது. கண்ணபிரான் ரதத்தின் முன் தட்டிலிருந்து குதித்து உள்ளே ஓடிவந்து, சமையற் கட்டிலிருந்து வந்து கொண்டிருந்த கமலியின் மேல் மோதிக் கொண்டான்.

"அவ்வளவு என்ன அவசரம்?" என்றாள் கமலி.

கண்ணபிரான், "என்ன அவசரமா? யுத்தத்துக்குப் போகிற அவசரந்தான்!" என்றான்.

"என்ன, யுத்தத்துக்குப் போகிறாயா?" என்று கமலி பாய்ந்து வந்து கண்ணன் கழுத்தைத் தன் இரு கரங்களாலும் சேர்த்துக் கட்டிக் கொண்டாள்.

"ஆமாம், கமலி! ஒற்றர் தலைவன் சத்ருக்னன் மகேந்திர சக்கரவர்த்தியிடமிருந்து ஓலை கொண்டு வந்திருக்கிறான். மாமல்லர் போர்க்களத்துக்குப் போகச் சக்கரவர்த்தி அனுமதி கொடுத்து விட்டார். இன்னும் அரை நாழிகையில் மாமல்லர் கிளம்புகிறார், கமலி!..."

"நீயும் கிளம்புகிறாயா, கண்ணா! நிஜமாகவா?"

"இது என்ன கேள்வி, கமலி! மாமல்லர் போனால் நான் அவருடன் போகாமல் எப்படி இருக்க முடியும்?"




"மாமல்லர் சக்கரவர்த்தியின் திருக்குமாரர். நாளைக்குப் பல்லவ சிம்மாசனத்தில் ஏறப்போகிறவர். அவர் போர்க்களத்துக்குப் போய் யுத்தம் செய்ய வேண்டும், நீ ஏன் போக வேண்டும்? எந்த ராஜா வந்தாலும் எந்த ராஜா போனாலும் நமக்கு என்ன வந்தது?"

"இது என்ன, கமலி? நேற்றுவரை நீ இப்படியெல்லாம் பேசினதே இல்லையே? நாம் பிறந்த நாட்டுக்கு அபாயம் வந்திருக்கும்போது, நமக்கென்ன என்று நாம் வீட்டில் இருப்பதா?"



"நாட்டுக்கு அபாயம், நகரத்துக்கு அபாயம் என்று ஓயாமல் சொல்கிறாயே, கண்ணா! அப்படி என்ன அபாயம் வந்துவிட்டது?"

"பல்லவ நாட்டுக்கு இது பொல்லாத காலம், கமலி. வடக்கேயிருந்து வாதாபி புலிகேசி மிகப் பெரிய சைனியத்துடன் வந்து கொண்டிருக்கிறார். அந்தச் சைனியத்தைத்தான் சக்கரவர்த்தி தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார். இந்தப் பக்கத்தில் கங்க நாட்டு ராஜாவுக்கு அதற்குள் அவசரம் பொத்துக் கொண்டுவிட்டது. புலிகேசிக்கு முன்னால் தான் காஞ்சிக்கு வந்துவிட வேண்டுமென்று மேற்குத் திக்கிலிருந்து படை எடுத்து வந்து கொண்டிருக்கிறான். கங்க நாட்டு ராஜாவின் பெயர் என்ன தெரியுமா, கமலி! துர்விநீதன்! — துரியோதனனுடைய மறு அவதாரம் இவன்தான் போலிருக்கிறது. இந்தத் துர்விநீதனை எதிர்க்கத்தான் மாமல்லர் கிளம்புகிறார், கமலி! நானும் கிளம்புகிறேன். இத்தனை நாளும் நான் எப்போது வரும் என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம் வந்திருக்கிறது. மனப்பூர்வமாக, உற்சாகமாக எனக்கு விடை கொடுத்து அனுப்பு!"

"கண்ணா! நான் என்ன செய்யட்டும்? என் மனத்தில் ஏனோ உற்சாகமில்லை. என் தங்கை சிவகாமியை நினைக்க மனச்சோர்வு அதிகமாகிறது. அவளுடைய தலைவிதி என்னவோ என்று எண்ண எண்ண, ஏக்கமாயிருக்கிறது."

"ஆகா! முக்கியமான விஷயத்தைச் சொல்லாமல் விட்டு விட்டேனே? மகேந்திர சக்கரவர்த்தியைப் பற்றி நீ என்னவெல்லாமோ சந்தேகப்பட்டாய் அல்லவா, கமலி! அதெல்லாம் சுத்தத் தப்பு! சக்கரவர்த்தி என்ன சொல்லி அனுப்பி இருக்கிறார், தெரியுமா? மாமல்லரைப் போர்க்களத்துக்குப் போவதற்கு முன்னால் நேரே ஆயனர் வீட்டுக்குச் சென்று ஆயனரையும் சிவகாமியையும் உடனே காஞ்சிக் கோட்டைக்கு அனுப்பச் சொல்லியிருக்கிறார். ஒருவேளை நானே அவர்களை ரதத்தில் ஏற்றிக் கொண்டு வந்து இங்கே விட்டுப் போனாலும் போவேன். மகேந்திரப் பல்லவரைப் பற்றி இப்போது என்ன சொல்கிறாய், கமலி! அவர் நல்லவரா, பொல்லாதவரா?" என்று கண்ணபிரான் தலைநிமிர்ந்து கர்வத்துடன் கேட்டான்.

"எப்படியாவது எல்லாம் நன்றாக முடியட்டும், கண்ணா. நீயும் போர்க்களத்திலிருந்து க்ஷேமமாய்த் திரும்பி வர வேண்டும்!" என்று கமலி கூறியபோது, அவள் கண்களிலிருந்து அருவி பெருகியது.

(சபதம் தொடரும்)

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப் பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும் சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து போவீர்கள் !!!




# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

# வெளியே எதுவோ எரிந்து கொண்டிருக்கிறது

வாஸ்லோ கிரஸ்னஹோர்கய்

தமிழில் கார்த்திகைப் பாண்டியன்

செயிண்ட் அன்னா ஏரி எரிமலையின் வாய்க்குள் உருவானதொரு உயிர்ப்பற்ற ஏரி, சுமார் 950 அடிகள் உயரத்தில் அமைந்திருந்தது, மேலும் ஆச்சரியப்படும் வகையில் கிட்டத்தட்டக் கச்சிதமான வட்ட வடிவத்தையும் பெற்றிருந்தது. மழைநீரால் நிரம்பியிருந்தது: அதில் வாழக்கூடிய ஒரே மீன் கெளுத்திமீன் மட்டுமே. கரடிகள், அவை நீரருந்த வந்தால், தேவதாருக்கள்—அடர்ந்த காடுகளை விட்டு சோம்பலாகக் கீழிறங்குகையில் மனிதர்களிடமிருந்து வேறுபட்ட பாதைகளைப் பயன்படுத்தின. சற்றுத் தொலைவான பகுதியில், அதிக நடமாட்டமற்ற, தட்டையான சதுப்புநிலத்தைக் கொண்ட பிரிவொன்று இருந்தது: இன்று, மரப்பலகைகளாலான ஒரு பாதை சதுப்புநிலத்தின் மீது வளைந்து நெளிந்து செல்கிறது. மோஸ் ஏரி என்று அது அழைக்கப்படுகிறது. தண்ணீரைப் பொறுத்தவரை, அது ஒருபோதும் உறைவதில்லை என்றொரு வதந்தியும் உண்டு; நடுவில், அது எப்போதும் வெதுவெதுப்பாகவே இருக்கிறது. பல லட்சம் ஆண்டுகளாக எரிமலையின் வாய் உயிர்ப்பற்று கிடக்கிறது, அதுபோலத்தான் ஏரியின் நீரும். பெரும்பாலான சமயங்களில், அற்புதமானதொரு மௌனம் நிலத்தின் மீது அடர்த்தியாகக் கவிந்திருக்கிறது.

முதல்—நாள் வருகை தந்தவர்களிடம் சுற்றிக் காட்டும்போது ஏற்பாட்டாளர்களில் ஒருவர் தெரிவித்ததைப் போல — கலைகளில் பிரதிபலிக்கவும், ஆயிரம் — அடிகள் சிகரம் என்றறியப்பட்ட மிகவுயர்ந்த மலையினருகே முகாம் அமைந்திருப்பதை பெரும் அனுகூலமாகக் கொண்ட, யாரும் மறக்காத, புத்துணர்வூட்டும் சிற்றுலாக்களுக்கும், அது பொருத்தமான ஒன்றுதான்; இப்படியாக இரு திசைகளிலும் — சிகரத்தின் உச்சி வரை, சிகரத்திலிருந்து கீழே! — காலடி வரத்தும் சொல்லிக் கொள்ளும்படி அடர்த்தியாகவே இருந்தது: அடர்த்தியாக, ஆனால் அதே சமயத்தில் இதைக்காட்டிலும் அதிதீவிர செயல்கள் எதுவும் கீழிருந்த முகாமில் நடைபெறவில்லை என்பதை எவ்வகையிலும் அது குறிப்பிடவில்லை: தன் வழக்கத்தின்படி, மேலும் எப்போதையும் விடத் தீவிரமாகக் காலம் கடந்து செல்ல, இந்தத் தளத்துக்கென பிரத்தியேக முறையில் உருவாக்கப்பட்ட ஆக்கப்பூர்வ சிந்தனைகள் உருவங்கொண்டு கற்பனையில் அவற்றின் இறுதி வடிவத்தை வந்தடைந்திருந்தன; அதற்குள் அனைவரும் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட, பிற்பாடு அவர்களுடைய சொந்தக் கரங்களால் சீரமைத்துக்கொண்ட இடத்துக்குள் ஏற்கனவே குடியேறியிருந்தார்கள், பெரும்பாலானவர்கள் முதன்மை கட்டிடத்தில் தனி அறையைப் பெற்றிருந்தார்கள், ஆனால் மரக்குடில்களில் அல்லது வெகு காலமாகப் பயன்பாட்டில் இல்லாத கொட்டகைக்குள் ஒடுங்கிக் கொண்டவர்களும் அங்கே இருந்தார்கள்; முகாமின் குவிமையமாக விளங்கிய வீட்டின் பிரம்மாண்டமான பரணுக்கு மூவர் மேலேறிச் சென்றனர், ஒவ்வொருவரும் தங்களுக்கென்று தனியிடங்களைப் பிரித்துக் கொண்டார்கள் — கூடவே, மேலும் இது அனைவருக்குமான மாபெரும் தேவையாயிருந்தது:



வேலையின்போது தனிமையில் இருப்பது; அலைக்கழிப்பற்ற மற்றும் மனக்குழப்பமற்ற அமைதியை அவர்கள் வேண்டினார்கள், மேலும் அப்படித்தான் அவர்கள் தங்களுடைய வேலையை அணுகினார்கள், மேலும் மிகச்சரியாக அப்படித்தான் நாட்களும் கடந்தன, பெரும்பாலும் வேலையில், ஒரு சிறிய பகுதி நடைகளுக்கெனவும், ஏரியில் ஒரு மகிழ்ச்சியான முழுக்குக்கும், வீட்டில்— தயாரான பழவகை பிராந்தியோடு இணைந்த உணவுகளுக்கும் முகாமின் நெருப்பைச் சுற்றி நிகழும் பாடல்களின் மாலைநேர சப்தங்களுக்கும் ஒதுக்கப்பட்டது.

இந்த விவரணைக்கென பொதுப்படையானதொரு உரிப்பொருளைப் பயன்படுத்துவது மயக்கத்தைத் தந்தது, என்றாலும், மெதுவாக ஆனால் வெகு தீர்க்கமாக அந்த சங்கதி பிரகடனப்படுத்தப்பட்டபோது — முதல் வேலைநாளின் போதே கூர்மையான கண்களுக்கு அது அப்படித்தான் தோற்றமளித்தது; என்றாலும், மூன்றாம் நாளின் காலையில் அனேகமானவர்களுக்கு அது பெரும்பாலும் தீர்மானமான விசயமாக மாறியிருந்தது— அதாவது உண்மையாகவே அங்கிருந்தவர்களில் ஒருவன், பன்னிரெண்டு பேரில் ஒருவன், முழுமையாக மற்ற அனைவரையும் போலல்லாத ஒருவன் அங்கிருந்தான். வெறுமனே அவனுடைய வருகை கூட மட்டுமீறிய மர்மத்தைக் கொண்டிருந்தது, அல்லது குறைந்தபட்சம் மற்றவர்களுடையதோடு ஒப்பிடுகையில் வெகு வித்தியாசமாக நடந்தேறியிருந்தது, ஏனெனில் அவன் புகைவண்டி மூலமாகவோ அல்லது பேருந்து மூலமாகவோ வந்திருக்கவில்லை; எத்தனை நம்பமுடியாததாக அது தோற்றமளித்தாலும், அவனுடைய வருகை நிகழ்ந்த நாளின் பின்மதியத்தில், அனேகமாக சுமார் ஆறு அல்லது ஆறரை மணிக்கு, தற்போதுதான் நடந்தே வந்து சேர்ந்த ஒரு மனிதனைப்போல, சுருக்கமானதொரு தலையசைப்பைத் தவிர வேறொன்றுமில்லாமல், முகாமினுடைய மைதான வாயில்களின் வழியே அவன் எளிமையாக நுழைந்தான்; மேலும் கண்ணியத்தோடும் குறிப்பிடும்படியான பணிவிணக்கத்தோடும் ஏற்பாட்டாளர்கள் அவனுடைய பெயர் குறித்து விசாரித்தபோது, மேலும் பிறகு சற்றே அழுத்தத்தோடு எப்படி வந்து சேர்ந்தான் என்று கேள்விகள் எழுப்பியபோதும், அவன் வெறுமனே யாரோவொருவர் தன்னை சாலையிலிருக்கும் வளைவு வரை மகிழுந்தில் அழைத்து வந்ததாகச் சொன்னான்; ஆனால் அனைத்தையும்— போர்த்தியிருந்த மௌனத்தினூடாக எந்தவொரு “சாலையிலிருக்கும் வளைவிலும்” அவனைக் கொண்டு வந்து விட்டிருக்கக்கூடிய எந்த மகிழுந்தின் சத்தமும் யாருக்கும் கேட்கவேயில்லை, அவன் மகிழுந்தில் வந்திருக்கலாம் ஆனால் முழு வழியும் அல்ல, அதுவும் சாலையிலிருக்கும் ஒரு குறிப்பிட்ட



வளைவு வரை மட்டுமே, அதுவும் அங்கேயே இறக்கி விடப்படும் வரை என்கிற மொத்த எண்ணமும் சற்றே நம்ப முடியாததாக ஒலித்தது, எனவே யாரும் உண்மையில் அவனை நம்பவில்லை, அல்லது இன்னும் துல்லியமாக, அவனுடைய வார்த்தைகளை எப்படிப் புரிந்து




கொள்வதென்பதை யாரும் அறிந்திருக்கவில்லை, ஆகவேதான், ஏற்கனவே அந்த முதல் நாளிலேயே, ஒரே சாத்தியம் என்பதாக, பகுத்தறிவுக்குட்பட்ட ஒரே சங்கதி என்பதாக — எல்லாம் ஒன்றுதான் என்பதைப்போலவும், ஆகப்பெரிய அபத்தம் என்பதாகவும்— ஒரு கருத்து வேறுபாடு அங்கே நிலவியது: அதாவது அவன் மொத்தமும் நடந்தே பயணித்திருக்கிறான்; புக்கரெஸ்டில் இருந்து தானாகக் கிளம்பி இந்தப் பயணத்துக்கு தன்னைத்தானே உட்படுத்தியிருக்கிறான்: புகைவண்டியிலும் அதன் தொடர்ச்சியாக அங்கு வந்து சேரும் பேருந்திலும் ஏறுவதற்குப் பதில் வெறுமனே தன் கால்களால் அதைச் சாதித்திருந்தான் — மேலும் இப்போது எத்தனை வாரங்களுக்கு என்பது யாருக்குத் தெரியும்! — செயிண்ட் அன்னா ஏரியை நோக்கி நீண்ட நெடிய பயணம், முகாமினுடைய மைதான வாயில்களின் வழியே மாலை ஆறு அல்லது ஆறரை மணிக்கு உள்ளே நுழைந்து, மேலும் ஏற்பாட்டுக்குழுவினரால் ஐயான் கிரிகோரெஸ்குவை வாழ்த்தும் மரியாதை தங்களுக்குக் கிட்டுமா என்கிற கேள்வி முன்வைக்கப்பட்டபோது, அவன்

தன்னுடைய பதிலை சுருக்கமானதொரு தலையசைப்பின் வழியே தெரிவித்தான்.



அவன் சொன்ன கதையின் நம்பகத்தன்மை அவனுடைய காலணிகளின் நிலையைச் சார்ந்து அமையுமெனில், பிறகு யாருக்கும் எந்த சந்தேகமும் இருக்க முடியாது: அனேகமாக உண்மையில் பழுப்பு நிறமுடையதாக இருக்க வேண்டும், அவை செயற்கைத் தோலால் செய்யப்பட்ட மெல்லிய கோடைக்கால லோஃபர்கள், விரல்நுனிகளில் தைக்கப்பட்ட சிறிய அலங்காரங்களோடு, மேலும் இப்போது அவனுடைய கால்களின் கீழே அவை மொத்தமாய் சிதைந்திருந்தன. உள்ளங்கால் பகுதிகள் இரண்டும் மேற்பகுதிகளிலிருந்து பிரிந்து, குதிகால்கள் ஒட்டுமொத்தமாகத் தட்டையாய் மிதிபட்டுக் கிடந்தன, மேலும் வலதுபக்க விரல் நுனிகளில் ஏதோவொன்று தோலை குறுக்குவாட்டில் கிழித்துத் திறந்து அதனடியிலிருந்த காலுறையை பார்வைக்கு வெளிக்காட்டியது. ஆனால் அவனுடைய காலணிகள் மட்டும்தான் என்றில்லை, இறுதி வரை அனைத்துமே மர்மமாகத்தான் இருக்க வேண்டியிருந்தது: எந்தவொரு சூழலிலும், அவன் அணிந்திருந்த உடைகளில் சிலவற்றைத் தவிர்த்து, பெரும்பாலானவை, இந்த அணிகலன்களின் சங்கதிகள் சியூசெஸ்கு காலகட்டத்தின் இறுதி எண்பதுகளை விட்டு அதன் ஆழ்ந்த துயரத்திலிருந்து அப்படியே இந்தத் தருணத்துக்கு நேரடியாக வந்திறங்கிய மனிதனொருவனுக்கு பாத்தியப்பட்டவை என்பதைப்போல, மற்றவர்களுடைய மேற்கத்தைய அல்லது மேற்கத்தைய பாணியைப் போல தோற்றமளிக்கச் செய்த உடைகளிலிருந்து தனித்துத் தெரிந்தன. காற்றோட்டமான காற்சட்டைகள் விளக்கமுடியாத வண்ணங்களால் ஆன அடர்த்தியான சணல்துணியை ஒத்த சமாச்சாரத்தால் தயாரிக்கப் பட்டிருந்தன, கணுக்கால்களில் தளர்வாக அசைந்தபடி கிடந்தன, என்றாலும் இன்னும் அதிக வலி தருவதாய் அமைந்தது அவனுடைய




கம்பளிச்சட்டைதான், நம்பிக்கைகளை மொத்தமாய் நீர்த்துப் போகச் செய்யும் சேற்றின் பச்சை வண்ணத்தில் இறுக்கமின்றி நெய்த வண்ணக்கோடுகளால் ஆன சட்டையின் மீது அதனை அணிந்திருந்தான், கோடைக்கால வெப்பத்தையும் மீறி, அவனுடைய தாடை வரை அதனுள் சரியாக பொத்தான்கள் போடப்பட்டிருந்தது.

நீர்ப்பறவையைப் போல, அவன் மெலிந்திருந்தான், அவனுடைய தோள்கள் கூன் போட்டிருந்தன; வழுக்கைத்—தலையோடு, அச்சந்தரும் அவனுடைய சிடுசிடுப்பான முகத்தில் இரண்டு தூய்மையான அடர்—பழுப்பு நிறக்கண்கள் எரிந்தன — இரண்டு தூய்மையான எரியும் கண்கள், என்றாலும் உள்ளிருக்கும் நெருப்பால் எரியாமல், ஆனால், இரண்டு நிலைக்கண்ணாடிகளைப் போல, வெளியே எதுவோ எரிந்து கொண்டிருக்கிறது என்பதை வெறுமனே பிரதிபலிக்கக்கூடிய கண்கள்.

மூன்றாம் நாளில் அவர்கள் அனைவரும் புரிந்து கொண்டார்கள், அவனைப் பொறுத்தமட்டில் முகாம் என்பது முகாம் இல்லை, வேலை என்பது வேலை இல்லை, கோடை என்பது கோடை இல்லை, மேலும் இதுபோன்ற கூடுகைகளில் அதிகாரம் செலுத்த முற்படும் நீச்சலோ அல்லது விடுமுறைக் காலத்தின் உற்சாகமான ஓய்வளிக்கும் சந்தோசமோ எதுவும் அவனுக்கு இல்லை. அவன் தனக்கெனக் கேட்டு ஏற்பாட்டாளர்களிடமிருந்து புதிய காலணிகளைப் பெற்றுக்கொண்டான் (அவர்கள் கொட்டகைக்குள் ஒரு ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த புதைமிதியடிகளின் இணையை அவனுக்கெனக் கண்டுபிடித்தார்கள்), அவற்றை அவன் நாள் முழுதும் அணிந்திருந்தான், முகாமின் மேலும் கீழுமாகப் போய் வந்து கொண்டிருந்தாலும் அதன் எல்லைகளை ஒருபோதும் நீங்காமல், ஒருபோதும் சிகரத்தின் மீது ஏறாமல், ஒருபோதும் சிகரத்திலிருந்து இறங்காமல், ஒருபோதும் ஏரியைச் சுற்றி உலாவாமல், ஒருபோதும் மோஸ் ஏரியின் மீதிருந்த மரக்கட்டைகளின் மீது கூட அவன் நடக்கச் செல்லவில்லை; அவன் உள்ளேயே இருந்தான், மேலும் அங்குமிங்கும் அவன் தென்பட நேர்ந்தபோது, வெவ்வேறு வழிகளில் இப்படியும் அப்படியுமாக நடந்தான், மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்க, முதன்மை கட்டிடத்தில் இருந்த அனைத்து அறைகளின் வழியாகவும் சென்றான்,

ஓவியர்கள், அச்சுக்கலைஞர்கள், சிற்பிகள், மேலும் ஆழமாகத் தொலைந்தவர்களின் முதுகுகளின் பின்னால் நிதானித்து, கொடுக்கப்பட்ட வேலை ஒவ்வொரு நாளும் எப்படி மாறிக் கொண்டிருந்தது என்பதை கூர்ந்து கவனித்தான்; பரணுக்கு மேலேறிச் சென்றான், கொட்டகைக்குள்ளும் மரக்குடிலுக்குள்ளும் போனான், ஆனால் எப்போதும் யாரிடமும் பேசவில்லை, மேலும் எந்தக் கேள்விக்கும் மிக மெலிதானதொரு வார்த்தையைக் கொண்டு கூட எப்போதும் பதிலளிக்கவில்லை, ஏதோ அவனொரு ஊமை மற்றும் செவிடு என்பதைப்போல, அல்லது தன்னிடம் தேவைப்படுவது என்ன என்பதைப் புரிந்து கொள்ளாதவனைப்போல; துல்லியமாகச் சொல்வதெனில் வார்த்தைகளற்று, வித்தியாசமாக, உணர்வுகள் ஏதுமின்றி, ஒரு இலைப்பூச்சியைப் போல; மேலும் அவர்கள் அனைவரும், மொத்த பதினோரு பேரும், கிரிகோரெஸ்கு தங்களைக் கண்காணித்தது போலவே, அவனை கண்காணிக்கத் தொடங்கியபோது — அவர்கள் ஒரு உண்மையைப் புரிந்து கொண்டார்கள், அன்று மாலை தீயைச் சுற்றி அமர்ந்திருக்கையில் தங்களுக்குள் அதனை விவாதிக்கவும் செய்தார்கள் (எப்போதும் அவன் விரைவாகத் தூங்கச் சென்றதால் கிரிகோரெஸ்கு அங்கே ஒருபோதும் தன் தோழர்களைத் தொடர்ந்து வந்ததில்லை) — அந்த உண்மை என்னவெனில், ஆம், அனேகமாக அவனுடைய வருகை வினோதமானதாக இருந்திருக்கலாம், அவனுடைய காலணிகளும் கம்பளிச்சட்டையும் வித்தியாசமாக இருந்தன, அவனுடைய குழிவிழுந்த முகம், அவனுடைய சிடுசிடுப்பு, அவனுடைய கண்கள், அவனுடைய எல்லாமும் இப்படித்தான் இருந்தன — ஆனால் அவை எல்லாவற்றிலும் அசாதாரணமான சங்கதி என்னவென்பதை அவர்கள் நிறுவினார்கள், இப்போது வரை கூட அவர்கள் கவனித்திராத ஒன்றுதான், என்றாலும் அதுதான் அனைத்திலும் வெகு விசித்திரமானது: அதாவது இன்றைய தினத்தின் இந்த புகழ்மிக்க படைப்பாளி, எப்போதும் சுறுசுறுப்பாய் இருக்கக்கூடியவன், அனைவரும் வேலையில் ஈடுபட்டிருக்கையில், இங்கே இவன் நிறைவாகவும் முழுமையாகவும் பொழுதுகளைப் பயனற்று கழித்துக் கொண்டிருந்தான்.

அவன் எதுவும் செய்யவில்லை: தங்களுடைய கண்டுபிடிப்பால் அவர்கள் அதிர்ந்து போனார்கள், ஆனால் அதைக் காட்டிலும் அதிகமாக முகாம் தொடங்கியபோதே இதைத் தாங்கள் கவனிக்கவில்லை என்கிற சங்கதியால்; ஏற்கனவே, நீங்கள் இதைக் கணக்கில் கொள்ள விரும்பினால், ஆறாவது, ஏழாவது, எட்டாவது நாளை நெருங்கியிருந்தது; சொல்வதெனில் ஏற்கனவே ஒரு சிலர் தங்களுடைய கலைப்படைப்புகளுக்கான இறுதி வடிவங்களைத் தரத் தயாராகி இருந்தார்கள், மேலும் இப்போதுதான் அந்த விசயம் தன் முழுநிறைவோடு அவர்களுக்குக் காட்சியளித்தது.

உண்மையில் அவன் என்ன செய்து கொண்டிருந்தான்?

ஒன்றும் இல்லை, ஒன்றுமே இல்லை.

அந்தப் புள்ளியிலிருந்து, அனிச்சை செயலென்பதாக அவர்கள் அவனை கவனிக்கத் தொடங்கினார்கள், ஒரு தருணத்தில், அனேகமாக பத்தாவது நாள், அவர்கள் இதைத் தெளிவாக உணர்ந்தார்கள், புலர்காலைகளிலும் காலைப்பொழுதுகள் மொத்தமும், மற்றவர்களில் பெரும்பாலானவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும்போது, ஒப்பீட்டளவில் சற்றே பெரிதாக விரிந்த காலகட்டம் ஒன்றிருந்தது, அவ்வேளைகளில் கிரிகோரெஸ்கு, பொதுவில் சீக்கிரமே விழித்துக் கொள்பவனாக அறியப் பட்டிருந்தாலும் கூட, எங்கும் தென்படவில்லை; கிரிகோரெஸ்கு எங்கும் போகாத ஒரு காலகட்டம்; உள்ளேயோ அல்லது வெளியேயோ, அவன் மரக்குடிலிலும் இல்லை, கொட்டகையிலும் இல்லை; வெறுமனே அவனை எங்கும் பார்க்க முடியவில்லை, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்கு அவன் எங்கோ தொலைந்து விட்டான் என்பதைப்போல.




ஆர்வத்தால் உந்தப்பட்டு, பனிரெண்டாவது நாளின் மாலையில் ஒரு சில பங்கேற்பாளர்கள், தொடரவிருக்கும் நாளின் விடியலில் எழுந்து இந்த விசயத்தைப் பற்றிப் புலனாய்வு செய்ய முயற்சிப்பதெனத் தீர்மானம் செய்தார்கள். ஓவியர்களில் ஒருவன், ஒரு ஹங்கேரியன், மற்றவர்களை எழுப்பும் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.

அவர்கள் முதன்மைக் கட்டிடத்தைச் சுற்றி நின்றபோது, இன்னும் இருட்டாக இருந்தது, கிரிகோரெஸ்கு அவனுக்கான அறையில் இல்லை என்பதை உறுதி செய்தவர்களாக, முக்கிய வாயிலின் வழியே அவர்கள் வெளியேறிச் சென்றார்கள், மீண்டும் திரும்பி வந்தார்கள், திரும்பவும் மரக்குடிலுக்கும் கொட்டகைக்கும் சென்றார்கள், எங்கும் அவனைப் பற்றிய சிறு தடயத்தைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை. குழம்பியவர்களாக, அவர்கள் ஒருவரையொருவர் பார்த்தார்கள். ஏரியில் இருந்து, மெலிதான தென்றல் எழுந்தது, விடியல்

உடைந்து வெளியேற ஆரம்பித்தது, அவர்களால் மெல்ல ஒருவரையொருவர் உணர முடிந்தது; மௌனம் முழுமையாக ஆக்கிரமித்திருந்தது.

பிறகு, போதும் போதாமலும் கேட்ட, மற்றும் தாங்கள் நின்ற இடத்திலிருந்து அடையாளம் காணமுடியாத ஒரு சத்தத்தை, அவர்கள் உணர்ந்தார்கள். அது தொலைவிலிருந்து வந்தது, முகாமின் வெகுவாக ஒதுக்கப்பட்ட பகுதியில் இருந்து, அல்லது இன்னும் துல்லியமாக, இரண்டு புறவீடுகள் நின்றிருந்த கண்ணுக்குப் புலப்படாத எல்லைக்கோட்டின் மறுபுறத்திலிருந்து, அவைதான் முகாமின் வரம்புகளை அடையாளமிட்டன. ஏனெனில், அந்தப் புள்ளி தொடங்கி, அது குறிக்கப்படவில்லை என்றபோதும், அங்கே நிலப்பகுதி ஒரு திறந்தவெளி முற்றமாகக் குறுகி நின்றது; இயற்கை, எதனுடைய பிடியிலிருந்து அந்த நிலம் பிடுங்கப்பட்டிருந்ததோ, இன்னும் அதைத் திரும்பவும் எடுத்துக் கொண்டிருக்கவில்லை, என்றபோதும் யாரும் அதன் மீது விருப்பம் தெரிவிக்கவில்லை: ஒரு வகையான நாகரிகமற்ற, சற்றே அகோரமான கைவிடப்பட்ட நிலம், தினசரி சமையலறைக் குப்பைகள் மற்றும் பாழடைந்த குளிர்சாதனப் பெட்டிகளின் வீணான சமாச்சாரங்களைப் புதைக்கும் நிலம் என்கிற பயன்பாட்டைத் தாண்டி அதன் மீது முகாமிருந்த நிலத்தின் உரிமையாளர்கள் எந்த வெளிப்படையான உரிமையையும் கோரியதில்லை, அனைத்தும் யூகிக்கக்கூடியதுதான், எனவே காலம் கடந்து போகையில் அந்தப் பிரதேசம் மொத்தமும் விடாப்பிடியான, கிட்டத்தட்ட ஊடுருவவே முடியாத, பொருத்திப்பார்த்தால் ஓரளவு மனிதர்களை ஒத்த களைகளின் வளர்ச்சியால் சூழ்ந்திருந்தது; முட்கள் நிரம்பிய, அடர்ந்த, விரோதமான பயிர்வகைகள், பயன்படுத்தவோ அழிக்கவோ முடியாதவை.

எங்கோ பின்னால் இருந்து, இந்த புதர்க்காட்டின் ஒரு புள்ளியில் இருந்து, சத்தம் வடிகட்டப்பட்டு தங்களை நோக்கி வருவதை அவர்கள் கேட்டார்கள்.

தங்களுக்கு முன்பிருந்த பணி குறித்து அவர்கள் வெகுநேரம் யோசிக்கவில்லை: ஒரு வார்த்தை கூட சொல்லாமல், அவர்கள் வெறுமனே ஒருவரையொருவர் பார்த்தார்கள், மௌனமாகத் தலையசைத்து, அடர்த்தியான புதர்களுக்குள் நுழைந்தார்கள், ஏதோவொன்றை நோக்கி, அதனை உடைத்துக் கொண்டு முன்னேறினார்கள்.




அந்த சத்தத்தை உணர்ந்து யாரோ தோண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நிறுவியபோது, ஏற்கனவே அவர்கள் மிகுந்த ஆழத்தில் இருந்தார்கள், முகாமின் கட்டிடங்களிலிருந்து வெகு தொலைவில்.

அவர்கள் சுற்றுமுற்றும் அலைந்தார்கள், ஏனெனில் அந்த சாதனம் பூமிக்குள் புதையும் சத்தம் ஏற்கனவே அவர்களுக்கு தெளிவாகக் கேட்கத் தொடங்கியிருந்தது, மணல் வெளியே வீசப்படுவதும், தொப் என்று விரிந்து படரும் சத்தத்தோடு ஹார்ஸ்டெயில் புற்களின் மீது மோதுவதும்.

அவர்கள் வலதுபுறம் திரும்ப வேண்டியிருந்தது, மேலும் பிறகு பத்து அல்லது பதினைந்து தப்படிகள் முன்னாடி, ஆனால் அங்கே அவர்கள் சற்று வேகமாகச் சென்றதன் காரணமாக, தங்களுடைய சமனிலையை இழந்ததால், கிட்டத்தட்ட மூழ்குவதைப்போல அவர்கள் கீழே விழுந்தார்கள்: பிரம்மாண்டமானதொரு குழியின் முனையில் அவர்கள் நின்றிருந்தார்கள், உத்தேசமாக மூன்றடி அகலமும் ஐந்தடி நீளமும், அதன் அடிப்பகுதியில் வெகு நிதானமாக கிரிகோரெஸ்கு வேலை பார்த்துக் கொண்டிருப்பதை அவர்கள் பார்த்தார்கள். ஒட்டுமொத்த குழியும் மிக ஆழமாக இருந்ததால் அவனுடைய தலை கூட தெளிவாகத் தெரியவில்லை, மேலும் தன் உறுதியான பணியைத் தொடர்ந்ததால் அவர்கள் நெருங்கி வந்தது அவனுக்குக் கேட்கவேயில்லை, அந்த ராட்சதக்குழியின் முனையில் அதன் கீழிருந்ததைப் பார்த்தபடி அவர்கள் அப்படியே நின்றிருந்தார்கள்.

அங்கே கீழே, குழியின் நடுவில், அவர்கள் ஒரு குதிரையைக் கண்டார்கள் — இயல்புருவின் அளவில், பூமியிலிருந்து வனைந்து — மேலும் அவர்கள்தான் அதை முதலில் பார்த்தார்கள், பூமியிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு குதிரை; பிறகு, இந்த இயல்புருவின் அளவிலான பூமியில்—வெட்டிய குதிரை தன் தலையை மேல்நோக்கி உயர்த்தியிருப்பதை, பக்கவாட்டில், பற்களைக் காட்டியபடி திமிறிக்கொண்டும் வாயில் நுரைத்தபடியும்; அச்சந்தரும் பலத்தோடு அது பாய்ந்து கொண்டிருந்தது, அதிவேகமாக, எங்கோ தப்பிச்செல்வதைப்போல; எனவே ஆகக் கடைசியில்தான் அவர்கள் இதை உள்வாங்கிக் கொண்டார்கள், கிரிகோரெஸ்கு ஒரு பெரிய பகுதியிலிருந்த களைகளை அழித்து இந்த அற்புதமான குழியைத் தோண்டியிருக்கிறான், ஆனால் அதன் நடுப்பகுதியில், அகோரமான அச்சத்தோடு ஓடிக்கொண்டிருக்கும் குதிரையிலிருந்து மணலை மட்டும் தனியாகப் பிரித்தகற்றும் வழிமுறையில்; ஏதோ அதைத் தோண்டி வெளியே எடுத்ததைப்போல, அவன் அதனை விடுவித்திருந்தான், பூமிக்குக் கீழிருந்த ஏதோவொன்றிடம் இருந்து தப்பி, நடுக்கத்தை

உண்டாக்கும் திகிலோடு ஓடிய இந்த இயல்புருவின் அளவிலான குதிரையை அவன் பார்வைக்குக் கொணர்ந்திருந்தான்.



பிரமித்து நிற்பவர்களாக அவர்கள் கிரிகோரெஸ்குவைப் பார்த்திருந்தார்கள், அவர்களுடைய இருப்பு குறித்து சற்றும் அறிந்திராதவனாக அவன் தன் பணியினைத் தொடர்ந்தான்.

அவன் பத்து நாட்களாகத் தோண்டிக் கொண்டிருக்கிறான், குழியின் பக்கத்தில் நின்று அவர்கள் தங்களுக்குள் நினைத்துக் கொண்டார்கள்.

அவன் விடியலிலும் காலையிலும் தோண்டிக் கொண்டிருந்திருக்கிறான், இத்தனை காலமும்.

யாரோவொருவரின் கால்களின் கீழே, பூமி நழுவியது, கிரிகோரெஸ்கு நிமிர்ந்து மேலே பார்த்தான். ஒரு கணம் தாமதித்து, தலையைக் குனிந்து, பணியினைத் தொடர்ந்தான்.

கலைஞர்கள் மன உளைச்சலை உணர்ந்தார்கள். யாராவது ஒருவர் ஏதாவது சொல்ல வேண்டும், அவர்கள் நினைத்தார்கள்.

அட்டகாசமாக உள்ளது, ஐயான், தணிவான தொனியில், பிரெஞ்சு ஓவியன் சொன்னான்.

கிரிகோரெஸ்கு மீண்டும் நிறுத்தினான், குழியில் இருந்து ஏணியின் வழியாக மேலேறி வந்தான், மண்வெட்டியில் இருந்த மணலை ஏற்கனவே அங்கே அந்த பணிக்கெனவே தயாராகக் கிடந்த மண்கிளறியைக் கொண்டு சுத்தம் செய்தான், கைக்குட்டையால் வியர்வை படிந்த தன் நெற்றியைத் துடைத்தான், பிறகு அவர்களை நோக்கி வந்தான்; தன்னுடைய கையின் மெதுவான, அகலமான அசைவால், அவன் மொத்த நிலப்பரப்பையும் சுட்டினான். இன்னும் அங்கே நிறைய இருக்கின்றன, அவன் மெல்லிய குரலில் சொன்னான்.

பிறகு தன் மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டான், ஏணியின் வழியே குழியின் அடிப்பகுதிக்குச் சென்று, தோண்டுவதைத் தொடர்ந்தான்.

மற்ற கலைஞர்கள் சற்றே தலையசைத்தபடி அங்கு நின்றிருந்தார்கள், பிறகு இறுதியாக முதன்மைக் கட்டிடத்தை நோக்கி மௌனமாகத் திரும்பி நடந்தார்கள். வழியனுப்புதல்கள் மட்டுமே இப்போது மீதமிருந்தன. இயக்குனர்கள் பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள், மேலும் பிறகு அதுதான் இறுதி மாலைப்பொழுது; மறுநாள் காலை முகாமின் வாயில்கள் மூடப்பட்டு விடும்; அதிகாரப்பூர்வமான பேருந்து ஒன்று நின்றது, மேலும், புக்கரெஸ்டில் இருந்தோ அல்லது ஹங்கேரியில் இருந்தோ மகிழுந்தில் வந்திருந்த சிலரும் முகாமை நீங்கிக் கிளம்பினார்கள்.

கிரிகோரெஸ்கு புதைமிதியடிகளை ஏற்பாட்டாளர்களிடம் திருப்பித் தந்தான், தன்னுடைய சொந்தக் காலணிகளை மீண்டும் அணிந்து கொண்டான், பிறகு அவர்களோடு சிறிது நேரம் இருந்தான். அதன் பிறகு முகாமிலிருந்து சில கிலோமீட்டர்கள் தொலைவில், ஒரு கிராமத்துக்கு அருகிலிருந்த சாலையின் வளைவில், அவன் திடீரென்று பேருந்து ஓட்டுனரை நிறுத்தச் சொன்னான், இங்கிருந்துதான் தனியாகப் போவதுதான் சரியாயிருக்கும் என்பதை உணர்த்தும் வகையில் எதையோ சொன்னான்.




ஆனால் அவன் சொன்னது யாருக்கும் தெளிவாகப் புரியவில்லை, ஏனெனில் அவனது குரல் அத்தனை செவிக்குப் புலப்படாததாக இருந்தது.

பேருந்து வளைவால் விழுங்கப்பட்டது, கிரிகோரெஸ்கு சாலையைக் கடக்கத் திரும்பினான், பிறகு கீழ்நோக்கிச் சென்ற பாம்புப்பாதையில் சட்டென்று மறைந்து போனான். நிலம் மட்டுமே மீதமிருந்தது, அமைதியான மலைத்தொடர்கள், மாபெரும் வெளியில் வீழ்ந்து கிடக்கும் உயிர்ப்பற்ற இலைகளால் மூடப்பட்ட தரை — எரியும் பூமிக்குக் கீழிருக்கும் அனைத்தையும் மறைத்து பொய்க்கோலம் காட்டும், ஒளித்து வைக்கும், பாதுகாக்கும் — எல்லைகளற்ற பெரும் பரப்பு.


குறிப்பு

*லாஸ்லோ கிரஸ்னஹோர்கய் (1954) — ஹங்கேரியைச் சேர்ந்தவர். ஐரோப்பிய பின்நவீனத்துவ அலையின் மிக முக்கியமான படைப்பாளியாகக் கருதப்படும் இவரது பெரும்பாலான எழுத்துகள் மனித வாழ்வின் வெறுமையையும் துயரத்தையும் பேசுகின்றன. லாஸ்லோவின் முதல் நாவலான சாத்தான் நடனம் புகழ்பெற்ற ஹங்கேரிய இயக்குனர் பெல்லா தாரால் திரைப்படமாக உருவாக்கப்பட்டுள்ளது. 2015—ஆம் ஆண்டுக்கான மேன் புக்கர் சர்வதேச விருதினை வென்றிருக்கிறார்.*

# அரசியல் விளையாட்டா

## உரிமை கீதம் பாடுவோம்

மனித உரிமைகள் எங்கிருந்து துவங்குகிறது? அவை அரசியல் சாசனம் மூலமாகவோ, மக்களவையிலிருந்தோ, நீதிமன்றங்கள் தீர்ப்பின் அடிப்படையிலோ பிறப்பதல்ல. அவை சிறு இடங்களில் வீடுகளில், தெருமுனைகளில் உணரப்படுபவை. அத்தகைய சிறு இடங்களில் உரிமைகள் காப்பாற்றப்படவில்லை என்றால், உலக அளவில் மனித உரிமை மீறல்கள் பற்றிய




விவாதம் பயனற்றது,' என்றார் மனித உரிமைகள் சாசனத்தை வடிவமைத்த எலினோர் ரூஸ்வெல்ட். அவர் அதைச் சொல்லியது 1948—ஆம் ஆண்டு. ஆனால் இன்றும் அதே நிலைதான். எனவே, மீண்டும் மீண்டும் அதை நினைவில் கொள்ள வேண்டியுள்ளது என்பதில் மாற்றம் இல்லை.



ஹியூமன் ரைட்ஸ் —மனித உரிமைகள் என்ற சொற்றொடரை 1831—ஆம் ஆண்டு வில்லியம் லாய்ட் காரிசன் என்பவர் “லிபரேட்டர்' என்ற தனது பத்திரிகையில் பயன்படுத்தினார். தாமஸ் பெய்ன், ஜான் லாக், ஹெகல் போன்ற ஐரோப்பிய சிந்தனையாளர்கள் மனித உரிமைகள் பற்றி விரிவாக எழுதி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தி, சாதாரண மக்களுக்கு ஏழ்மையிலிருந்து விடுதலை, வாழ்வாதாரம், அடிப்படை வசதி, சுதந்திரமாக வாழ அமைதியான சூழல் இவை அனைத்தையும் உறுதி செய்ய வேண்டும் என்று பிரிட்டன் சிந்தனையாளர் தாமஸ் பெய்ன் வலியுறுத்தியதைத் தொடர்ந்து, மனித உரிமைகளுக்கு சோஷலிஸ வடிவம் கிடைத்தது.

மனித உரிமைகள் மட்டுமின்றி எல்லா ஜீவராசிகளுக்கும் சம உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று உரிமைகள் பற்றிய மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் மஹாகவி சுப்பிரமணிய பாரதி. “எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு, நாம் எல்லோரும் சமம் என்பதுறுதியாச்சு' என்று குதூகலமாக சுதந்திரம் கிடைப்பதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே முழங்கினார்.

ஆனால் இன்றுவரை சமத்துவம் என்பது

# மனித உரிமை

ஆர்.நடராஜ்

உலகளவில் நிறைவேறாமலே இருக்கிறது. பொருளாதார முன்னேற்றம் எல்லா தரப்பினரையும் சென்றடையவில்லை.

“புத்தாயிரம் இலக்குகள் — “மில்லெனியம் கோல்ஸ்’ என்று ஓர் லட்சியத்தை ஐ.நா. சபை 2000—ஆம் ஆண்டு அறிவித்தது. உலக நாடுகள் 15 ஆண்டுகளில், அதாவது 2015—ஆம் ஆண்டுக்குள் எட்ட வேண்டிய பொருளாதார இலக்குகளை நிர்ணயித்தது.

ஏழ்மை— பசிப்பிணி ஒழித்தல், எல்லோருக்கும் அடிப்படைக் கல்வி, பாலியல் சமத்துவம், சிசு இறப்பு தவிர்த்தல், தாய்மார்கள் நலம் பேணுதல், எய்ட்ஸ், மலேரியா போன்ற கொடிய நோய்கள் ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற 7 முக்கிய இலக்குகள் குறிப்பிடப்பட்டன. இவற்றை அடைய உலக நாடுகள் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும் என்பது ஐ.நா.வின் முக்கிய அறிவுறுத்தல்.

இலக்குகள் இன்னும் முழுமையாக எட்டா நிலையிலேயே நிற்கின்றன. உள்நாட்டுக் கலவரங்கள், கொந்தளிப்பு, மதம் சார்ந்த பிரச்னைகள், பயங்கரவாதம் போன்ற பல தடைக் கற்கள் மனித உரிமைகளுக்கு குந்தகம் விளைவிக்கன்றன. இம்மாதிரி சூழலில் அதிகமாக பாதிக்கப் படுபவர்கள் பெண்கள், வயோதிகர், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள்.




1950—களில் டொமினிகன் குடியரசின் கொடுங்கோல் ஆட்சியாளன் ட்ரூஜில்லோவுக்கு எதிராகவும் மக்கள் நலனுக்காகவும் மிராபல் சகோதரிகள் நால்வர் போராடினர். நால்வரில் மூவர், 1960—ஆம் ஆண்டு நவ.25—ஆம் நாள் ஆட்சியாளர்களால் கொல்லப்பட்டனர். அவர்களது உயிர்த் தியாகத்தை கௌரவிக்கும் வகையில் நவ.25—ஆம் தேதியை பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினமாக ஐ.நா. 1999—இல் அறிவித்தது. நவ.25 முதல் டிச.10—ஆம் தேதி வரையிலான 16 நாட்கள் பெண் களுக்கு எதிரான வன்முறை விழிப்புணர்வு காலமாக ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது. அதன் முடிவில் டிச.10 சர்வதேச மனித உரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.





பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு உலக நாடுகளின் தலையாய கடமை. ஐ.நா.வின் அறிக்கைப்படி, 2005—லிருந்து 2016 வரை 87 நாடுகளிலிருந்து பெற்ற தகவலின்படி 15 வயதிலிருந்து 49 வயது வரை உள்ள பெண்களில் சுமார் 20% பேர் வன்முறைக்கு

ஆளாகினர் என்பது அதிர்ச்சியூட்டும் தகவல். இதில் பலர் உயிரிழந்தனர். இவ்வன்முறையில் ஈடுபடுவது பெரும்பாலும் உறவினர் அல்லது நெருக்கமானவர்.

இன்னொரு பிரச்னை ஆணவக் கொலைகள். பெண் சுதந்திரத்தை ஒடுக்கவும் ஆண் ஆதிக்கத்தை நிரூபிக்கவும் இத்தகைய கொலைகள். சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின் 16—ஆம் பிரிவின்படி ஆண், பெண் தமது விருப்பத்தின்படி மணமுடிக்க முழு சுதந்திரம் உண்டு. அந்த உரிமையை எவரும் பறிக்க முடியாது.

ஐ.நா. வழிகாட்டுதல்படி, இந்த ஆண்டு




விழிப்புணர்வின் மையக் கருத்து “எவரையும் ஆதரவற்று விட்டுவிடாதீர்கள், பெண்கள் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம்‘ என்பது.

அகதிகள், இயற்கைப் பேரிடர், பயங்கரவாத தாக்குதலில் சிக்கியவர்கள், போர் மூண்ட பகுதிகளில் வசிப்பவர்கள் இவர்கள்தான் அதிகமாக அவதியுறுகிறார்கள். அவர்களுக்கென பிரத்யேகமான கவனம் செலுத்த வேண்டும் என்பது இந்த விழிப்புணர்வு திட்டத்தின் நோக்கம்.

தேசிய குற்றவியல் ஆவணக் காப்பகத்தின் 2016—ஆம் ஆண்டு அறிக்கைப்படி பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன. பெண்களுக்குப் பாதுகாப்பற்ற நகர வரிசையில் தலைநகர் புது தில்லிக்கு முதலிடம். நாட்டில் பதிவான 3.39 லட்சம் வழக்குகளில்



33% புதுதில்லியில் நடந்தவை. அடுத்து மும்பை பெங்களூரு, ஹைதராபாத். சென்னை பாதுகாப்பான நகரமென்பதை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

சமத்துவம், நீதி, கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும்; அதற்கு எல்லோரும் உறுதியுடன் மனித உரிமைகளைப் பேண வேண்டும் என்று ஐ.நா.மனித உரிமை ஆணையம் தனது ஆண்டறிக்கையில் கூறியுள்ளது. மனித உரிமைகள் பிரகடனப் படுத்தப்பட்டு வரும் 2018—இல் 70 ஆண்டுகள் பூர்த்தியாகிறது. அதையொட்டி, உலகம் முழுவதும் மனித உரிமைகள் பற்றிய கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

மனித உரிமைகள் முழுமையாக சென்றடைவதற்குத் தடையாக இருப்பது ஏழ்மை, தரமான கல்வி இல்லாமை, சுகாதாரமற்ற சுற்றுச்சூழல் உள்ளிட்டவை. மூட நம்பிக்கைகளைத் தவிர்த்த தரமான கல்வி ஒன்றுதான் பகுத்து ஏற்கும் அறிவை வளர்க்கும். மதம் என்ற பெயரில் மதம் பிடித்து அலையும் சமூக விரோதிகள் வலையில் இளைய சமுதாயம் சிக்காமல் பாதுகாக்கும்.

ஐ.நா.சபை புத்தாயிரத்தில் வகுத்த வளர்ச்சி இலக்குகள் 2015 வரை ஓரளவு எட்டப்பட்டுள்ளன. ஆயினும் தடையில்லாமல் பேணக் கூடிய வளர்ச்சிப் பணிகள் 2030—ஆம் ஆண்டுக்குள் நிறைவேற வேண்டும் என்ற வகையில் 17 இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

சமூக நலன் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு ஏழ்மை ஒழிப்பு, தரமான கல்வி, சுத்தமான குடிநீர், சுற்றுச்சூழல், சமூக நீதி, வாழ்வாதாரம், மகளிர் மேம்பாடு, ஆழ்கடல் உயிரினப் பாதுகாப்பு போன்ற முக்கியப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முதன்மை இலக்குகள் பதினேழை வகைப்படுத்தி 169 செயல் குறிப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதில் விசேஷம் என்னவென்றால், வளர்ந்த நாடுகள்—வளரும் நாடுகள் என்ற பாகுபாடின்றி எல்லா


நாடுகளும் பரஸ்பர ஒற்றுமையோடு இலக்குகளை அடைய முற்பட வேண்டும் என்று ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது.


“தின்ன வரும் புலி தன்னையும்
அன்பொடு சிந்தையில் போற்றிடுவாய்’

— முண்டாசுக் கவிஞரின் ஆக்ரோஷமான அறிவுரை!

அதெப்படி? புலி பாய்ந்தால் ஓடத்தானே தோன்றும், சிந்திக்க நேரம் உண்டா!

எவ்வளவோ பிரச்னைகள் நம்மை எதிர்நோக்கி வருகின்றன. ஒவ்வொருவருக்கும் அவரவர் நிலையில் உரிமைகள் சார்ந்த சவால்கள் வரத்தான் செய்கின்றன. அதனால் துவண்டு ஓடக்கூடாது. எதிர்கொள்ள மன திடம் வேண்டும். இதை மனதில் இருத்தினால் எல்லா பிரச்னைகளும் கதிரவன் முன் பனிபோல கரையுமே!







சுதந்திரம் பெற்றுவிட்டதாக ஆடி, பள்ளு பாடிய கவிஞரின் தூர திருஷ்டியை வியக்காமல் இருக்க முடியாது. என்ன வைராக்கியம், தைரியம்! தின்னத் துடித்த ஒநாய் ஆங்கிலேய அரசைத் தன் எழுதுகோல் மூலம் எதிர்கொண்டானே தமிழ்க் கவிஞன். சோம்பிக்கிடந்த கிணற்றுத் தவளையாக பயந்திருந்த சமுதாயத்தை தட்டி எழுப்பினானே பாரதி !

சேவை, அர்ப்பணிப்பு, சுயக் கட்டுப்பாடு, விதிகளை மதித்தல் ஒவ்வொருவரிடமும் இருந்தால் நாடு வளமையடையும். முன்னேறிய நாடுகளில் இத்தகைய குணங்களைப் பார்க்கலாம். அதிகார துஷ்பிரயோகம், சுய லாபம், இன்பத்தில் திளைத்தல் பெருகினால் அழிவுப் பாதைதான். மனம் வளமாக இருக்க வேண்டும். நிலத்தில் உழுதால்தான் விளைச்சல் வரும்.

சுவாமி விவேகானந்தர் கூறுவார்:

“சமுதாயத்திற்கு மூன்று நிலைப்பாடுகள் அவசியம். ஒன்று — நல்லவைகளின் அழியா வலிமை; இரண்டு — பொறாமை, சந்தேகம், காழ்ப்புணர்ச்சி இல்லாமை; மூன்று— நன்மை செய்பவர்களுக்கு எல்லா உதவியும் நல்குதல்.’

எவ்வளவு உயர்ந்த கருத்துகள்! இம்மூன்றும் முழுமையாக இல்லாததால்தானே நாம் இவ்வளவு தூரம் பிரச்னைகளை சந்திக்கிறோம்!

நல்லெண்ணம் படைத்தவர்கள் சமுதாய பிரச்னைகளை அலசிப் புரட்டி விழிப்புணர்வையும் புரிதலையும் ஏற்படுத்த வேண்டும். இப்போது தேவை சிறுமையைக் கண்டு வெகுண்டெழுவது. அதே சமயம், நல்லியல்புகளை வளர்த்து அன்பு பாராட்டுவது. அப்போதுதான் உரிமை கீதம் சுதந்திர கீதமாக ஒலிக்கும்.

# தமிழ் 2017

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## January





## February




## March





## April




## May




## June




## July




## August





## September




## October




## November





## December





தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
happy new year
2018

# ஜனவரி




# பிப்ரவரி

அய் தமிழ் இந்த இதழோடு தன் ஆறாவது அகவையை நிறைவு செய்கிறது!



# மார்ச்







# ஏப்ரல்

# மே



# ஜூன்






# ஜூலை





# ஆகஸ்ட்




# செப்டம்பர்




# அக்டோபர்




# நவம்பர்




# டிசம்பர்


பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தமிழினம் ஒன்றுபட
பொங்குக பொங்கல்
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு


VARSHA™
2018
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY NEW YEAR
வாழ்த்துக்கள்

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡളി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा